Price 2 As 23rd AUGUST 1936 Regd. No. 2514

VOL. 7 NO. 30

சுதேசமித்திரன்

SWADESAMITRAN
ILLUSTRATED WEEKLY



ஹம்பியிலுள்ள பம்பாபதிகோயில்

வாரப்பதிப்பு

மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு
வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்
எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAN

ஸ்பெயின் நிலைமை

ஸ்பெயினில் சென்ற ஐந்து வாரகாலமாக கோரமான யுத்தம் நடந்து வருகிறது. சீக்கிரத்தில் அந்த யுத்தம் முடிவுறுமென்பதற்கான அறிகுறியெதுவும் காணப்படவில்லை. ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் எதிராளியைத் தோற்கடித்து வெற்றியடைந்து வருவதாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர் பர்காஸ்—ஸெவில்லி இவைகளிடையே ரயில்வே போக்குவரத்து ஏற்படுத்தி விட்டதாகக் கலகக்காரர்கள் தெரிவிக்கின்றனர். படாஜாஸ் நகரம் உள்பட படாஜாஸ் மாகாணம் இப்பொழுது கலகக்காரர் வசமிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சர்க்கார் அறிக்கை யொன்றின்படி இரணத்தாக்க வந்த கலகக்காரர்கள் ஆறுமணி நேரயுத்தத்திற்குப்பின் முறியடிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

ஸ்பானியக் கலகத் தலைவர்கள் இருவரும் சந்தித்துப் பேசியதாகச் செய்தி வெளியாகியிருக்கிறது. ஜெனரல் மோலா பர்காஸிலிருந்து ஒரு விமானத்தில் ஸெவில்லிக்குச் சென்று, ஜெனரல் பிராங்கோவுடன் நெடுநேரம் பேசியதாகச் சொல்லப்படுகிறது. மாட்ரிட்டை எவ்வாறு கைப்பற்றுவதென்பதுபற்றி அவர்கள் விவாதித்து, இறுதியில் அந்நகரத்தை முற்றுகைபோட்டு அங்குள்ளவர்கள் வெளியிடங்களுடன் போக்குவரத்து நடத்த முடியாமல் செய்வதே அந்நகரத்தைக் கைப்பற்றச் சிறந்த வழியென முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்பானியப் பிரபுக் குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் சாமான் ஏற்றிச் செல்லும் கப்பலொன்றின் அடிப்பாகத்தில் பிணையாளிகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனராம். அவர்களின் தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன் சர்க்கார் கோஷ்டியினர் மாட்ரிட் நகரில் சோதனை போட்டு பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர்களைக் கைதியாக்கி மற்றொரு கப்பலில் அடைத்துவைத்திருக்கின்றனராம்.

ஸ்பெயினில் சர்க்கார் துருப்புகள் சண்டைக்குத் தயாராகவிருக்கும் காட்சி.

மாட்ரிட்டிலுள்ள அந்நியர்கள் கூட்டம் கூட்டமாகவெளியேறி வருகின்றனர். இத்தாலியரின் நிலைமைதான் சங்கடமானதாக விருந்து வருவதாயும், ஏனெனில் அவர்கள் அரசியல் காரணங்களை முன்னிட்டு இத்தாலியிலிருந்து வெளியேறியவர்களென்றும், அவர்கள் திரும்பிச் செல்ல இஷ்டப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

ஸ்பெயின் விஷயத்தில் பிறர் தலையிடாதிருக்கும் விஷயமாக பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க.)

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
பிரபஞ்ச வர்த்தமானம்	1
இந்திய வர்த்தமானம்	2
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி	3
விநோதக்கொத்து	5
வண்டியைக்கட்டு (சிறுகதை)	6
சாந்திபுரக்கொலை (தொடர்கதை)	8
ஸங்கீதப்பகுதி	0
தென்னிந்தியப் பிரமுகர்கள்	13
தந்தாத்பேதம் அல்லது பல் முளைத்தல் (நோயற்ற வாழ்வு)	15
பழியோரிடம்-பாவமோரிடம் (ஹாஸ்யக்கதை)	23
நவநாகரீகம்	27
மகாபாரதம்	29
அதிசயம்-ஆனால் உண்மை	30
பண்டைக் காலத்துப் பள்ளிக் கூடங்கள்	31
மெட்ராஸ் காலிங் (சிறுவர் பகுதி)	35
சாஞ்சி ஸ்தூபங்கள் (சரித்திரப் பகுதி)	37
கண்ணோட்டம் - பிரமுகர்கள் (படங்கள்)	39

ஜோதிஷப் பலன்

ஒரு தசைக்கு மாதவாரிப் பலன் ரூ 3. அந்தர பலன் ரூ 6. ஆயுள் கணிதம் ரூ $3\frac{1}{2}$. உத்தியோக பாவம் ரூ $1\frac{1}{2}$. வீ. பி. செலவு தனி. ஜாதகநகலும் பிறந்த ஊரும் தேவை. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு ரூ. $1\frac{1}{4}$

வை. பிச்சு சாஸ்திரியார்
ஜோதிஷ கணிதர்
கெங்கைகுளத் தெரு,
வைதீஸ்வரன் கோவில்.

சூதக கோளாறுகள் தீர்ந்துவிட்டன!

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக வியாதிகளை வென்று சந்தான பாக்யத்தையடைந்தனர்.

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

(அபூர்வ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.)

சூதகக் கோளாறுகளை நீக்கி, மலட்டுப் பூச்சிகளைக் கொன்று, கருப்பைக்கு பலந்தந்து, சந்தான பாக்யத்தையளிக்கும் சிறந்த ஔஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது.

ஸெட் விலை ரூ. 5. விவரத்திற்கு எழுதவும்.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

இந்திய வர்த்தமானம்

கழுதைப் பெயர் தகராறு

ஒரு கழுதைக்கு அகமத் எனப் பெயர் வைத்ததால் ஹிஸ்ஸாரி (பஞ்சாப்)லுள்ள மிருக வைத்தியரான டாக்டர் ராம் கோபால் உயிரிழந்தார்.

பம்பாய் சமூகசேவை சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் தொழிற்சாலைப் பள்ளிக்கூடத்தில் இவ் வருஷம் தேறிய மாணவிகள்.

அவர் ஓர் மாத்தடியில் உட்கார்ந்திருந்தபோது ஒரு முஸ்லிம் ஓசைப்படாது வந்து அவரைக் கத்தியால் குத்தி விட்டதாயும் பிறகு போலீஸாரால் பிடிக்கப்பட்டபொழுது தீக்கதரிசியின் பெயரைக் கழுதைக்கு வைத்ததால் தான் டாக்டரைக் கொலை செய்ததாகவும் ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

—

திருச்சி தேர்தல் தகராறு

இத்தகராறு சம்பந்தமாக ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் காங்கிரஸிலிருந்து ராஜிநாமாச் செய்த விஷயம் வார்தாவில் காங்கிரஸ் தலைவர்களால் அந்தரங்கமாக ஆலோசிக்கப்பட்டது. இதைப்பற்றி பாபு ராஜேந்திர ப்ரஸாத் விசாரணை நடத்தக் காரியக் கமிட்டியால் அனுப்பப்படுவாரென்றும் அவர் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்து 15 தினங்களில் தமது யாதாஸ்தைச் சமர்ப்பிப்பாரென்றும் தெரிவதாகச் செய்தி வெளியாகியிருக்கிறது. விசாரணையை முன்னிட்டு ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரும் டாக்டர் ராஜனும் தங்கள் ராஜிநாமாக்களை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்படுவார்களாம். தமது இந்தியா சட்டசபை அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்து டாக்டர் ராஜன், ஸ்ரீமான் புலாபாய் தேசாய்க்கு அனுப்பியிருந்த கடிதத்திற்கு ஸ்ரீமான் தேசாய் பதிலெழுதியிருக்கிறார். அவர் திருச்சி தேர்தலுக்கும் இந்தியா சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கும் சம்பந்தமில்லையென்றும், விஷயம் பரிசீலனை செய்யப்படுமென்றும், எப்படியும் இந்தியா சட்டசபை இப்பொழுது கூடவிருப்பதால் ராஜிநாமாச் செய்வதற்கில்லையென்றும் அவர் ஸிம்லாக் கூட்டத்திற்கு வந்துதான் ஆகவேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

—

சுபாஷ் போஸ் எழுதிய புஸ்தகம்

"1920-ம் வருஷம் முதல் 1934-ம் வருஷம் வரை நடந்த இந்திய (சுதந்தர)ப் போராட்டம்" என்ற மகுடமிட்டு சுபாஷ் சந்திர போஸ் எழுதியுள்ள புத்தகம் கடற் சுங்கச் சட்டப்படி இந்தியாவுக்குள் வரக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருப்பினும் இதன் பிரதிகளில் சில கள்ளத்தனமாக டில்லிக்கு வந்திருப்பதாகப் போலீஸாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாயும், அதைக் கண்டுபிடிக்கப் போலீஸார் தீவிர முயற்சி செய்து வருவதாயும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது.

(40-ம் பக்கம் பார்க்க)

ஜோதிஷ மகுட வர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூ



மண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 2. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 5-க்கு அணு 12. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் N. ...

(ஜோதி...

'நீம் டூத் பேஸ்ட்" உங்கள் பற்களுக்கு வெண்மையும், சுத்தமும் அளிப்பது மட்டுமன்றி, ஈறுகளினின்றும் இரத்தம் பெருகுவதை நிறுத்தி, பயரியாவைத் தடுக்கிறது.





'Neem'
TOOTH·PASTE

பவுடர் வேண்டுமாயின் மார்கோ்பிரிஸ் பல் பவுடர் இருக்கிறது.

கல்கத்தா கெமிக்கல்

நாட்டு நடப்பு - சித்திரக்கண்ணாடி.

யார்க்ஷயருக்கருகிலுள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் ஒரு பெரிய விபத்து நேரிட்டது. அதில் 60 பேர் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனராம். அவர்களைக் காப்பாற்ற விபத்து இலாகா உத்தியோகஸ்தர்கள் புறப்படுகின்றனர்.

டரோடா திவான் ஸர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஜினிவாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். டம்பாயில் வழியனுப்பப்பட்ட காட்சி.



பிரபஞ்ச வர்த்தமானம்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

அதில் கூறப்பட்டிருப்பதாவது:—ஸ்பெயினில் பிறர் தலையிடாதிருப்பதுபற்றி பிரான்ஸ் வெளியிட்ட யோசனைக்கு பிரிட்டிஷ் சர்க்கார் பூரண ஆதரவளித்து வருகின்றனர். ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் யுத்த தளவாடங்களையும் ஆகாய விமானங்களையும் ஸ்பெயினுக்கனுப்புவதைத் தடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் தயாராயிருக்கின்றனர். இதற்கிடையில் கலகம் துவங்கியது முதற்கொண்டே, ஸ்பெயினுக்கு ஆயுதங்கள் அனுப்ப லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை.

இத்தாலியின் மனோபாவம் மட்டும் வேறு விதமாக விருப்பதாகத் தெரிகிறது. நடு நிலைமை ஒப்பந்தத்திற்கான சமரஸப்பேச்சை துரிதமாக நடத்தவேண்டிய அவசியமில்லை என்று இத்தாலியில் கருதப்படுகிறதாம்.

சென்னை பெரம்பூர் பாலெஸ் தியேட்டர் கட்டிடத்திலுள்ள இவ்வாழை மரம் படத்தில் கண்டபடி தார்விட்டிருக்கிறது.

ஆங்கிலோ—எகிப்திய ஒப்பந்தம்

ஆங்கிலோ—எகிப்திய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. இவ்வொப்பந்தத்தின் விவரம் இன்னும் உத்தியோக முறையில் வெளியிடப்படவில்லை. ஆனால் முக்கிய அம்சங்களைப்பற்றி லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பின் கண்டபடி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது:—

"பிரிட்டன் எகிப்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தபொழுது நான்கு பிரச்னைகளைப் பிறகு தன்னிஷ்டப்படி முடிவு செய்து கொள்வதற்காக நிறுத்திவைத்துக் கொண்டது. இப்பிரச்னைகளில் மூன்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுவிட்டது. இவைகளில் முதலாவது சாம்ராஜ்யப் போக்குவரத்துகளின் பந்தோபஸ்து. இரண்டாவது எகிப்தின் தற்காப்பு. மூன்றாவது ஸூடான் பிரச்னை.

இஸ்மெயிலியா பிரதேசத்தில் துருப்புகளுக்குத் தேவையான வாசஸ்தலங்கள் நிறுவப்பட்டபின் கெய்ரோவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளைக் கொஞ்சங் கொஞ்சமாக அங்கு அனுப்புவதென இவ்வொப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. எகிப்திலுள்ள விமானப்படையினரும் மற்ற துருப்புகளும் பயிற்சி பெறச் சிறந்த வசதிகள் அளிக்க எகிப்து சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். கால்வாய்ப் பிரதேசத்திற்கும் அலெக்ஸாண்ட்ரியாவுக்கும் தற்போதுள்ளதைவிடச் சிறந்த நேரடியான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கவும் அச்சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். எகிப்து தனது படைப் பலத்தைத் தன்னால் சாத்தியமானவரை பெருக்கிக்கொள்ளலாம். அப்படை மிகவும் சக்தி பெற்றதாக விளங்கப் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் உதவி செய்வர்.

இவ்வுடன்படிக்கையில் சர்வதேச சங்க உடன்படிக்கைக்கு உட்பட்ட முறையில் பல வருஷ காலம் அமுலிலிருக்கத்தக்க ஆங்கிலோ எகிப்து தற்காப்பு நேச ஒப்பந்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஸூடான் தற்காப்பில் எகிப்தியத் துருப்புகள் மீண்டும் கலந்து கொள்வர். சர்வதேசச் சங்கத்தில் தான் ஒரு அங்கத்தினராகும் பொருட்டு எகிப்து அனுப்பும் மனுவுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் பூரண ஆதரவு அளிப்பர்.

எகிப்திலுள்ள அந்நியப் பிரஜைகள் சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அந்நிய நாடுகளுக்கு விசேஷ உரிமைகள் அளிக்கும் முறையில் சில ஒப்பந்தங்கள் அமுலிலிருந்து வருகின்றன. அந் நாடுகளுடன் கலந்து யோசிக்காமலேயே அவைகளை ரத்து செய்ய, தனக்கு ஆதரவளிக்க வேண்டுமென எகிப்து வெளியிட்ட கோரிக்கையைப் பிரிட்டன் ஆதரிப்பதற்கில்லை. அந் நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டி, இவ்விஷயமாக ஒரு சமரசமான ஒப்பந்தம் விளைவிக்க எகிப்து முயற்சி செய்மாயின், அ[illegible]யற்சிக்கு [illegible] வளிப்பத[illegible] கொண்[illegible]

"என் குழந்தை என் இப்படிப் படுத்துகிறது?"

வலுவற்ற குழந்தைகளுக்கு வலுவூட்டவேண்டும்: டாக்டர்கள் சிபார்சு செய்யும் சிகிச்சை இதுதான்

குழந்தை எப்பொழுது பார்த்தாலும் அழுதுகொண்டேயிருந்தால் அதன் தேக நிலை சரியாயில்லை என்றுதான் அர்த்தம். பிடிவாதத்திற்கும், கோபத்திற்கும் இதுவே காரணமென டாக்டர்கள் சொல்கிறார்கள். குழந்தையின் ஆகாரத்தில் சத்துக்களில்லை. இவற்றை உடனே சரிசெய்யவேண்டும்.

இந்தத் துறையில் நீண்டகாலமாகப் பிரவித்தி பெற்றது ஸ்காட்ஸ் எமல்ஷன்.

பூராவும் பலவிருத்தி.

ஸ்காட்ஸ் எமல்ஷன் பூராவும் பலவிருத்தி யூட்டுவது. சாதாரண காட்லிவர் ஆயிலையும், இதர விட்டமின் Dக்களையும் சாப்பிட்டால் அதிகப்படியான கால்ஷியம் முதலியவற்றையும் உட்கொள்ளவேண்டும். பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, ஸ்காட்ஸ் எமல்ஷன் சிறந்த பலவிருத்தி ஔஷதம்; நோய்க்குப் பிறகு ஏற்படும் எல்லாவிதமான பலவீனத்திற்கும், இருமல் ஜலதோஷம், இன்புளுவென்சா முதலியவற்றிற்கும் இது சிறந்த பாதுகாப்பாகும்; 60 வருஷ புகழ்பெற்றது.

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள்:—

எலும்புக்கு வலுவூட்டும்
ஸ்காட்ஸ் எமல்ஷன்

—வெண்ணெய் அல்லது சுத்தப் பாலை விட, 80 மடங்கு அதிகப் பலனளிப்பது.

—முட்டையைவிட இருமடங்கு அதிகப் பலன் தருவது.

தேக வளர்ச்சிக்கு,

—வெண்ணெயைவிட 8 பங்கு அதிகப் பலன் தருவது.

—அன்னாசிப் பழத்தைவிட 100 பங்கு பலன்.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா
பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்
ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்.

ஒரு போக்கிரி டிராமாவுக்குப் போனன். தனக்கு முன்னல் உட்கார்ந்திருப்பவர் ஒருவர் தலை தனக்கு மறைப்பதைக்கண்டு, "ஓய்! முட்டாள்! தலையைக் குனி, ஐயா!" என்ருன். அந்த மனிதன் அப்பாவி. ஆனுலும் கோபம் வந்து திரும்பிப்பார்த்து, "யாரையை யாமுட்டாள் என்கிருய்? ஐந்து நிமிஷத்தில் நீ சொன்னதை வாபீஸ் வாங்கிக் கொள்ளாவிட்டால் பார்" என்ருர்.

போக்கிரி:—ஐந்து நிமிஷம் கழித்து என்ன பண்ணிவிடுவாய்?

அப்பாவி:-இன்னும் கொஞ்ச நாழி பார்ப்பேன்.

———

போட்டோக்காரன் (போட்டோவைத் தகப்பனுரிடம் கொடுத்துவிட்டு):—உங்கள் பிள்ளை போனவாரம் எடுத்துக் கொண்ட போட்டோ ஸார்!

தகப்பனுர்:—(போட்டோக்களை வாங்கிப்பார்த்துவிட்டு) அவன் மாதிரியே தான் இருக்கிறது. பேஷ்!

போட்டோக்காரன்:--அவர் இன்னும் பணம் கொடுக்கவில்லை.

தகப்பன்:—-அவன் மாதி[illegible] ...வும் இருக்கி[illegible]

கலிபோர்னியா யுவதிகள் கிளப்பைச் சார்ந்தவர்கள் புது தினுசான ஒரு சைகில் பந்தயத்தை ஆரம்பித்திருக்கின்றனர்! அவர்கள் ஆடவர்களுடன் பந்தயம்விடத் தயாராயிருப்பதைப் படத்தில் காண்க!

யாரோ அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்துவிட்டார்கள். வேகமாய்ப்போய்க்கொண்டிருந்த ரயில் வண்டி நின்றுவிட்டது. கார்டு இறங்கி வண்டி வண்டியாகப் பார்த்துக்கொண்டு வந்தார்.

ஒரு வண்டியிலிருந்து ஒரு வாலிபன், குறும்பாக "கார்டு ஸார், வண்டி எப்பொழுது புறப்படும்?" என்று கேட்டான்.

கார்டு, "இன்னும் அரை மணியாகும்" என்று சொல்லிவிட்டு, "ஏன்," என்ருர்.

வாலிபன், "எனக்கு இன்று மத்தியானம் கலியாணம்" என்ருர்

கார்டு அவனைச் சந்தேகத்துடன் பார்த்து, "நீர் அபாய அறிவிப்புச் சங்கிலியைஇழுக்கவில்லையே?" என்று கேட்டார்.

———

ஒரு ஹோட்டலில் ஒருவர் போய் காப்பிகேட்டார். ஹோட்டல் ஆள் காப்பி கொண்டுவந்து வைத்தான். அவர் அதைத் தூக்கிப்பார்த்தார். அதில் இரண்டு எறும்புகள் மிதந்துகொண்டிருந்தன. அவர் கோபமாக ஹோட்டல் ஆளைக்கூப்பிட்டு, "என்னுப்பா, இதில் இரண்டு எறும்பு மிதக்கிறதே" என்ருர். ஹோட்டல் ஆள் அதற்கு, "இரண்டு எறும்பு எத்தனை காபி ஸார் குடித்துவிடப்போகிறது?" என்ருன்.

———

ரயில் வண்டியில் ஒருவர் மிகவும் கூட்டமாய் இருப்பதைக் கண்டார். வண்டி வண்டியாகப் பார்த்துவிட்டு வந்து, கொஞ்சம் கூட்டம் குறைவாக இருந்த ஒரு வண்டியில் ஏறினர். அங்கே 7 பேர் உட்கார்ந்திருந்தனர். ஆனல் ஒருவர் மிகவும் தடியாயிருந்ததால் ஒரு பக்க ஸீட்டில் மூன்று பேர்தான் உட்கார்ந்திருந்தார்கள். உள்ளே வந்தவர் சற்றுப் பார்த்துவிட்டு, தடியாயிருந்தவனைப் பார்த்து "வண்டியல் எட்டுப்பேர் உட்கார வேண்டுமென்று சட்டம். கொஞ்சம் நகருங்கள்" என்ருர். உடனே அந்தத் தடி மனிதர், "என்னைப் போல் எட்டுப் பேர் என்ரு சட்டம்?" என்ருர்.

———

அசட்டு அம்பி:—அம்மா! இதோ பார் நீ ஸ்டாம்புக்குக் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொண்டுவந்து விட்டேன்.

அம்மா:—ஏண்டா கடிதாசியை தபாலில் ஸ்டாம்பு வாங்கி ஒட்டிப் போடவில்லையா?

அம்பி:—தபால் பெட்டிக்கருகில் ஒருவருமில்லை. யாரும் என்னைப் பார்க்கவில்லை என்று தெரிந்துகொண்டு இரகசியமாய் தலை ஒட்டாமல் போட்டுவிட்டேன்.

நரைமயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு. பி டி மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்

———

நவீன, சாஸ்திரபூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி

நமது சிறு கதை

“வண்டியைக் கட்டு”

—:[o]:—

“மணி”



ரப்பர் டயர் சக்கரங்களுடன் கூடிய புதிய பிரிட்டிஷ் ரயில் கார். இது ரக்பியில் பரீக்ஷிக்கப்பட்டது.

நீர்வளம் நிலவளம் நிறைந்தது என்று பழைய காலத்தில் பெயர் பெற்ற தஞ்சாவூர் ஜில்லாவில் காவிரியாற்றின் வடகரையில் சுவாமிமலை என்று ஒரு கிராமம் உளது. அங்கே ராஜு சாஸ்திரிகள் ஒரு பெரிய மிராசுதார். அவருக்கு ஆறு வேலி நிலங்களைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. ஆனால் குடும்பி; மிகச் சிரமப்பட்டு மரியாதையாகக் காலந்தள்ளி வந்தார்.

சாஸ்திரிகள் மஹா முன்கோபி. எவ்வளவு சிறிய காரியத்துக்கும் காரணமில்லாமல் கோபம் வந்துவிடும். சிண்டைத் தட்டி விட்டுக்கொண்டு யுத்தத்திற்கு ஆரம்பித்து விடுவார். யுத்தம் என்றால் மல்யுத்தம். வாய்ச் சண்டை ஒன்றுமில்லை. பொன்னன் என்னும் வேலைக்காரனைக் கூப்பிட்டு, “டேய்! வண்டியைக் கட்டு” என்பார். உடனே நாலு மைல் (கும்பகோணம்) சென்று தன் வக்கீலிடம் கலந்து, கோர்ட் மூலம் யுத்தம் தொடங்க முஸ்தீபுக்கள் செய்வார்.

வக்கீல் ஐயாவுக்குச்சாஸ்திரியாரிடம் வெகு நாளாய்ப் பரிசயம். வக்கீலுக்கு சாஸ்திரிகள் வழியாக ஒரு தம்பிடிகூட வரவு கிடையாது என்று தெரி...

...யும். முதல் நாள் “லொள்ளு, லொள்ளு” என்று காரியமில்லாமல் பேசிவிட்டு, மறு நாள் ‘நோட்டீஸ் கொடுக்கட்டும்மா?” என்றால், “தொலஞ்சு போறாண்டா! பிள்ளைகுட்டிக்காரன்” என்று சொல்லிவிடுவார். ஆகவே, சாஸ்திரியார் எது சொன்னாலும் காதில் அரைகுறையாகப் போட்டுக் கொண்டே, தன் மற்ற அலுவல்களில் முழுகியிருப்பார் வக்கீல்.

கோபமே அவ்தாரம். பக்கத்து வீட்டுக் குழந்தைகள் இரண்டு காகிதங்களைக் கிழித்து இவர் வாசலில் போட்டிருக்கும். அவ்வள்வுதான். “டேய்! வண்டியைக் கட்டு” என்பார். சாதாரணமாய் அதைச் சொன்னவுடனேயே அவருக்குக் கோபம் கொஞ்சங் கொஞ்சமாய்த் தணிய ஆரம்பித்துவிடும். ஆனால் வண்டி கட்டச் சொன்னால் கும்பகோணம் போய் வக்கீலிடம் விவரங்களைச் சொல்லாமலிருக்கமாட்டார். வக்கீலும் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு வீட்டிற்கனுப்பி விடுவார்.

எங்களூருக்கு இப்போது யாராவது வந்து ராஜு சாஸ்திரிகள் என்று விசாரித்தால் அநேகமாய் ஒருவருக்கும் தெரியாது. நாங்கள் அவருக்கு...

“வண்டியைக் கட்டு” என்றே நாமகரணம் செய்தாய்விட்டது. அப்பெயரால்தான் அவரைத்தொண்டுகிழம் (94 வயது) குப்புப் பாட்டி முதல் நேற்றுப் பிறந்த பேபி வரையில் எல்லோரும் குறிப்பது வழக்கமாகப் போய்விட்டது. அப்பெயர் சாஸ்திரிகள் காதில் ஒரு நாள் விழவே, “டேய்! வண்டியைக் கட்டு” என்று கத்தினார். ஆனால், என்னமோ தெரியவில்லை. அன்று அவர் வக்கீலைப் பார்க்கப் போகவில்லை. அதுவும் ஓர் அதிசயந்தான்.

சாஸ்திரிகள் வீட்டில் பழைய காலத்து மண் குதிர் (களஞ்சியம்) ஒன்று இருந்தது. அது அவர் குடும்பத்திலேயே வெகு காலமாய் இருந்து வந்ததினால் அவர் அதை மிக ஜாக்கிரதையாய் வைத்திருந்தார். இருபத்தி ஐந்து கலம் தாராளமாய்ப் பிடிக்கும். சுமார் ஏழடி உயரம் இருக்கும். பீப்பாய் போல இருபுறமும் குறுகி, நடுவில் வயறு பெருத்து, வாய் குறுகி இருந்தது. அதிலே தான் வீட்டிற்கு வேண்டிய அரிசியைச் சேகரித்து வைப்பது வழக்கம்.

அது மிகப் பழசாகவிருக்கிறதே என்று ஒரு நாள் சாஸ்திரியார், தலையில் முண்டாசை இறுக்கிக் கட்டிக்கொண்டு, இனாமல் வர்ணம் இரண்டு டின் வாங்கிவந்து, தன் கையினாலேயே அதன் மேல் பூசி, வெயிலில் உலர்வதற்காக வைத்துவிட்டு வயலுக்குப் போய்விட்டார். திரும்பி வரும்போது இருட்டிவிடவே, அதை அன்றிரவு அவர் கவனிக்கவில்லை. மறு நாள் காலை, அதைப் பழைய இடத்தில் எடுத்துவைக்கும்படி உத்தரவிட்டார். தன்னால் புதுப்பிக்கப்பட்டு பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் குதிரைக் கண்டு அகமகிழ்ந்தார் சாஸ்திரி.

ஆனால் அவர் மகிழ்ச்சி இரண்டு நிமிஷங்கூட நீடிக்கவில்லை. ஆள்கள் கையில் குதிர் இரண்டாகச் சரிபாதியில் விரிந்துபோய் மேல்மூடி கீழ் மூடியாக வந்துவிட்டது. அதைக் கண்டதும் வந்தது கோபம். “டேய்! வண்டி

ரூ. 500 இனாம்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானால்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபா...

SRI SW...

(34) Pan...

யைக் கட்டு'' என்றார். வக்கீல் உடைந்த குதிருக்குக் கோர்ட் மூலம் பரிகாரம் கிடையாது என்று சொல்லிவிடவே, வீட்டிற்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

இத்துடன் அதை விட்டுவிட அவருக்கு மனதில்லை. இக்காலத்துக் குதிர்கள் மாதிரி அதையும் இரண்டு மூடிகளாகவே வைத்துக்கொண்டு விடலாம். ஆனல் அதற்கும் அவர் மனம் சம்மதிக்கவில்லை. எப்படியாவது முன்னிருந்த மாதிரியே செய்துவிடணும் என்று விரும்பினர். இரண்டு வீசை மைதாமாவு வாங்கி, பசைகாய்ச்சி இரண்டு மூடிகளையும் பொருத்திப் பார்த்தார். ஆனல் அது ஒட்டவில்லை.

இதற்குள் அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த வண்டிக்காரப் பொன்னன் மேல் பாதியிலும் கீழ்ப்பாதியிலும் நேருக்கு நேராகச் சிறு துளைகள் போட்டுக் கம்பியினல் இறுக்கி முடுக்கி விடலாம் என்றான். அதுதான் சரி என்றார் சாஸ்திரிகள். ஒரு அங்குலத்திற்கு ஒரு துளையாக வெகு ஜாக்கிரதையாகத் துளைகள் போட்டாய்விட்டது. கம்பியை மாட்டி முடுக்கவேண்டியது தான்பாக்கி. வெளியில் மடக்கி முடுக்கினல் விகாரமாயிருக்கும் என்று பொன்னனைக் கீழ் மூடியில் உட்காரவைத்து அவன் மேல் மேல் மூடியைக் கவிழ்த்து, ஒவ்வொரு கம்பியாய் எடுத்துக் கொடுத்து முடுக்கச் சொன்னர் சாஸ்திரிகள். அப்பாடா! ஆய்விட்டது. தன் சாமர்த்தியமே சாமர்த்தியம் என்று ஒரு சபாஷ் போட்டுக் கொண்டார்.

பொன்னன் குதிரின் வயிற்றிலிருந்து வாய் வழியே வெளிவர யத்தனித்தான். தலையும் கழுத்தும் வெளியே வந்தது. ஆனல் உடம்பு வர மறுத்துவிட்டது. வாய் குறுகலாயிருந்தது.

சாஸ்திரிகள் "விளையாட்டு அப்புறம் ஆகட்டும். வாடா வெளியே. எனக்கு வேலையிருக்கிறது'' என்றார். பொன்னன் குதிருக்குள் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறான். இரண்டு நிமிஷத்தில் ராஜூ சாஸ்திரியாருக்குப் பிரமாதமாய்க் கோபம் வந்துவிட்டது.

"டேய்! வண்டியைக் கட்டு இவன் என் குதிரை விட்டு வெளியே வரமாட்டேன் என்கிறான்'' என்று கத்தினர். வண்டிக்காரப் பொன்னன் தான் குதிரில் இருக்கிறனே, யார் வண்டி கட்டுவது?

சற்றுக் கோபம் தணிந்த ... "என்னடா செய்யறது?'' ...ன்ர்.

... ...ராடைக் ...

...தட்டு வெளியிலே முடுக்கறேன்'' என்றான் பொன்னன்.

"சீ! வெளியிலே முடுக்கின நன்னாராதுடா! இருடா யாரையாவது கேட்போம்''

இதற்குள் சுவாமிமலை முழுவதும் அங்கே வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டது. பொன்னன் அன்று முழுவதும் குதிருக்குள்ளேயே இருந்தான். சாப்பாடும் அங்கேயே. வேடிக்கை பார்க்க வந்தவர்களோடெல்லாம் வார்த்தையாடிக்கொண்டே போது போக்கினன்...

இரவு எட்டு மணிக்கு அவன் மனைவி கோவிந்தம்மாள் கணவனைத் தேடிக்கொண்டு சாஸ்திரியார் வீடு சேர்ந்தாள். கூடத்திலிருந்த குதிரில் தடுக்கி விழுந்து, தற்செயலாய் அதையும் உருட்டிவிட்டாள். அதுவும் உருண்டுகொண்டே போய் முற்றத்தில் விழுந்து சுக்கு நூறாக உடைந்துவிட்டது. தன்மேல் பட்ட காயங்களைக்கூடக் கவனியாமல், முட்டையிலிருந்து வெளிப்பட்ட குஞ்சுபோல், வெளிவந்த பொன்னனின் சந்தோஷம் சொல்லிமுடியாது!

நல்ல வேளையாய் "வண்டியைக் கட்டு'' அச்சமயம் வீட்டிலில்லை. இருந்திருந்தால்!

(ஒரு இத்தாலியக் கதையைத் தழுவி எழுயது)

இந்தியா கவர்ன்மெண்டில் மெடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு, இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

(Sastriar in Govt. Medical dress)

வைத்தியரத்ன

யு. ராமநாத சாஸ்திரியாருடைய

மஹா

பில்வாதி லேகியம்.

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச்சிக்கல் இவைகளை உடனே கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலேன்ஸி ஸர் கே. வி. ரெட்டி நாயுடுகாரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

" வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்தற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருக்கிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்போக்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

"கிரயத்திற்குக் கிடைப்பதில் சிறந்தது"

மைசூர் ரவிக்கை துண்டுகள், மைசூர் கிரேப்புகள், மைசூர் சாடின்கள், சுத்தமான மைசூர் பட்டினல் செய்யப்பட்டது.

செயற்கைப்பட்டோ அல்லது அன்னிய நாட்டு நூலோ இதில் கலக்கவில்லை.

கவர்ன்மெண்டு பட்டு நெசவு தொழிற்சாலை,

மைசூரில் தயாரிக்கப்பட்டது.

UP TO DATE DESIGNS, MOST ECONOMICAL

MYSORE Silk Handkerchiefs

100% Swadeshi

Govt Silk Weaving Factory

MYSORE

நீங்கள் செலவிடும் பணத்திற்கு சிறந்த மதிப்பானது. ஒரு முறை பரீக்ஷித்து திருப்தியடையுங்கள்.

நமது தொடர் கதை.

சாந்திபுரக் கொலை

ஸ்ரீமான் பி.ஏ.இலட்சுமண முதலியார் F.C.R.A. எழுதியது.

(உரிமை ஆசிரியரது)

முன் கதைச் சுருக்கம்.

சாந்திபுரத்தில் முனியப்பிள்ளை என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ரகுபதி என்ற பிரபல வியாபாரி சிறை தண்டனை விதிக்கப்படுகிறார். ஆனால், உண்மைக் குற்றவாளிகள் ஒரு சமயம் ரகுபதிக்கு ஆசை நாயகியாக விருந்த கஸ்தூரியம்மாளும் மற்றொரு விஷயத்தில் ரகுபதி மீது பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றிருந்த வரதராஜுலுவும்.

ரகுபதி சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு அக்கரைச் சீமைக்குச் சென்று வியாபாரத்தில் ஏராளமான பொருளீட்டி சாந்திபுரத்திற்கடுத்த குமுதபுரத்தில் ஒரு பங்களாவில் தனது குமாரத்தி விஜய சுந்தரியுடன் வசித்து வருகிறார்.

கஸ்தூரியம்மாளும் தன் கணவன் இறந்த பிறகு தனது குமாரர்களான திருமேனியப்பன், மருதீசனுடன் குமுதபுரத்திலேயே வசித்து வருகிறாள். திருமேனியப்பனும் விஜயசுந்தரியும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் காதலிக்கின்றனர்.

ரகுபதி துப்பறியும் நிபுணரான தங்காஜீயுடன் முனியப்பிள்ளையைக் கொன்றவனைக் கண்டு பிடிப்பதில் ஈடுபடுகிறார். தன் தாயின் பழைய நடத்தை சில பழைய கடிதங்களிலிருந்து திருமேனியப்பனுக்குத் தெரிகிறது. அவளைப்பற்றிய சில சந்தேகங்களும் அவனுக்கு உண்டாகின்றன.

தங்காஜீயின் உதவியால் ரகுபதி வரதராஜுலுவைத் தெரிந்துகொள்கிறார். வரதராஜுலு வியாபாரத்தில் கைசளைத்த நிலைமையிலிருக்கிறார். வரதராஜுலுவுக்கு வெள்ளி வியாபாரம் செய்ய ரகுபதி 5 லக்ஷம் கொடுக்கிறார். அப்பொழுதே தனக்கு வேண்டியவரான வாஞ்சியநாதரிடமும் இரண்டு லக்ஷம் கொடுத்து வரதராஜுலுவுடன் போட்டிபோடச் செய்கிறார்.

வரதராஜுலு மேற்கொண்டு பணம் கேட்கிறார். ரகுபதி யோசித்துச் செய்வதாகச் சொல்லி தான் சாந்திபுரம் முனியப்பிள்ளை வீட்டில் குடியிருப்பதாயும் அங்கு குறிப்பிட்ட ஓரிரவு தன்னைச் சந்திக்கும் படியும் சொல்லி, வீட்டின் அடையாளங்களைச் சொல்லுகிறார். திகிலுடன் வரதராஜுலு வெளியேறுகிறார்.

குறிப்பிட்ட இரவு வரதராஜுலு ரகுபதியைச் சந்திக்கிறார். ஆனால் ரகுபதி அவரை மறுநாள் வரச்சொல்லிவிட்டுப் பிறகு தான் பணம் கொடுக்க முடியாதென்று செய்தியனுப்பி விடுகிறார். ஆனால் வரதராஜுலு மறு இரவு ரகுபதியின் வீட்டுக்குச் சென்று அவரைக் கத்தியால் குத்துகிறார். பிறகு கத்தியை உருவி அதைத் துடைக்கும் எண்ணத்துடன் நோக்கினபோது வரதராஜுலு தன்னையுமறியாது பயந்து ஓர் விதக் கூச்சலிடுகிறான். போலீஸ் கமிஷனர், ரகுபதி தங்காஜி, ஜவான்கள் முதலியோர் அவனைச் சூழ்ந்துகொள்ளுகின்றனர். வரதராஜுலு கத்தியால் தன்னைக் குத்திக்கொண்டு இறந்து போகிறான். ஆனால் அவன் இறப்பதற்குள் முனியப்பிள்ளையைக் கொன்றவன் தானேயென்று ஒப்புக்கொள்ளுகிறான்.

விஜயசுந்தரியும் திருமேனியப்பனும் சந்திக்கின்றனர். திருமேனியப்பன் தான் அவளை மணக்க முடியாதென்று சொல்லிவிட்டுப் பிரிகிறான். விஜயசுந்தரி கடுமையான ஜுரத்தால் பீடிக்கப்படுகிறாள். திருமேனியப்பன் தன் தாயைப்பற்றிய விஷயங்களை எல்லாம் அவளிடமே கூறிச் சமாதானம் கேட்கிறான்.

திருமேனியப்பன் தாய், முதலில் தான் செய்த குற்றங்களை மறுக்கப்பார்க்கிறாள். ஆனால், திருமேனியப்பன் ஒரு கடிதத்தை அவளிடம் காட்டிய பிறகு, ரகுபதியின் புகைப் படத்தைப் பற்றிய வரலாற்றை அவளிடம் சொல்லிய பிறகும், அவள் தான் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு மகனிடம் மன்னிப்புக் கேட்கிறாள். பிறகு கஸ்தூரியம்மாள் மூர்ச்சையாகிறாள். மூர்ச்சை தெளிந்து அவள் கண்களைத் திறக்கவும் திருமேனியப்பன் அவளை எறிட்டுப் பாராமல் அவ்விடம் விட்டுப் போகிறான். மருதீசன் அடுத்த அறையினுள்ளிலிருந்து மாதா-மகன் சம்வாதம் முழுவதையும் கேட்டிருந்தான். திருமேனியப்பன் லலிதா ஸதனத்திற்கு வருகிறாள். விஜய சுந்தரி படுத்த படுக்கையில் வெகு தூர்ப்பலமாய்க்கிடக்கிறாள். திருமேனியப்பன் அவளது கரங்களைப் பற்றிக்கொண்டு அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு கரங்களில் முத்தமிடுகிறான்.

திருமேனியப்பனுக்கும் அவன் தாய் கஸ்தூரியம்மாளுக்கும் நடந்த சம்வாதம் மருதீசன் காதில் விழுகிறது. தன் தமயின்மீது விஜய சுந்தரிக்கிருந்த காதலையும், தன் தாயின் குற்றத்தையும் முதன் முதலாக அவன் அறிகிறான். அவனுக்கு மனக்குழப்ப மேற்படுகிறது. குமாரர்களின் அன்பை இழந்தவளான கஸ்தூரியம்மாள் ஊரை அன்ன ஆகாரமின்றி படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். ஊரை விட்டுப் போன திருமேனிக்குச் செய்தி அனுப்பப்பட்டு அவன் வருகிறான். தாயின் நிலையைக் குறித்து இருவரும் துக்கத்திலாழ்

ஒரு மணி நேரங்கழிந்தது. சகோதரரிருவரும் அறையை விட்டுப் போகவில்லை. கடைசியாக நோயாளியும் கண்களைத் திறந்தாள். குமாரர்களிருவரும் தாயின் இரு பக்கங்களிலும் சென்று அவளிரு கரங்களையும் பற்றிக்கொண்டனர். தன் கரங்கள் பிடிபட்டிருப்பதையாவது தன் பக்கங்களில் தன் குமாரர்களிருப்பதையாவது உணராதவள்போல் தனக்கு நேரேயுள்ள இடைவெளியில் நோக்கினாள். மருதீசனும் திருமேனியப்பனும் தாங்கள் பற்றியிருந்த, பலவீனத்தால் துவண்டு வெளுத்திருந்த, அவள் கரங்களைத் தாழ்த்தினர். அப்பொழுதும் அவள் அவர்களை நோக்கவில்லை.

நெடிது நேரத்திற்குப் பிறகு அவள் விரல்கள் சற்று அசைந்தன. சிறிது நேரத்திற்குப் பின் தன் குமாரர்களை நோக்கினாள்.

"திருமேனி! என் செல்வத் திருமேனி!..." என்று மிகத் தாழ்ந்த குரலில் முனகினாள். அவள் முதல் எண்ணம் இளையவனைப் பற்றியே யிருந்தது; முதலில் பேசினதும் அவனிடமே.

சந்தேகமின்றி, அந்த ஒரு தலைப் பட்சத்தாலல்லவா தன் மூத்த குமாரனிடம் அவனுக்குரிய அன்பைச் செலுத்த முடியாது போயிற்றென்றும் அதனால் சற்று முன்பே நான் எவ்வளவு மனத்துயரடையவேண்டியிருந்ததென்றும் அவள் அறிவாள். ஆகையால் அவள் உடனே தன்னைத் திருத்திக்கொண்டு,

"மருதீசா, என் செல்வ!... நீ எவ்வளவு நல்ல பிள்ளை!..." என்று கூறி முடித்தாள்.

அவள் மிகுதியும் பலவீனமுற்றிருந்ததால் அச்சில மொழிகளும் அவளுக்குக் களைப்பை உண்டாக்கின.

மிகச் சிரமத்துடன் சுவாசம் விட்டுக்கொண்டிருந்தாள்.

"என் செல்வங்களே! எனக்கு அந்தியகாலம் நெருங்கிவிட்டது. இனி நான் அதிகநேரம் ஜீவிக்க முடியாதெனத் தெரிகிறது" என்று நோயாளி கூறினாள்.

விஜய்சுந்தரி கர்ப்பவதியாயிருந்து சில மாதங்களில் அழகில் இணை பெயர் சூட்

"இதோ நான் வைத்தியர் அப்பாசாமிப் பண்டிதரை அழைத்து வருகிறேன்" என்று கூறியவண்ணம் மருதீசன் எழுந்தான்.

"வேண்டாம்; வீண் வேலை வேண்டாம்; வைத்தியனால் ஒன்றுஞ் செய்ய முடியாது. மிஞ்சிவிட்டது" என்று நோயாளி நிராசையுடன் மொழிந்தாள்.

பிறகு சற்றுநேரம் இளைப்பாறிவிட்டு, "ஆனால்......நான் சாவதற்குமுன்......என் செல்வக் குமாரர்களே...நீங்களிருவரும் என்னை மன்னிக்க விரும்புகிறேன்........ உங்களுடைய வெறுப்புடன் நான் [illegible] மடைய [illegible] மன்னிக்க [illegible]

என்று மிக உருக்கமான குரலில் மொழிந்தாள்.

“அம்மா, நாங்கள் உங்களை மன்னிக்கிறோம்” என்று இருவரும் ஏகமனதாய் மொழிந்தனர்.

அவள் கண்களில் அப்போது ஓர்வித ஒளி பிரகாசித்தது.

“என் அருமைக் குமாரர்களே, நீங்கள் நன்று யிருப்பீர்கள்...கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்...” என்று தாய் கூறும்போது குமாரர்களிருவரும் அவள் படுக்கையின் இரு புறங்களிலும் முழங்காலில் நின்று தங்கள் சிரசைக் கட்டிலின் பக்கத்தில் சாய்த்துக் கொண்டு தங்கள் தாய் இறந்து நான் நிம்மதியாய் உயிர்விட முடியாது. அவரைப் பாராமல் அவர் என்னிடம் பேசாமுன்-அவரும் என்னை மன்னிக்கு முன் என் உயிர்போகாது...

“இதோ நானே போய் அவரைக் கையோடு அழைத்து வருகிறேன்” என்று கூறி திருமேனியப்பன் எழுந்தான்.

“நல்லது. முதலாக அவரை அழைத்து வாருங்கள்; சீக்கிரம்; தாமதிக்கமுடியாது. அவர் வரும்வரையிலும் என் உயிர் இருக்குமோவெனப் பயப்படுகிறேன். ‘நான் சகலமும் மறந்துவிட்டேன்’ என்று அவர் சொல்லக் கேட்காமல் நான் இறந்தாலும் என் இருதயம் வேகாது” என்று தாய் மிக

யற்றதோர் ஆண்மகவைப் பெற்றாள் அக்குழந்தைக்கு மருதீசன் எனப்டப்பட்டது.

விட்டதுபோல் கடவுளை நோக்கித் தோத்தரித்தனர்.

“ஆனால் என் செல்வங்களே! அது மட்டுமல்ல......உங்கள் மன்னிப்பு எனக்கு மிகவும் அருமையானதுதான். ஆனால் எனக்கு இன்னொருவர் மன்னிப்பும் வேண்டும்......” என்று நோயாளி கெஞ்சினாள்.

அவளது கருத்தை அவர்கள் உணர்ந்தனர். ஆனால் அதனை இன்னதென அவர்களே கூறத் துணியவில்லை.

“நான் எவரைப்பற்றிக் கூறுகிறேனென்று உங்களுக்குத் தெரியுமென நம்புகிறேன்” என்று தாய் வினவினாள்.

“தெரியும் என குமாரர்கள் [illegible]லுசைத்தனர் [illegible] [illegible]வண்டும்; [illegible]லாவிடில் வும் துக்கத்துடனும் படபடப்புடனும் புகன்றாள்.

திருமேனியப்பன் சிறிதும் காலதாமதமின்றி லலிதா ஸதனத்தை யடைந்தான். அவனது முகத்திற் காணப்பட்ட அகோர பார்வையைக்கொண்டே ஞானவிலாசத்தில் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேணுமென ரகுபதி கவலையுற்றார்.

திருமேனியப்பன் எவ்வித அனுவசியமொழியுமின்றி “என் தாயாருக்கு உயிர் போகிறது! தங்களை உடனே பார்க்க விரும்புகிறார்கள். தயவு செய்யுங்கள்!” என்றுமட்டும், மிகப் பீதியுடன் கூவினான்.

“ஐயோ பாவம்!” என்று ரகுபதி முணு முணுத்துக் கொண்டார். பிள்ளைகளுக்கும் தாய்க்கும் என்ன கஷ்டமான

அடுத்தவாரம்

ஜம்புலிங்கத்தின்

திருவிளையாடல்கள்

என்ற புதிய தொடர்கதை

ஆரம்பமாகிறது

சம்வாதம் நடந்திருக்க வேணுமென்றும் அதனால் அந்த நிர்ப்பாக்கியத் தாயின் நிலை எவ்வாறாயிருக்க வேணுமென்றும் நினைக்க ரகுபதியின் மனம் இளகிற்று. கடந்ததெல்லாம் மறந்தார். அவள் மேலிருந்த கோபத்தையும் பகைமையையும்அறவே மறந்தார். மன்னிப்பைக் கேட்க விரும்பும் ஸ்திரீயின் எண்ணத்திற்கிணங்க உடனே திருமேனியப்பனுடன் புறப்பட்டார்.

திருமேனியப்பன் வெளியிலிருந்த அச்சிறு நேரம், குற்றமுள்ள நோயாளிக்கு ஓர் பெருங் கற்பகாலம் போலிருந்தது. அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் களைமேலிட்டு நோயாளி கண்களை மூடிக் கொண்டாள்.

சற்று களை தெளியவும் மரணாவஸ்தைகள் அவளை வாதிக்கத் தொடங்கின. இடையிடையே நிராசையும் அவளை வதைத்தது.

மரணாவஸ்தைப்படுவதோடு நில்லாமல் மனக்கவலையும் நோயாளியை அதிகமாகத் துன்புறுத்துவதால் அந்த அவஸ்தையைக் குறைப்பதற்காக ஓர் பொய் கூறுவது நலமென்றே மருதீசன் கருதி,

“அம்மா! அம்மா! நான் அவர்களைப் பார்த்தேன்...... அதோ ஓடிவருகிறார்கள்...” என்று கூறினான்.

அவளுக்கப்போது பேசுஞ் சக்தி அடங்கிவிட்டது. ஆனாலும் ஸ்மரணை அற்றுப்போகவில்லை. அவள் விரல்கள் குமாரனது கையை அழுத்திப்பிடித்தன. விரக்தியடைந்த பார்வை வாசலை நோக்கிய வண்ணமிருந்தது.

கற்பகாலம் போன்ற சில நிமிடங்கள் கழிந்தன. பயங்கரமானதோர் வலிப்பு நோயாளிக்கு உண்டாயிற்று.

—மருதீசா! திருமேனி! திருமேனி!... என்று கஸ்தூரியம்மாள் மெல்ல மொழிந்தாள். அவள் பார்வை தன் அருங் குமாரர்களை நாடிற்று...மருதீசனது கண்களில் அமர்ந்தது, பிறகு அணைந்தது!

கதவுகள் படீரெனத் திறந்தன. அறைக்குள் இருவர் அதிவேகமாய்ப் பாய்ந்தனர்.

ஆனால்...

கஸ்தூரியம்மாள் கவலைநீங்கி விண்ணுலகடைந்தனள்!

அதிகாரம் 31.

பொங்கும் மங்களம்

தனது அன்பன் அருகிலிருக்கிறானென்ற திருப்தியே விஜயசுந்தரிக்குக் கைதேர்ந்த வைத்தியர்கள் செய்யக் கூடிய சிகிச்சையெல்லாவற்றையும்விட மேலான கைகண்ட குணத்தைத் தந்தது.

நாளடைவில் அவள் தேகநிலை மிகவும் திருப்திகரமாய் குணமடைந்து வந்தது. சந்தோஷம் அவள் முகத்தில் வரய்பின்றி நடனமாடிற்று. ஆனால், திருமேனியப்பன் தன் பக்கத்திலிருக்குங் காலையில், காலஞ் சென்ற அவன் தாயின் ஞாபகத்தால் அவன் முகம் மாறபடும்போதெல்லாம் அவள் சந்திரவதனமும் அத்துக்கத்தைப் பிரதிபலிக்கும்.

கஸ்தூரியம்மாள் அந்தரங்கத்தில் தனக்காகப் பரிதாபங் கொண்டிருந்தாள் என்ற உண்மையை விஜயசுந்தரி அறிந்தாள்.

காதலர்களின் திருமணம் வைகாசிமீ 21வ யன்று நடத்தப்படுவதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது.

கஸ்தூரியம்மாள் மரணத்திற்கும் இக்கலியாணத்திற்கும் இடையில் நடந்ததோர் சம்பவத்தைஇங்கு குறிப்பிடவேண்டியது அவசியம். அத்துடன் நமது கதையும் முடிவடையும்.

கஸ்தூரியம்மாளுடைய சகல கருமக் கிரியைகளும் முடிந்து சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு மருதீசன் அக்கரைக்குச் செல்ல நிச்சயித்திருப்பதாகத் தன் இளையவனிடம் தெரிவித்தான். சகோதரன் இவ்விதம் திடீரெனத் தீர்மானித்ததின் நோக்கத்தைப்பற்றி திருமேனியப்பன் அறிய எவ்வளவு முயன்றும் அவையாவும் பயனற்றதாயின.

விஜயசுந்தரியின் மீது தனக்குள்ள காதலைப்பற்றித் தன் தம்பியிடம் கூறி, அவனுடைய சந்தோஷத்திற்கு ஓர் இடறு

(12-ம் பக்கம் பார்க்க)

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி, 286, எஸ்பிளனேட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்.]

ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பி.ஏ. எழுதியது

I

பல்லவி

மரசே வாடனு? ராம! நின்னு! மதனஜனக! (மரசே)

அனுபல்லவி

மரகதாங்க! நீ யொக்க மதி னென்ஸவலது, (மரசே)

சரணம்

காணிமானவுலு கருணலேக நாபை
லேனி நேரமு லெஞ்சின காணி, ஸ்ரீ நிஜமுக
நா சென்த ஜேரினகாணி, ராணி நீ தய;
த்யாக ராஜநுத!

II

மதன ஜனக, ராம, நின்னு மரசே வாடனு?	—மன்மதனைப் பெற்றவரே! ராமா நான் உம்மை மறக்கிறவனு?
மரகத அங்க, நீ யொக்க மதின் என்ஸ வலது	—மரகதத்தைப்போன்ற தேஹகாந்தியுள்ள உன் மனதில் இதை நினைக்கக் கூடாது.
காணி மானவுலு	—எனக்கு வேண்டாதவர்கள்
கருண லேக	—இரக்கமில்லாமல்
நாபை, லேனி நேரமு எஞ்சின காணி	—என்னிடத்தில் உண்மையில்லாத குற்றங்களைச் சுமற்றினலும்
ஸ்ரீ நிஜமுக நா சென்த, ஜேரினகாணி	—ஐச்வர்ய தேவதையான லக்ஷ்மி உண்மையாக என்னிடத்தில் வந்தாலும்
த்யாகராஜநுத!	—த்யாகராஜன் புகழும் ராம!
ராணி நீ தய மரசே வாடனு	—இப்பொழுது என்னிடத்தில் உனக்கு வாராத உன் தயை முன்பு வந்ததை மறப்பேனு?

III

தன மீதனே, முதலிய கீர்த்தனங்களிலும் இதைப்போல ஸ்வாமிகள் தன் அனுபவத்தை வெளியிடுகிறர். ராமனுடைய கிருபை யுண்டாவதும், மறைவதும், ரகுவீரனுடைய குற்றமல்ல. ஸ்வாமிகளின் குற்றமே, கிருபை மறைந்தபொழுது அவர் துக்கப்படுவதைக் கண்டு பிறர் அதற்குப் பல காரணங்களைக் கற்பித்தார்கள். அவர் செய்யாத பாபங்களைச் செய்ததாகச் சொல்லி குற்றஞ்சாட்டி, அதையே காரணமாக எடுத்துக்காட்டினர்கள். அவர்களைக் காணிமான'வுலு' யென்கிறர். அவ்வளவு கஷ்டப்படும் என்னைப் பார்த்தும், (கருணலேக) இரக்கமில்லை என்கிறர்.

உண்மையான காரணங்கள் கிடைக்காமல் இல்லாதவைகளை (லேனிநேரமுலு)க் கற்பிக்கிறர்களென்கிறர். அந்தக் கஷ்ட திசையிலும் ஸ்வாமிகள், தன்னிடத்தில் ராமன் அதற்குமுன் காட்டின கருணையை மறக்கவில்லை. பாக்ய தேவதையான மஹாலக்ஷ்மியே, உண்மையாக ஸ்வாமிகளைத் தேடிவந்து, உனக்கு வேண்டியதை எல்லாம் தருகிறேனென்கிறள். அப்பொழுதும் ஐச்வர்யத்தால் மதங்கொண்டு, ராமனையும் அவருடைய கிருபையையும் மறந்து, "இவை யாவும் என் ஸாமர்த்யத்தாலல்லவா கிடைத்ததென்று எண்ணமாட்டார். எல்லாம் ராமனுடைய கிருபையேயென்று அவரை அதிக பக்தியுடன் கொண்டாடுவார்.

மரசே வாடனு:—மனஸா, ஸ்ரீராமசந்த்ருனி மரவகே, மரவகரா நவமன்மதரூபிணி முதலிய கீர்த்தனங்களைப் பார்க்க.

மதன ஜனக:—ருக்மணிப் பிராட்டி, கண்ணனுக்கு எழுதிய கடிதத்தில், முதலாவது ச்லோகத்தில், "கண்ணனுடைய அழகை வர்ணிக்கிறர்." ரூபம் கிரிசாம் திருசிமதாம் அகிலார்த்தலாபம்"—கண்களைப் படைத்தவர்களுடைய கண்கள் ஸகல புருஷார்த்தங்களையும் அடைய விரும்பினல், கண்ணனுடைய திருமேனியின் ஸௌந்தர்யத்தைக் கண்டால் போதுமென்கிறள்.

"அரங்கனைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணுவே, 'அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணுவை' 'காணுதார் கண்டுனெல்லாம் கண்ணல்ல, கண்டாமே யென்று ஆழ்வாராதிகளும் திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஈடுபட்டார்களன்றே?

கம்பநாட்டாழ்வாரும்; "தோள்கண்டார் தோளே கண்டாரெ"ன்றுரே. வால்மீகி மஹரிஷியும் "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்"—புருஷர்களின் கண்ணையும் கருத்தையும் கொள்ளைகொள்ளு மென்று ராகவனுடைய ஸௌலாவண்யத்தை வர்ணித்தாரன்றே? கோடி மன்மத லாவண்யன், ஸாக்ஷான் மன்மத மன்மத:, 'மார கோடி ஸௌந்தர்ய' வெ... கவனிக்கலாம்,

(12

Broadcast

வெகு நேரம் பாடும்

வெகு அருமையாகப் பாடும்

பொது ஜனங்களால் ப்ரத்யேகமாய் கொண்டாடி விரும்பப்படுகிற
நவீன ஸங்கீதக் கச்சேரியை யொத்த
ரிகார்டுகள்

செம்பை வைத்தியநாத பாகவதர்



R. T. 4081

{ சிவசிவ எனருதா —காமவர்தனி
{ நின்னுசெப்பக —மாந்தாரி

G. T. 4058—G. T. 4057
R. T. 4003 & R. T. 4002

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை

R. 4059

{ ராமா நீ பைதனக்கு —கேதாரம்
{ மதுரா நகரிலோ —ஆ பைரவி

R. 4060—R. 4006—&—R. 4004

மதுரை மிஸ் சுப்புலக்ஷ்மி



G. R. 2383 { சந்திரனே ஸ்வதந்திரனே —விந்து பைரவி
{ தாயே ஏழைபால் —பைரவி

B. T. 2337—B. G. 2351—B. G. 2352
B. G. 2068 & B. T. 2047

மிஸ் எம். எஸ். விஜயாள்

B. G. 2342 { பெண்ணாய்ப் பிறந்தாலும் —ஸி. பைரவி
{ என்னேரம் பார்த்தாலும் —ஹரிகாம்போதி

B. 2027—B. T. 2099 & B. T. 2349

ஸ்வாமி பாகவதர்

B. T. 2067

{ பாலகோபால —பைரவி
{ பாகம் 1 & 2

ஸ்ரீமதி கொச்சம்மாள்

R. 4061

{ ப்ரோசேவாரு எவருரா —கமாஸ்
{ அனுதினமுனு —பியாகடா

R. 4060 — R. 4000
&

ருக்மணி கலியாணம் செட்

தி மியூஸிகல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்,

167, மவுண்ட் ரோட், மதராஸ்.

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை. ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற் குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பினங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜேம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்.

சாந்திபுரக்கொலை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லாயிருக்க மூத்தவன் விரும்பவில்லை. ஆகையால் மருதீசன் இரகசியத்துடன் பிரயாணமானன்.

அதிகாரம் 32

என்னே இவ்வுலகம்!

திருமேனியப்பனுக்கும் விஜய சுந்தரியம்மாளுக்கும் குறித்த தினத்தில் விவாகம் சிறப்பாக நடந்தேறிற்று.

முகூர்த்தத்திற்குச் சற்று முன்னதாக திருமேனியப்பனுக்குத் தன் சகோதரனிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அக்கடிதத்தைக் காணவும் அவன் கண்களில் நீர் ததும்பிற்று.

இக்கலியாண தினத்தன்றே அநேகமாக அம் முகூர்த்த வேளையிலேயே அக்கரையில் மருதீசன் மரணவஸ்தையிலிருந்தான். எவ்வித சிகிச்சையும் அவன் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லை. தற்கொலை புரிந்து கொள்ளவும் விரும்பாமல் அவன் 52 நாளாக உண்ணுவிரத மனுஷ்டித்து இந்த நிலையையடைந்தான்.

கடைசியாக முகத்தில் புன்னகையுடன், தன் இனிய தாய் நாட்டிற்கு வெகு தொலையிலுள்ள அன்னிய நாட்டில் நண்பர்களாவது உறவினராவது ஒருவரும் அருகிலில்லாத நிலையில், தன் உயிரைக் கவர்ந்த விஜய சுந்தரியின் இனிய முகத்தைக் கடைசி முறையாகத் தன் அகக் கண்களுக்கு முன் தரிசித்த வண்ணம் மருதீசன் உயிர் துறந்து ஐயன் திருவடி யடைந்தான். உயிர் நீங்குந்தருவாயில் அவன் அருகில் ஒருவரிருந்தால்:

" "விஜயா! திருமேனி! நான் உங்களை எவ்வளவு நேசித்தேன்!"

என்று அவன் கூறயத்தனிப்பதாக அவன் முகக்கண்ணுடியில் நன்கு கண்டிருக்கலாம்.

அனேகமாய் அதே நேரத்தில் பிராம்மணோத்தமர்கள் முன்னிலையில் திருமேனியப்பன் தன் மாதா பிதாக்களையும் ஆதி முதலையும் மனதில் தியானித்த வண்ணம் பொன்னுற் செய்த புலிப்பல்தாலியை விஜயசுந்தரியம்மாள் கழுத்திற சூட்டினன்.

அக்கரையில் மூத்தவன் அநாதையாய் மரணவஸ்தையிலிருக்கிறுன்.

இக்கரையில் இளையவன் தன் காதலி விஜயசுந்தரியுடன் சர்வாலங்காரத்துடன் கலியாண மணையில், தன்னுடன் வீற்றிருக்கும் காதலி தவிர வேறென்றையும்பற்றிச் சற்றும் கவலையில்லாதவனுய் ஆனந்த பரவசத்திலாழ்ந்திருக்கிறுன்.

ரகுபதியோ,—தன் ஆயுளின் பெரும் பாகம் துன்பத்தில் நசுங்குண்ட ரகுபதியோ—தன் கடந்த துக்கமெல்லாம் மறைந்து, எவர் பொருட்டுத் தான் இவ்வளவு துக்கத்தையும் அநுபவித்தாரோ அப்புதல்வி—ஏக புதல்வி, தன் ஆசைக் காதலனுடன் இன்புற்று வீற்றிருப்பதையே கண்ணுல் பருகிய வண்ணம் அசைவற்று அமர்ந்திருந்தார்.

என்னே இவ்வுலகம்!

மருதீசன் மரணச் செய்தி அவன் இறந்த ஒருவருஷத்திற்குப் பிறகுதான் திருமேனியப்பனுக்குத் தெரியவந்தது.

அச்செய்தி திருமேனியப்பனுக்கும் விஜய சுந்தரிக்கும் மிகவும் துக்கத்தைத் தந்தது.

அக்காலத்தில் விஜயசுந்தரி கர்ப்பவதியா யிருந்து சில மாதங்களில் அழகில் இணையற்றதோர் ஆண் மகவைப் பெற்றுள்.

அக் குழந்தைக்கு மருதீசன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

இவ்விதமே மாண்டவர்கள் திரும்பவும் நம்முடன் இவ்வுலகில் என்றும் அழிவில்லாமல் வசித்து வருகின்றனர்.

(முற்றிற்று.)

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

மரகதாங்க:—தொண்டரடிப்பொடியாழ்வாரும் "பச்சைமா மலைபோல் மேனி" யென்றுர்; ஸ்வாமிகளும், மரகத மணி வர்ண, ஸுரபதி நீல மணி நிபதனுவுதோ (இந்த்ரநீல ரத்னத்தைப் போன்ற தேஹத்தையுடையவர். நன்னு பாலிம்ப என்ற கீர்த்தனம்) என்று வற்புறுத்துகிறுர்.

கானி மானவுலு:—இங்கே, நாதுபை பலிகெதருவென்ற கீர்த்தனத்தின் தாத்பர்யத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளலாம், புவினி தாஸுடனே யென்ற கீர்த்தனத்தின் சரணத்தில், "எனக்கு விசேஷ ஸௌக்யம் நேர்ந்தாலும், கஷ்டம் நேர்ந்தாலும். வருத்தப்பட்டேனு வே'ன்கிறுர்.

ஸ்ரீ:—காளிதாஸ மஹா கவியும், சாகுந்தலத்தில் "லக்ஷ்மியை ப்ரார்த்திக்கிறவன், அவளுடைய கிருபையை அடைவானே, அடையமாட்டானேவென்று சொல்லமுடியாது. அந்த லக்ஷ்மியே அவனை விரும்பித் தேடி வந்தால், அவளால் அவன் அடையப்படாமலிருக்கமுடியுமோ" வென்கிறுர்.

ராணி:—ராமனுடைய தயை கிடைக்காவிட்டாலும், அவரை மறப்போமென்ற எண்ணம் மாத்ரம் ஸ்வாமிகளுக்கு வராது முன்பு ராமனுடைய தயை கிடைத்த ஞாபகம் அவருக்குப் பரமானந்தத்தைக் கொடுக்கும். இனிமேல் எப்பொழுதாவது கிடைக்குமென்ற ஆசை அதை ஆவலுடன் எதிர்பார்க்கச் செய்யும்.

IV

கேதாரம் ஆதி

(29-வது மேள ஜன்யம். ஆ. ஸமகமபநிஸ் அவ. ஸநிபமகரிஸ.)

பல்லவி

ம ர சே வா ட ணு	ரா ம	ந்ன் னு
பா மா கா, ரி ஸா ; ஸா ஸநி	நிப பஸ ஸா ;	ஸாமா காமா
ம த ன	ஜ ன க	
கமபநி பமகரி ஸரிஸநிபா ;	ஸா ஸா மகாரி	ரீ, ஸ ஸா ;

அனுபல்லவி

ம ர க தாங்	க நீ	யொக் க
பா ; மபமா மககரி ஸா ;	கமபம- பாஸ்ா	ம்க்ரி ஸ்நி பநிஸ்
ம தி னென்	ஸ	வ ல து
பா ; ஸ்நிபா பமகம-பா நீ	பாஸ்ா-ஸ்நிபா	பம கம பாமா

சரணம்

கா னி மா ன வு லு	க ரு ண லே	க நா பை
பா மா கா, ரி ரீ மக ஸா ;	ஸா ஸா ஸநி ஸரி	கரி ரீ மக ஸா
லே னி நே ர மு	லெஞ் சி ன	கா னி
காமா பாநீ நிஸ்ாநி நிப பம	மகரிஸ நிப நிஸ	மகாரி ஸா ;
ஸ்ரீ நி ஜ மு க நா	செந் த ஜே	ரி ன கா னி
கா ; மா பா ஸ்ஸ் நிப நீஸ்ா	ஸ்ரிக்ரி ஸ்ா ஸ்நி	பநி ஸ்நி ஸ்ா ; ஸ்ா ;
நி ஜ மு க	த்யா க ரா	ஜ நு த
[illegible] காமா பாநீ	பஸ்ா ஸ்நிப பம	கம பநி பமகம

தென்னிந்தியப் பிரமுகர்கள்

நவாப் மோஷின்-உல்-முல்க்

(1837—1907)

(கே. எஸ். ஆர்.)

ஹைதராபாத் சமஸ்தானத்திலும், பொதுவாக முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திலும் விசேஷ அக்கரை கொண்டு உழைத்து வந்தவர் காலஞ்சென்ற நவாப் மோஷின்-உல்-முல்க் ஆவார்.

இப்பெரியார் வெகுகாலம் ஸர் ஸையது அஹமதுவின் வலது கைபோலவிருந்து, தமது ஜாதியினரின் அபிவிருத்தியையே என்றும் பிரதானமாகக் கருதிவந்தார். தற்போது முஸ்லிம்கள் அனுபவித்துவரும் லாபங்கள் பூராவும் இவர்களுடைய முயற்சிகளாலும் ஆரம்ப உழைப்பினாலும்தான் என்பது திண்ணம். நவாப் மோஷின்-உல்-முல்க்கின் வாழ்க்கையிலிருந்து நாம் அநேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். இப் பெரியார் மிகவும் எளிய நிலைமையிலிருந்து உன்னத பதவிகளுக்கு உயர்ந்தவர். இப்பெரியாரிடம் காணப்பட்ட அரிய குணங்களாகிய விடா முயற்சியும் நன்னடத்தையும் இவா வாழ்வில் சோபிப்பதற்கு உதவின.

லேடி மிண்டோ சமீபத்தில் வெளியிட்டுள்ள "மிண்டோ-மார்லி கீழ் இந்தியா" எனும் சிறந்த புத்தகத்தில் நவாபைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்; இதில் அவருடைய குணவிசயங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன. அதாவது நவாப், ஒரு சமயம் ராஜப்பிரதிநிதியைப் பேட்டி பார்க்கப் போனாராம். திரும்புகையில் விருத்தரான நவாப் முதலில் நாற்காலிமீதும் பின்பு ஸ்கிரீன் மீதும் தடுமாறி விழவிருந்தாராம். உடனே மிண்டோ கதவைத் திறக்கும் பாவனையாக முன் வந்தாராம். இதனால் மிகுந்த சந்தோஷமுற்ற நவாப், வழியில் வெளியே இருந்த கர்னல் டன்லப் ஸ்மித் என்பாரிடம் மிண்டோ பிரபுவைப்பற்றி "அவர் ஒரு பாதுஷா (அதாவது சக்ரவர்த்தி). என்னைப்போன்றஒரு எளியனிடத்தில எனக்குத் தெரிந்தவரையில அவர் மாதிரி வேறு ஒரு வைஸ்ராயும் நடந்துகொண்டதில்லை" என்று சொன்னாராம். இது தவிர நவாப், மிண்டோ பிரபுவிடம் விசேஷநம்பிக்கை கொண்டிருந்தார். இவரைப்பற்றி பின் வருமாறு லேடி மிண்டோ எழுதுகிறார் "அவருக்கு மேனாட்டு வித்யாப்யாஸம் கிடையாது; ஆயினும் ஹைதராபாத்தில் சிறந்த நிர்வாக ஸ்தானங்களுக்கு அவர் உயர்ந்தவர். பெரிய அந்தஸ்தில் இருக்கும் முஸ்லிம்களிடம் ஸ்வபாவிகமாகக் காணப்படும் ஆட்சித் திறமையை அவர் தம்மிடம் விசேஷமாக வளர்த்துவைத்திருந்தவர். பரந்த ராஜரீகமான பாதையின்மூலம் முஸ்லிம்களின் முன்னேற்றத்தைத் தொடர்வதையே தமது வாழ்க்கையின்கடமையாகக்கொண்டிருந்த ஸர் ஸையது அஹமதுகானை இவர் பின்பற்றுபவராக எங்கும் பிரசித்தமாகி விட்டது. சமீபத்தில் வைஸ்ராயைக் காணவந்த முஸ்லிம் தூதுக் கோஷ்டிக்கு இவர்தான் காரணஸ்தர் ஆவார்" மேற் குறிப்பிக்கப்பட்டவை இந்தியா கவர்ன்மெண்டாரிடம் இவருக்கிருந்த சலுகையை ஒருவாறு கோஷிக்கின்றது!

ஸையது பேதி ஆலி (நவாப் போஷின்-உல்-முல்க்) டோவா என்னுமிடத்தில் 1837-ம் வருஷம் டிசம்பர் மாதம் 9-ம் தேதியன்று பிறந்தார். இவரது பிதாவின் பெயர் மீர் ஜமீன் ஆலி என்பது. இவரது பெற்றோர்கள் மிகவும் எளிய ஸ்திதியில் இருந்தனர். ஆனால் இவர்களது குடும்பம் பெருமை பொருந்தியது. கஷ்ட நிலையில் இருந்த போதிலும் இவருக்கு சரியான வித்யாப்யாஸம் அளிக்க முயற்சிகள் தொடரப்பட்டன. பெர்ஸியன், அரபிப் பாஷைகள் முதலில் இவருக்கு வீட்டிலேயே கற்றுக்கொடுக்கப்பட்டன. விஷயங்களைத் தெரிந்துகொள்கையில் வெளியான இவரது புத்திகூர்மையும் ஊக்கமும்தான் பின்பு இவரை இவரது பிதா எடாவிற்கு சமீபத்தில் உள்ள பாபண்ட் எனுமிடத்தில் இருந்து வந்த மௌலானா இராயத் ஹுஸேன் என்ற பிரபல அறிஞரிடம் இவரை அனுப்புவதற்குக் காரணங்களாயின இங்கு நன்கு படித்து, விஷயங்கள் யாவையும் இவர் சரியாகக் கிரஹித்துக் கொண்டார். இதுபற்றி பலருக்கும் இவரிடம் விசேஷ மதிப்பு ஏற்படலாயிற்று.

ஆனால் சீக்கிரத்தில் இவர் தமது வித்யாப்யாஸத்தை முடித்து விடவேண்டியது அவசியமாகியது; ஜீவியத்தைப் பற்றிய யோசனைபெரிதும் எழும்பியது. ஆகையால் இவர் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் சர்விஸில் மாதம் 10 ரூபாய்ச் சம்பளத்தில் குமாஸ்தா பதவி ஏற்றுக்கொண்டார். இது இவரைப்பற்றிப் பெரிய மனக்கோட்டைகள் கட்டிவந்த பெற்றோர்களுக்கு மிகுந்த வருத்தத்தை விளைவித்தது.



10,000 பிரிட்டிஷ் துருப்புகள் பிரிட்டிஷ் படம் ஒன்றில் நடிக்கின்றனர்.

வலவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம

கிருஷ்ணராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

மருந்து வியாபாரிகள், சைனாபஜார் ரோட், மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

இருந்தபோதிலும் பேதி ஆலி இதனால் மனஞ்சலிக்கவில்லை. 1857-ல் இவர் "அஹல்மாத்" ஆக உயர்த்தப்பட்டார். சிப்பாய்ச்கலகத்தின்போது இவர் பிரிட்டிஷார் கக்ஷியில் ராஜபக்தியுடன் இருந்தார். கலகத்திற்குப் பின்பு பேஷ்காராகவும், அப்புறம் சிரஸ்ததாராகவும் இவர் நியமிக்கப்பட்டார். 1861-ல் இவர் டேவாதாசில்தாராக நியமிக்கப்பட்டார். அவ்வூரில் காணப்படும் சிறந்த மாளிகைகளையும் இதர வசதிகளையும் கட்டுவதில் இவர் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டார். கிரிமினல், ரெவினியூ சட்டங்களைப்பற்றி இவர் இரண்டு புஸ்தகங்களும் எழுதினார்.

மிஸ்டர் ஹியூம் இவரது நிர்வாகத்திறனைப் பெரிதும் பாராட்டியதுண்டு. 1863-ல் இவர் டிபுடி கலெக்டர் பரீக்ஷைக்கு, ஐரோப்பியர்கள்சிலருடன் ஆஜரானார்; தேறியவர்களுள் முதல் ஸ்தானம் இவருக்கு அளிக்கப்பட்டது. 1867-ல் இவர் நிரந்தர டிபுடி கலெக்டராக ஆக்கப்பட்டு, மிர்ஸாபூருக்கு அனுப்பப்பட்டார். வழக்கம்போல் இவர் நடந்துகொண்டார்.

இதே காலத்தில் இவரது புகழ் எங்கும் பரவிவிட்டது. இவரிடம் முதலாவது ஸர் ஸாலர் ஜங்கு ஆகர்ஷிக்கப்பட்டார். ஸர்ஸாலர் ஜங்கு திறமை வாய்ந்த உத்தியோகஸ்தர்களைத் தமது ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு வரவழைத்துக் கொள்ளவல்ல சக்தியை அடைந்திருந்தவர். ஆகவே, பேதி ஆலி, ஹைதராபாத் பிரதம மந்திரியின் வேண்டுதலுக்கிணங்கி 1874-ல் அந்த சமஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார். இதற்குப் பின்பு இவரது திறமை விஸ்தரித்து சோபிப்பது சாத்தியமாகியது. முதலில் இவர் ரெவினியூ இலாகா இன்ஸ்பெக்டர் ஜனரலாக நியமிக்கப்பட்டார். பின்பு இவர் கீழ் செடில்மெண்ட், சர்வே இலாகாக்கள் ஒப்புவிக்கப்பட்டன. இவ்விரண்டு அலுவல்களில் இவருக்கு நன்மதிப்பு மேலதிகாரிகளிடமிருந்து கிடைத்தது. இவர் குடிவாரத்தை ஊர்ஜிதப்படுத்தி எல்லாப் பூமிகளுக்கும் சரியான விகிதங்களைத் தீர்வை செய்துவைத்தார். 1886-ல் வங்காளக் கவர்னரான ஸர் ஸ்டுவர்ட்டு பெய்லி இவரது செய்கைகளைப் பாராட்டி இவருக்கு எழுதினார். அந்த சமஸ்தானத்தில் இவர் பெர்ஸிய பாஷைக்குப் பதிலாக உருது பாஷைக்குப் பிரதான ஸ்தானத்தை வாங்கிக் கொடுத்தார். அங்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட சட்டங்களும் இவரது திறமையைக் கோஷிக்கின்றன. தாம் எண்ணியிருந்த சில சட்டங்களுக்குப் பூர்த்தியை விளைவிப்பதற்காக இவர் ஜஸ்டிஸ் ஸையது மாமுதை அங்கு வரவழைத்தார். பின்பு ஸர் ஸாலர் ஜங்க் இவரைத் தமது ரெவினியூ காரியதரிசியாக நியமித்துக்கொண்டார். இவர் இக்காலத்தில் அவருக்கு உதவியதுமல்லாமல், அவரது பரிபூரண நம்பிக்கைக்கும் பாத்திரரானார். 1884-ல் இவர் பொக்கிஷம், அரசியல் ஆகிய இலாகாக்களின் காரியதரிசியாக, 2800 ரூபாய்கள் மாத சம்பளத்துடன் நியமிக்கப்பட்டார். இவர் அந்த சமஸ்தானத்திற்குச் செய்த சேவையைப் பாராட்ட இவருக்கு நிஜாம் மன்னர் "நவாஸ் ஜங் மோஷின் உத் தௌலா மோஷின் உல்முல்க்" என்ற பட்டத்தை அளித்தார். இதுமுதற்கொண்டு இவரது சொந்தப் பெயர் மறைந்து, மோஷின் உல்முல்க் என்ற பெயர் இவருக்கு எங்கும் பரவி பிரபலமாகி விட்டது.

பின்னர் லண்டனில் ஒரு ஸ்பெஷல் கமிட்டி முன்பு, ஸர் தார் திலிர்ஜங் வழக்கு விஷயமாக ஆஜராக இவர் நிஜாமினால் அனுப்பப்பட்டார்; இது சம்பந்தமாக அநேக ரகஸியங்கள் இருந்தன. இவர் லண்டனில் சாமர்த்தியத்துடனும் தாரதம்மியத்துடனும் நடந்து கொண்டது பற்றியும், நிஜாம் தம்மிடம் வைத்திருந்த நம்பிக்கையைப்பாதுகாத்தது பற்றியும் நிஜாமிற்கு இவரிடம் அபார ப்ரீதியும் மதிப்பும் ஏற்பட்டன. அங்கிருந்தபோது இவர் அநேகம் ஆங்கிலேயர்களைப் பேட்டிகண்டார்.

முக்கியமாக இங்கிலாந்து பிரதம மந்திரி மிஸ்டர் கிளாட்ஸ்டன் இவரிடம் திருப்தியுள்ளவராகி இவருக்கு அடிக்கடி கடிதம் எழுதிவந்தார். இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின்பு 1893-ம் வருஷம் வரையில் இவர் ஹைதராபாத்தில் இருந்தார். அப்புறம் சில காரணங்கள் பற்றி இவர் பென்ஷனுடன் சமஸ்தானத்தைவிட்டு வெளியேறிவிட்டார். அந்த சமஸ்தானத்தில் சில கக்ஷிகள் ஏற்பட்டு, இவரைப் பற்றி சில துர்ப்பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டபடியால் இவர் அங்கிருந்து விலகிவிட்டார். இதனால் சமஸ்தானத்திற்குப் பெருத்த தீங்கு விளைந்தது.

ஹைதராபாத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் அகில இந்திய முஸ்லிம் இயக்கத்திற்கு லாபகரமாக முடிந்தது. பின்பு இவர் அலிகாரில் தங்கலானார். 1863-ம் ஆண்டிலிருந்தே இவர் முஸ்லிம் முன்னேற்றத்தில் சிரத்தைகொண்டுவந்தார். அப்போது "பைபிள்" கிரந்தத்திற்கு ஸர் ஸையது

சித்தன்
மாதாந்திர
வைத்தியப் பத்திரிகை
வருடசந்தா அணா 0—8—0
"சித்தன்" பழனி.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமேடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

சரசமான விலை! பகட்டுக்கு குறைவு இல்லை!

டால்வீசும்

பர்மா அவுத்த பையா கல்

SIZE Nc. 1	நூறுகல்லுக்கு	ரூ. 300
,, ,, 2	நூறு கல்லுக்கு	ரூ. 200
,, ,, 3	நூறு கல்லுக்கு	ரூ. 150
,, ,, 4	நூறு கல்லுக்கு	ரூ. 135
,, ,, 5	நூறு கல்லுக்கு	ரூ. 125
6-லிருந்து 10 வரை	நூறு கல்லுக்கு	ரூ. 115

இந்த பர்மா அவுத்த பையா கல் அசல் வைரங்களுக்கு இரண்டாவதாக ஒப்பிடக்கூடியது. கல் பரிசோதனை செய்யக்கூடியவர்களையும் பிரமிக்கச் செய்யும்படியான அவ்வளவு பள பளப்பும், கலரும், பட்டையும் இதற்கு அமைந்திருக்கிறது.

இந்த ஜாப்தாவில் குறிக்கப்பட்டுள்ள விலைகள் சொற்ப லாபத்துடன் ரொக்கத்திற்கு விற்கப்படும். இந்த அவுத்த பையா கல்லானது மற்ற எல்லா கற்களையும்விட அதிக மேலானதும் குன்றாத ஜோதியும் மாறாத நிறமும் வாய்ந்த உயர்வான ரகங்களாகும். அரத்திற்கும் நெருப்பிற்கும் எண்ணெய்க்கும் திராவகத்திற்கும் திறமான உத்திரவாதம் அளிக்கப்படும். மேலே காண்பிக்கப்பட்டுள்ள அளவுகளை விட பெரிய அளவுகளிலும் கல்லுகள் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.

பர்மா அவுத்த பையா கல் வியாபாரம்:—மொத்தத்திலும் சில்லரையிலும் விற்கப்படும்.

ஜே. எச். டோரஸ், 313, மங்கமாரி வீதி, இரங்கூன்.

அஹமது ஒரு வியாக்கியானத்தை வெளியிட்டார். இது முஸ்லிம் "வைதீகர்"களால் கண்டிக்கப்பட்டது. அப்போது இவரும் அதைக் கண்டித்தார். பின்பு ஒரு சமயம் இவர் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அது முதற்கொண்டு இவருக்கு அவரிடம் மதிப்பு ஏற்படலாயிற்று; நட்பும் வளரலாயிற்று. அவருக்கும் இவரிடம் நன்மரியாதை இருந்தது. ஆகையால் இவ்விருவரும் ஒருவருக்கொருவர் உபயோகமாக உழைக்கலாயினர். ஸர் ஸையது அஹமதின் காரியங்களுக்காக இவர் தமது தேகசிரமத்தையாவது, பணச் செலவையாவது, ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை. ஷம்ஸ்-உல்-உலேமா அல்டாப் ஹுஸேன் ஹாலி எழுதியிருக்கும் ஸர் ஸையதின் ஜீவிய சரித்திரத்திலிருந்து இவரது உதவியினுல்தான் அவர் தமது காரியங்களைச் சாதித்துக்கொண்டார் என்பது தெளிவாகின்றது.

1870-ல் ஸர் ஸையது அஹமது "டாஜிபுல் அக்லாக்" என்ற சமூகச் சீர்திருத்தப் பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகை மூலம் முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களுக்குள் சீர்திருத்தம் கொணரப்பட்டது. இது தவிர இதன் மூலம் உருது இலக்கியம் நன்கு வளரலாயிற்று. சமூகச் சீர்திருத்தங்களைச் செய்வதில் அநேக கஷ்டநிஷ்டூரங்கள் அந்நாளில் இருந்தன. சாதாரணமாக ஜனங்கள் தங்களது கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் திடீரென்று மாற்றிக்கொள்வதை ஒருபோதும் விரும்பியதில்லை. இவ்விஷயமாக நவாப் மோஷின் உல்முல்க் எழுதிய வியாசங்கள் இதற்கு மிகுந்த உதவி புரிந்தன. ஆகவே உருது இலக்கிய வளர்ச்சியில் இவருக்கு முக்கிய ஸ்தானம் நிச்சயம். இவர் கிரந்தங்கள் எழுதியதில்லை. "அய்யட் பய்யனுட்" என்ற ஒரு புத்தகம் மட்டும் தான் இவரால் எழுதப்பட்டது. இப்புத்தகம் இஸ்லாம் மத விவாதங்களைப் பற்றினதாகும். இதில் இவர் தமது விஸ்தார ஞானத்தைக் காட்டியுள்ளார். இவ்வாறு மதவிஷயமான கிரந்தங்களை எழுதுவதை இவர் மேற்கொண்டிருந்தால் இவர் நிகரற்ற ஆசிரியராக இந்நாட்டில் சோபித்திருக்கக்கூடும்; ஆனுல் இவரது இதர அலுவல்கள் இதற்கு இடம் கொடுக்கவில்லை. இவரது அபிப்பிராயப்படி அநேக புத்தகங்கள் உருது பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன.

அலிகாரில் தங்க வாரம்பித்த தினம் முதற்கொண்டே இவர் அங்கிருந்த கலாசாலையில் விசேஷ அக்கரை கொண்டு முஸ்லிம் மாணவர்களின் கட்டுப்பிவிருத்தியில் இவருக்கிருந்த ஆர்வம் சிறப்பானது. கலாசாலை மாணவர்களிடம் இவர் சகஜமாகப் பழகிவந்ததுமல்லாமல் அவர்களுடைய சங்கங்களிலும் விசேஷப பங்கு எடுத்து வந்தார். இந்த அலிகார் இயக்கத்திற்கு இவர் மஹம்மதிய கல்விச்சங்கத்தின் மூலம் புத்துணர்ச்சி அளித்து வந்தார். 1890-ல் முதன் முதலாக அலஹாபாத்தில் நடந்த ஐந்தாவது கல்வி மஹா நாட்டில் இவா பிரசங்கம் புரிந்து, தமது நாவன்மையையும் காட்டினுர். இம் மஹா நாட்டில் இவர் இரு முறை தலைமை வஹித்தார். ஸர் ஸையது அஹமதின் மரத்ணதிற்குப் பிறகு இச் சங்கத்திற்கு இவர் உதவினுர். கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய விடங்களுக்கும் இவர் இதைப் பரவ வைத்தார். இதற்கு எங்கும் ஆதரவு கிடைக்குமாறு இவர் செய்தார். மத சம்பந்தமாக இவர் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை; ஆகையால் அவர்கள் இச் சங்கத்தை ஆதரிக்கவில்லை. இவர் நயமாகவும் சாதுர்யமாகவும் பேசி, விருப்பமில்லாதாரையும் தமது கக்ஷிக்கு வசியமாக்கினுர். ஒற்றுமை அவசியம் என்பது இவரது முதலாவது தீர்மானம். 1904-ம் வருஷத்திற்குப் பின்பு இவருக்கிருந்த இடையூறுகள் இவரது வாக் சாதுர்யத்தினுல் நீங்கின. வெகுகாலம் இவர் அலிகார் கலாசாலை நிர்வாக போர்டின் காரியதரிசியாகவுமிருந்தார். இவர் காலத்தில் அந்த ஸ்தாபனம் ஓங்கி வளர்ந்தது. முஸ்லிம் சர்வ கலாசாலையை ஏற்படுத்த வேண்டுமென்பது இவரது அவா. இவர் காலத்தில் இந்த அவாவை இவர் நிறைவேற்றி வைக்க இயலவில்லை.

சில சந்தர்ப்பங்களில் இவர் பொது வாழ்வில் ஈடுபட்டதுண்டு. 1906-ல் ஆகாகான் தலைமையின் கீழ் ஒரு முஸ்லிம் கோஷ்டி வைஸ்ராய் மிண்டோ பிரபுவை பேட்டி காண்பதற்கு இவர் முன்நின்று ஏற்பாடுகள் செய்தார். இதன் காரணமாக அரசாங்கத்தார் முஸ்லீம்களிடமும் சிரத்தை கொண்டனர். இது முதற்கொண்டு முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்பது உணரப்பட்டது. "அகில இந்திய முஸ்லிம் லீக்" உடனே ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு நவாபின் ஆலோசனைகள் மிகவும் உதவின.

1907-ம் வருஷம் அக்டோபர் மாதம் இவர் சிம்லாவிற்கு வைஸ்ராய் பிரபுவை பேட்டி காணச் சென்றுர். திடீரென்று அங்கு இவருக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டது. இவருக்கு சிகிச்சை செய்ய வைஸ்ராய் தமது டாக்டரை அனுப்பினுர். கடைசியில் அம்மாதம் 17-ம் தேதியன்று நவாப் மோஷின் உல்முல்க் தமது 70-வது ஆண்டில் காலமானுர். இவரது மரணம் முஸ்லிம் சமூகத்திற்குப் பெருத்த நஷ்டத்தை விளைவித்தது. இவருக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடம் விசேஷ நம்பிக்கை உண்டு. படிப்பதில் பிரியம் இவருக்கு அதிகம்; வித்யாதனத்தை இவர் மிக மதித்தவர். தமது அபிப்பிராயங்களை அனுசரிப்பதில் எவ்வித இடையூறுகள் இருந்தபோதிலும் இவர் பின்வாங்கியதில்லை. ஆனுல், அவை நீதியற்றவை என்று ஆதாரங்களுடன் யாராவது எடுத்துக் காட்டினுல் இவர் ஒப்புவார்.

"ரொம்ப சுகமாக இருக்கிறது!"

முழு ¼ பவுண்டு கட்டிகள்
மிகக் குறைந்த விலையில் சுத்தமான வெஜிடப்பில் ஸோப்பு

மணமும், நுரையும் நிறைந்த ஹமாம் ஸோப்பைத் தேய்த்துக் குளியுங்கள். வாங்கவும், உபயோகிக்கவும் மிகச் சிக்கனமானது. பெரிய கட்டியை ஆடவர் அனைவரும் விரும்புகின்றனர்.

TOMCO

ஹமாம்

டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியர் தெரு, மதராஸ்.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.
டாடாபுரம் & பம்பாய்

T. S. 38

நோயற்றவாழ்வு

தந்தோத்பேதம் அல்லது பல் முளைத்தல்

(வைத்தியரத்ன டண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது.)

தம் குழந்தைகளின் தேஹாரோக்கியத்திற் பெற்றோர்களுக்கு இயற்கையிற் பற்றுதலிருந்தும், ஊக்கக் குறைவினாலோ, இளங்குழந்தைகளுக்கு அவ்வப்போது நேரிடும் தேஹாரோக்கிய நிலைமைகளின் மாறுபாடுகளை உள்ளபடி அறிய முடியாமையாலோ பலர் தம் குழந்தைகளின் சுகநிலைமை சீர்கெடுவதைத் தெரிந்துகொள்ள வகையற்று வீணிற் பரிதவிப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். சுபாவமாகச் சில ஸந்தர்ப்பங்களிற் சிறு குழந்தைகளுக்குக் காணக்கூடிய ஆரோக்கிய மாறுதல்களைப்பற்றி வைத்தியர் உதவியின்றியே பெற்றோர்கள் பல அம்சங்களைத் தெரிந்துகொள்ளவும், அச்சீர்கேடுகளை எளிதிற் பரிஹரித்துக்கொள்ளவும் முடியும். அவ்விதமான இயற்கை ஆரோக்கிய மாறுதல்கள் ஸம்பந்தமான நிலைமைகளுள் தந்தோத்பேதம் என்கிற பல் முளைக்கும் நிலைமையும் ஒன்று. இதுதான் நியமேந எல்லாக் குழந்தைகளுக்கும் சுபாவமாயேற்படும் முக்கியமான அநாரோக்கிய நிலைமைக்குக் காரணம் என்பதைக் கருதி, மித்திரனைப் படிக்கும் நண்பர்களனைவருக்கும் இவ்விஷயமான உண்மைகளை அறிவித்து, குழந்தைகளை அந்நிலைமையிற் பரிபாலிக்க வேண்டிய முறைகளையும் இக்கட்டுரை மூலம் விளக்க விரும்புகிறேன்.

ஆயுர்வேத பரிபாஷைப்படிப்பல் முளைப்பது 'தந்தோத்பேதம்' எனப்படும். தளத்தைப்பிளந்து அல்லது விலக்கிக்கொண்டு மேலே கிளம்புவது 'உத்பேதம்;' பல் மேலே கிளம்புவது "தந்தோத்பேதம்' ஆகும். சிசு பிறந்தவுடனே பிறகு காலக்கிரமத்தில் வெளிக்கிளம்பப்போகிற தந்தங்களின் மூலப்பொருள் தந்த வேஷ்டம் என்கிற ஈறுகளின் உட்புறமாய் உற்பத்தியாய் ஒன்று சேரத் துவக்கும். அதாவது, பிறக்கும்போது பல்லின் மூலப்பொருள் மிக்க மிருதுவான நிலைமையில் ஈறுகளுக்குள் அடங்கியிருக்கும். அவ்விதம் உள்ளடங்கிய மிருதுவான தந்தங்களில் மூலப்பொருள் வன்மையடைந்து வெளிக் கிளம்பும்போது வெவ்வேறு விதமான தேஹ-மனக்கோளாறுகள் குழந்தையினிடம் காணும். மூன்ருவது அல்லது நான்காவது மாதத்திற்கு முன்பு அவை கெட்டித் தன்மையையும் ஒழுங்கான உருவத்தையும் பெறமாட்டா. பிறந்து ஐந்தாறு மாதங்களுக்குமேல் அவை வன்மையடைந்து வெளிக் கிளம்பத் துவக்கும். இச்சமயத்தில் குழந்தைகள் அமைதியற்றும், திடீரென்று பயந்து நடுங்கியும் அலறியழும்; பல்லீறுனது மிகச் சிவந்தும் வீங்கியும், அரிப்புடன் கூடிய உணர்ச்சியுள்ளதாகவும் இருக்கும்; ஏதேனும் கடினமான வஸ்து வாயில் அகப்பட்டால், ஈறுகளுக்கு இடையில் அதை அழுந்தக் கடிக்கக் குழந்தைக்கு இஷ்டமாகவும் இதமாகவும் இருக்கும்.

"தந்தோத்பேதச் சிசோஸ் ஸர்வ ரோகாணும் காரணம் ஸ்ம்ருதம்."—பல் முளைக்சத் துவக்கும்போது, அந்நிலைமை சிசுவுக்குச் சகல ரோகங்கள் ஏற்படவும் காரணமாகிறது என்கிருர் பாவமிச்ரர் முதலானோர். ஆகவே, குழந்தைகளின் ஆரோக்கிய நிலைமை பொதுவாகவே தந்தோத்பேத ஸமயத்தில் அலங்கோலமாவது இயல்பாகையால் இந்நிலைமையிற் பெற்ருேர் முதலியவர்கள் அவர்களைப் பாதுகாப்பதிற் சிறிதும் ஊக்கக் குறைவின்றி இருந்துவர வேண்டும் என்று ஆயுர்வேத நூல்கள் எச்சரித்துக் கூறுகின்றன. சிரஸ்ஸிலிருந்து தேஹமெங்கும் பரவியோடும். வாத தாதுவுக்கு ஆதாரமான நாடி நரம்புகளுக்கும் பற்களை நோக்கியாடும்

மிலான் தெருக்களில் விற்கப்படும் ஒரு கார்டு படம். ருஷியாவில் மதத்திற்கு எதிரிடையான பிரசாரம் அதிகமாக நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் இதற்கு ஈடாகுமா?

பேடண்டெக்ஸ்

இயற்கை உணர்ச்சியை அடக்குதலும், தேகத்தில் ஏற்படும் ஆசையைப் புறக்கணித்தலும் சரியானவையல்ல. பேடண்டெக்ஸ் தான் மிகவும் பத்திரமான, சௌகரியமான, பலன்தரத் தக்க கர்ப்பத்தடை சாதனம். பேடண்டெக்ஸை சுலபமாகவும், விரைவிலும் உபயோகிக்கலாம். கர்ப்பத்துக்கான மூல காரணமே அழிக்கப்படுகிறது. கர்ப்பமே ஏற்பட வழியில்லை. 25 வருஷப் பிரசித்தி பெற்றது. பேடண்டெக்ஸை ஆயிரக் கணக்கான ஸ்திரீகள் உபயோகித்திருக்கிருர்கள்; வைத்தியர்களின் பூரண ஆதரவு பெற்றது இதுவே.

டியூப் 1-க்கு ரூ. 3-8.

அப்பா & கம்பெனி, மதராஸ்.

மீல்லர் பேடன் பிரதர்ஸ்,
பெங்களூர்.

தென்னிந்திய மொத்த ஏஜண்டுகள்:
மால்கம் பிரதர்ஸ், பம்பாய்.

மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்.

நஞ்சன்கூடு பல்பொடி ப்ாக்டெரியின்

கூலாயில்

சிறந்த ஸ்நானத் தைலம்

அணா3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ். ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறேம்.)

ஸ்தாபிதம் 1910.

ரூபா 800 மதிக்கக்கூடிய ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்



கைதேர்ந்தவர்களால் தயார் செய்தது. 300 கஜ்ஜை கட்டி அசல் சவரன் பொன்னுக் கொப்பானது. 5 வருஷம் நிறம் மாருமல் பொன்னிறமாகவேயிருக்கும் பெரியோர் முதல் சிறுவர் வரையில் அணிந்துகொள்ளலாம்; 5 வருஷம் காரண்டி. ஜாலர் ஒட்டியாணம் சிறிய சைஸ் ரூ. 5-8-0; பெரியது ரூ. 6-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் சிறியது ரூ. 2-8-0; நடுத்தரம் ரூ. 3-8-0; பெரியது ரூ. 5-8-0. தபால் சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ்,
168, சைனபஜார் ரோடு, மதராஸ்.

அவ்வித நாடிகளுக்கும் பரஸ்பர ஸம்பந்தம் வலையுருவாக அமைந்திருப்பதால், பல் முளைக்கும் தருணத்தில் இளங்குழந்தையின் தேஹத்தில் உள்ளும் புறமும் பலவேறு கோளாறுகள் நரம்பு மண்டலத்திற்குள்ள ஒற்றுணர்ச்சியின் காரணமாய் ஏற்படுவது ஸஹஜம். கன்னங்களுக்கு அடியில் அமைந்துள்ள லாலா கிரந்திகள் என்னும் உமிழ்நீர்க் கோளங்கள்: பல்லீறுகளில் நோவுக்கு உட்பட்டு உபாதியடைந்தவைபோல் சொள்ளு நீரை இடைவிடாது அமிதமாகச் சுறப்பிக்கின்றன. பற்களையும் பல்லீறுகளையும் பற்றிய நோவுக்கு உடல் முழுதும் உடந்தையாய் விடுவதும், வெளியில் சர்மம் முதல் உள்ளே மூளை வரையிலுள்ள அகில அவயவங்களும் ஒவ்வொரு விதமாகக் கோளாறடைவதும் குழந்தைகளின் பல் முளைப்பில் முக்கியமாகப் பார்க்கக் கூடிய அதிசயக் குறிகளாகும்.

சர்மம் வறண்டுபோய் அதிக சூடாகும்; முகம் சிவந்து விம்மியதுபோல் காணும்; குடலில் அழற்சியேற்பட்டு வயிற்றுப் போக்கு உண்டாக்கும். "தந்தோத்பேதஜ்வரகாஸச் சர்திராநாஹ ஏவச. அதீஸாரச்சிரோருக் சவிஸர்ப்ப: ஃபாதகி ததா. அபிஷ்யந்த: கரிணரோகோஜ்வரா தாக்ஷேபவவ ச —'பல் முளைக்கையில் சிசுவுக்கு ஜ்வரம், இருமல், வாந்தி, வயிற்றுப் பொருமல், அதிஸாரம், தலைவலி, சர்மத்தின் மேல் சிரங்கு, அக்கி முதலியவை, கண்ணோய், காது வலி இவையும் ஜ்வரவேகம் அதிகமானால் வலியும் உண்டாவது வழக்கம்' என்று ஆயுர்வேத நிதான நூல்கள் விளங்கவே பல் முளைப்பதாலாகும் கோளாறுகளைக் கூறுகின்றன. குழந்தை விழித்திருக்கையிற் சொற்பமாகவும் உறங்கும்போது அடிக்கடியும் அஞ்சி நடுங்கும்; சர்மத்தில் சிவப்பாகத் தழும்புகள் அல்லது சிரங்குகள் கிளம்பும்; இது சதைகளைப்பற்றிப் பரவி, மார்புவரையில் வியாபித்தால், அப்பொழுது கபமில்லாமலே புகைந்தாற்போல் வறண்ட இருமல் ஏற்பட்டு மிகத் தொந்தரவு கொடுப்பதுண்டு. குழந்தை திருப்திகரமான ஆரோக்கிய நிலைமையில் இருந்து வந்தால், இக்கோளாறுகள் பெரும்பாலும் கடுமையாகவும் இருப்பதில்லை; இரண்டொரு வாரத்தில் சுயமாகத் தணிந்து விடுவதும் வழக்கம். அதற்கு மாறாகக் குழந்தை மிக்க பலக்குறைவாயிருந்தால், பல்முளைக்கையிற் காணக்கூடிய கோளாறுகள் மிகவும் தொந்தரவளிப்பவையாயிருப்பதோடு, ஒவ்வொரு ஸமயம் அபாயகரமான நிலைமைக்கும் காரணமாவதுண்டு.

முக்கியமாகப் பல் முளைக்கையில் வயிற்றுக் கோளாறுகள் தோன்றுவதற்கு வாததாதுவைப் பற்களுக்கும் குடலுக்கும் செலுத்தும் நரம்பு அல்லது நாடி மண்டலம் பொதுவாயிருப்பது ஒரு ஹேது; வாயின் உட்புறத்தைச் சூழ்ந்துள்ள சிலேஷ்ம கலை என்கிற ஜவ்வுப் போர்வை (ஆங்கிலத்தில் மியூகஸ் மெம்பிரேன் எனப்படுவது) ஆமாசயம் என்கிற இரைப் பையிலும் குடல்களிலும் உட்புறமாகத் தொடர்ந்து வியாபித்து அவ்வவயவங்களுக்கு உட்புறப் போர்வையாயிருப்பதால், வாயில் ஏற்படும் தொந்தரவுக்குக் காரணமானவற்றை அந்த சிலேஷ்ம கலை (ஜவ்வுப் போர்வை) இரைப்பை-குடல் ஆகிய ஜீர்ண கோசங்களிலும் பரவச் செய்வது மற்றொரு ஹேதுவாகும். இதன் பயனாக வயிற்றுளைத்தல், குமட்டல், வாந்தி, அஜீர்ணம், அதிஸாரம் முதலிய பல்வேறு கோளாறுகள் உண்டாகும். தேஹத்தின் வெளிப்புறத் தோலும் உட்புறத் தோலான சிலேஷ்ம கலையின் அநாரோக்கிய நிலைமைக்கு ஏற்றவாறு அதனுடன் ஒற்றுணர்ச்சியைப் பெற்று அவ்விதமே சில கோளாறுக்கு உட்படுமாதலால், சொறி, சிரங்கு, விஸர்ப்பம் என்னும் அக்கி, இரத்தக்கட்டிகள் முதலியவை சர்மத்தைப் பாதிக்கின்றன. சிரஸ்ஸில் சிரங்கும், கட்டிகளும் தோன்றி மிக வருத்தும். இவ்விதமே நாசி-தொண்டை. ச்வாஸகோசம் ஆகிய சுவாஸமார்க்கத்தைப் போர்த்துள்ள ஜவ்வுக்கவசமும் அழற்சியடைந்து, பலமான ஜலதோஷம், இருமல் முதலிய ஸங்கடங்களுக்கு அவ்வவயவங்களும் உட்படுவது வழக்கம். காதுகள் விரணங்கொள்வதற்கும் சீழ்ப்பிடித்து வருந்துவதற்கும் இதுதான் முகாந்தரம் ஆகவே பலக்குறைவான பல பாலர்கள் பல் முளைக்கையிற் படாத பாடும் பட்டுத் தவிக்க நேரிடுகிறது. நரம்புகள் என்கிற நாடி மண்டலம் முழுதும் மூளையுட்பட அப்பொழுது அழற்சியையும் அதிர்ச்சியையும் அடைந்து உடல் முழுதும் நோவும் வலிப்புங்கூட சில குழந்தைகளுக்குக் காணும். ஒவ்வொரு குழந்தைக்கு ஏற்படும் கடுமையான வலிப்பைப் பார்ப்பவர், அதற்குக் கொறுக்குவலி (காக்கைவலி) ஸம்பவித்துவிட்டதாகவும் பிரமித்து அச்சமுறுவர்.

பொதுவாக ஏழிலிருந்து ஒன்பதாம் மாதத்திற்குள்ளாகக் குழந்தைகளுக்குப் பல் முளைக்கத் துவக்கும். ஆனால் அபூர்வமாக ஆறுவது மாதத்திலும், சிலருக்கு பத்து மாதத்திற்குப் பிறகுங்கூட முளைக்கக் கூடும். பல் முனைகள் ஈறுகளுக்கு வெளியே கிளம்பும் வரையில்தான் முற்கூறிய கோளாறுகள் எல்லாம் தோன்றுவதும் விருத்தியாவதுமாயிருக்கும்; பல் வெளிக்கிளம்பிவிட்டால் பெரும்பாலும் அவை யாவும் தணிந்து மறையும். பல் வெளிப்படும் ஸமயத்தில் ஈறுகள் தடித்து மிகச் சிவந்திருப்படதுன், விரலால் சிறிது ஸ்பரிசிப்பதையும் தாங்கவியலாத உணர்ச்சியுள்ளனவாயிருக்கும்; ஆனால் கடினமான சிற்றுண்டி வேறு வஸ்துக்கள் முதலியவற்றை அழுத்திக் கடிப்பதில் குழந்தை விருப்பங்கொள்ளும் பல் வெளியிற் கிளம்பி வரும்போது ஈறு சிவந்திருந்தபோதிலும் அதன் மேற்புறம் ஒருவாறு வெளிறிக் கொப்புளம் உள்ளது போலப் புலப்படும். முகாந்தரமில்லாமலே வாயும் பக்கத்து அண்ணாங்களும் அசையும்.

குழந்தை நல்ல ஆரோக்கிய நிலைமையிலிருந்து, பற்களும் இயற்கைக்கு மாறுபடாத ஸ்திதியில் வெளிக் கிளம்பினால் அவை அடியிற் குறிக்கப்படும் முறையில் முளைப்பது வழக்கம். (1) கீழ் வாயில் இரண்டு நடுப்பற்கள் (கத்தரிக்கும் பற்கள்) ஆறுவது ஏழாவது மாதங்களில் முதலில் முளைக்கும். (2) அதற்கு நேரில் மேல் வாயில் அதேவிதமான இரண்டு நடுப்பற்கள் அதன் பிறகு ஒரு மாதத்திற்குள் வெளிக்கிளம்பும் (3) மேல் வாயில் முளைத்த இரண்டு நடுப்பற்களுக்கும் இருபுறங்களிலும் கத்தரிப்பதற்கான மற்றொரு ஜதைப் பற்கள் எட்டாவது அல்லது ஒன்பதாவது மாதத்தில் தோன்றும். (4) அவற்றிற்கு நேராகக் கீழ்வாயில் அதேவிதமான இரண்டு பற்கள் பிறகு ஒரு மாத காலத்தில் உற்பத்தியாகும். (5) மெல்லுவதற்குபயோகமான இரண்டு கடைவாய்ப் பற்கள் கீழ்வாயில் 3-வதாகக் கூறிய பற்களுக்குப் பக்கங்களில் பக்கத்திற்கு ஒன்றாக முளைக்க அவற்றிற்குச் சில நாட்களுக்குப் பின்னர் மேல்வாயிலும் அவ்விதமே வேறிரண்டு பற்கள் உண்டாகும். (6) கடைவாய்ப் பற்களுக்கும் கத்தரிக்கும் பிந்திய பற்களுக்கும் இடையில் பக்கத்திற்கு ஒன்று வீதம் கீழ்வாயிலும் மேல்வாயிலும் கோரப் பற்கள் பதினாறுவதுக்கு மேல் இருபதாவது மாதத்திற்குள்ளாக முளைப்பது வழக்கம். (7) பிறகு இருபதாம் மாதத்திலிருந்து முப்பது அல்லது முப்பத்தாறும் மாதத்திற்குள்ளாக பிந்திய கடைவாய்ப் பற்கள் கடைசியாக வெளியாகும். இவ்வாறாக இருபது பற்கள் குழந்தைக்கு இரண்டரை அல்லது மூன்று வயது நிரம்பும்போது நியமேன முடியவும் முளைத்து விடுவது இயல்பு இவ்விதம் முளைத்த இருபது பற்களும் ‘பால் பற்கள்’ எனப்படும். இவற்றிற் பெரும்பான்மையும் குழந்தைப் பருவம் நீங்கும் போது விழுந்துபோய், அவற்றின் ஸ்தானங்களில் பிறகு ஸ்திரப் பற்கள் முளைக்கும்

பதினேழு பதினெட்டு வயதுக்கு மேல் கடைசியிலுள்ள கடைவாய்ப் பற்கள் முளைக்கும்போது (மேனாட்டார் இதை விவேகோதயப் பல் என்பர்) எவ்வெவ்விதமான ஸங்கடங்கள் தோன்றுமென்பதைப்பற்றி அநேகருக்கு அனுபவஞ்ஞானம் இருக்

ரணங்கள்

கால்

கோளாறு

இவற்றை நிவர்த்தித்துக் கோள்க.

ஜாம்-பெக் தழும்பின்றி ஆற்றுகிறது.

காலில் ரணங்கள், கட்டிகள் முதலிய கோளாறுகள் ஏற்பட்டு நீங்கள் அவஸ்தைப் பட்டால் ஜாம்-பெக் உபயோகிக்கத் தவறாதீர்கள். ஜாம்பெக் அற்புதமாக வலியை நிறுத்தி, எரிச்சலையடக்கி, ரணத்தைபாற்றி, விஷத்தை அப்புறப்படுத்துகிறது. ஜாம்-பெக் விஷக்கிருமிகளையழிக்கிறது. உபயோகித்துப் பாருங்கள்! ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஜாம்-பெக் கிடைக்கும்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam Buk

கலாம். அத்தகைய ஸங்கடங்களும் அவற்றிற்கு அதிகமான ஸங்கடங்களும் இளங்குழந்தைகளுக்குக் காணுமென்று நன்கு யோசித்துணர்ந்தால், இளம் பிள்ளைகளுக்கு அச்சமயம் ஏற்படும் துன்பத்தைப்பற்றி உண்மையறிவு ஒருவாறு உண்டாகும். ஆனால், பல் முளைக்கையில் பாலர்கள் அனைவரும் முற்கூறிய பல துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள் என்பது நியதமல்ல. சொற்ப ஜ்வரமும், சொற்ப அதிஸாரமும், வாயிலிருந்து சொள்ளு நீர் சொட்டுவதும் தவிர வேறு தொந்தரவுகள் இல்லாமலே பல் சுபாவ நிலைமையில் முளைக்குமானால், அவ்விதச் சொற்ப கோளாறுகளைப் பரிஹரிக்க எம் முயற்சியும் அவசியமில்லை. ஆனால், முற்கூறிய கோளாறுகள் மத்திம நிலைமையிலேயோ கடுமையான நிலைமையிலேயே விருத்தியாய் சிசு வருந்த நேர்ந்தால், அவற்றிற்கு ஏற்ற பரிஹாரங்களைத் தாமதமின்றியே செய்ய முயலாவிடில், அதனாலும் ஏதேனும் நிரந்தரமான கோளாறோ அல்லது வேறு அபாயமோ ஸம்பவிக்குமென்பதைப் பெற்றோர் நினைவில் வைக்கவேண்டும்.

(1) பல்லீறுகளைப்பற்றிய கோளாறுகளுக்குக் காரணமாயுள்ள அம்சங்களை ஆரம்பத்திலும் பிந்தியும் மிகவும் கவலையுண்டுபண்ணக்கூடிய நிலைமையை யுண்டுபண்ணுவதால், அத்துன்பத்தைத் தீர்ப்பதில் முதலிற் கருத்து செலுத்த வேண்டியது அவசியமாம். "லேகயேத் தந்த வேஷ்டந்து வ்ரீஹிவக்த்ரேண: பாலகே. மீட்யமாநே ஸக்ருத் தந்தோத்பேத தந்தோத்ப்வாயஹி: ஸ்த்தாநே சதஸ்மிந் கல்கஞ்ச ஸ்தம்பநஸ்ய விலேபயேத்"— குழந்தை பல் முளைக்கையில் அது தாராளமாக வெளிவர வகையில்லாமல் தவிக்கும் போது வ்ரீஹிமுகம் என்கிற கூரிய ஆயுதத்தினால் பல்லீறை ஒருமுறை நன்கு கீறிவிடலாம்; அல்லது அவ்விடத்தல் மாசிக்காய் முதலிய கஷாய ரஸமுள்ள சரக்கைத் தேய்த்து, வழவழப்பான அக்கல்கத்தை அவ்விடத்திற் பூசி வரலாம். பல் முளைக்கும் இடத்திற் பல்லீறைக் கீறுவது வைத்தியர்களாலேயே செய்ய வேண்டியிருப்பதால், சிலர் இதைக் கஷ்டமென்று விட்டுவிடக்கூடும். கூரிய பேனாக்கத்தியைச் சுத்தம் செய்து, அதன் முனையினால் ஈறு முனையை மெதுவாக எந்த வைத்தியனும், அல்லது தைரியமான எந்த மனிதனும் எளிதிற் கீறிவிடலாம். (2) உமிழ்நீர் வெளியிற்சுரந்து வருவதும், பேதியாவதும் தேஹத்திற் சேரும் தாதகாலிகமான சில கழிவுப் பொருட்களை வெளிப்படுத்துவதற்காகஇயற்கையே அவ்விதம் செய்வதால். வரையில் தடுத்து நிறுத்தக் கூடியவையல்ல இவ்விரண்டும் அமிதமாயிருந்தால், அவற்றைத் தடுக்க அடியிற் குறிக்கப்படும் இரண்டு மருந்துகளை முறையே உபயோகிப்பதால் அதிகப் பலன் உண்டு. ஒன்று, 'மிருகச்ருங்க பஸ்மம்' இதை வேளைக்கு நாலைந்து குன்றுமணி யெடை வீதம் தேனிலாவது, அதிமதுரப் பாலிலாவது குழைத்து, நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு முறை கொடுக்கலாம். இரண்டு, 'கனஸாரவடி'. ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகளை முலைப்பாலிலாவது தேனிலாவது தேய்த்து தினத்துக்கு மூன்று முறை கொடுக்கலாம். இவ்விரண்டு மருந்துகளையும் சேர்ந்தாப்போலும் அடுத்தடுத்தும் உசிதப்படி உபயோகிக்கலாம். இவ்விரண்டு ஔஷதங்களுக்குப் பதிலாக மிருக ச்ருங்கபஸ்மம் கலந்து குடகாரிஷ்டம் என்கிற திராவகத்தை வேளைக்கு இரண்டு மூன்று தேக்கரண்டி யளவு உட்கொள்ளச் செய்வதும் நலம். (3) அதிஸாரத்திற்குப் பதிலாக நேர் எதிரிடையாய் மலச்சிக்கலின் தொந்தரவு ஏற்பட்டிருந்தால், மூன்று நான்கு நாட்களுக்கு ஒருமுறை லரிவ்ருத் குளிகையயாவது (2-மாத்திரை அளவில்) ஆமணக்கெண்ணையாவது (4-உத்தரணி யளவில்) கொடுக்கலாம். (4) முகத்திலோ தேகத்தில் வேறு எவ்விடத்திலோ இசிவு அல்லது வலிப்பு ஏற்பட்டாலும், கஷ்டமாக மூச்சுவிடுவதாகத்தோன்றினாலும் மஹாநாராயண தைலம், விச்வவாதாரி தைலம், குப்ஜப்ரஸாரிணி தைலம் ஆகிய இவற்றுள் எதையாவது சிறிது கழுத்துப் பிடரியிலும், மார்பிலும், நெற்றியிலும் தடவி அடிக்கடியும் தேய்த்து வருவதால் அக்கோளாறுகள் கிரமமாகக் குறையத் தலைப்படும். இத்துடன் மிருகமதரஸம் என்கிற கஸ்தூரி கலந்த மாத்திரையில் இரண்டொன்றைக் கருந்துளஸிச்சாற்றிற் குழைத்து உள்ளுக்கும் நாளொன்றுக்கு இரு முறை கொடுக்கலாம் (5) சர்மத்தின்மேல் விஸர்ப்பம் முதலிய விகாரங்கள் தோன்றினால் அவற்றைச் சிறிதும இந்த நிலைமையில் அலக்ஷ்யம் செய்யலாகாது. இளஞ் சூடான ஜலத்திற் பஞ்சை நனைத்து நனைத்து உடம்பை தினத்திற்கு இரண்டு தடவை மிருதுவாகத் துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும். அவ்விதம் துடைத்துச் சுத்தம் செய்ததும் பொரித்துத் தூள் செய்த வெங்காரத்தைச் சொறி-சிரங்கு-கொப்புளம் முதலியவையிருக்கும் அவயவங்களின் மேல் தாராளமாகத் தூவ வேண்டும்; அல்லது ஜாத்யாதிக்ருதத்தையாவது, சததௌத க்ருதத்தையாவது அவ்விடங்களில் தடவிவா

லாம். வேறு தொந்தரவுகளில்லாமலிருந்தால், வேப்பிலையை இடித்துப் பிழிந்து வடிக்கட்டியெடுத்த சாற்றை மேலே பூசி ஊறவைத்து, அரை மணி நேரங் கழித்து வெந்நீரிற் குளிப்பாட்டிவிடலாம். (6) சுஷ்ககாஸம் என்கிற புகைந்த இருமல் குழந்தை படுக்கும் போதெல்லாம் ஏற்படுவதுண்டு. இதில் கபதோஷம், சளி முதலியவை வெளிப்படாது. மார்பிலும் கர் கர் என்கிற சப்தம் உண்டாவதில்லை. இந்நிலைமையில் பிராஹ்மீரஸாயநத்துடன் (இரண்டு மூன்று தேக்கரண்டியளவில்) ஒரு கபகேது வடியைக் குழைத்து நாளொன்றுக்கு மூன்று நான்கு முறையாக இரண்டு மூன்று நாள் கொடுக்கலாம். அல்லது அதிமதுரப் பாலில் சிறிது பிரமியிலைச் சாற்றைக் கலந்தும் தினத்துக்கு இரண்டு தடவையாக உட்கொள்ளச் செய்யலாம். (7) அடிக்கடி வாந்தியானால், எளிதில் ஜீர்ணமாகக் கூடிய வாற்கோதுமை அரிசியை உடைத்துக் காய்ச்சி வடிகட்டிய தெளிவு நீரிலாவது, அவ்விதம் பக்குவம் செய்த புழுங்கலரிசிக் கஞ்சி நீரிலாவது பாலும் பனங்கற்கண்டும் கலந்து உணவாகக் கொடுக்கலாம். பழ ரஸங்களும் அடிக்கடி கொடுக்கலாம். உபயோகிக்கும் பாத்திரங்களும், கொடுக்கும் குடி நீரும் முற்றிலும் பரிசுத்தமாயிருக்கப் பார்க்கவேண்டும் அப்படியும் வாந்தி தொடர்ந்தால், குடூசீஸத்துவம் என்கிற சீந்திற் சர்க்கரையை உணவுடன் ஐந்தாறு குன்று மணி யெடை கலந்து உபயோகிக்கலாம். சுண்ணாம்புத் தெளிவு நீரையும் உணவுடன் இரண்டொரு தேக்கரண்டி யளவு கலந்து கொடுப்பது நலம். (8) ஜ்வரம் பெரும்பான்மையான சிசுக்களைப் பாதிப்பது வழக்கமாகையால், அது மற்றக் கோளாறுகளுக்குப் பரிஹாரம் செய்வதாலேயே ஒவ்வொரு ஸமயம் தணிந்துவிடுவதுண்டு. இல்லையேல், வயிற்றில் வாயு முதலியவை சேராமலும், உடலில் அழுக்கு சேராமலும், கொடுக்கும் உணவு எளிதில் ஜீரணமாகக் கூடியதாகவும் பார்த்து வருவதுடன் ஸர்வஜ்வராரி மாத்திரையில் தினத்திற்கு மூன்று நான்கு முறை ஒவ்வொரு மாத்திரை சிறிது சுக்குக் குடிநீரிற் குழைத்துக் கொடுத்து வரலாம்.

முக்கியமாகப் பல்முளைக்கும் போது எலும்புகளும், வெகு முக்கியமாகப் பற்களும் வளர்ந்து பலப்படுவதற்கு அவசியமான தாதுப் பொருட்கள் தேஹத்திற்கு அதிக அவசியமாகத் தேவையானதால் சங்கபஸ்மம், வராட பஸ்மம், விசேஷமாக மௌக்திக் பஸ்மம் இவை போன்ற பஸ்மரூபமான (சுண்ண) மருந்துகள் குழந்தைகளுக்கு இவற்றை அடிக்கடியும் உட்கொள்ளக் கொடுத்து வருவதால், முற்கூறிய கோளாறுகளுக்கு அவை அநேகமாய் பரிஹார ஔஷதங்களாயிருப்பது மல்லாமல், தேஹதாதுக்களின் தற்காலிக போஷணைக்கும் இன்றியமையாச் சாதனங்களாகின்றன.

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

௧ & ௨ மேலக்கோபுர வீதி
மதுரையில்
நரசுஸ்
சுத்தமான
காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை
தேயிலை
முதலியவைகளை விற்பனை செய்ய
12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.
உயர்ந்த சரக்கு! நயமான விலை!!
நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.
நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
மதுரை, பிராஞ்சு:
H. O. SALEM.
தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—

ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியாரின் நடிகர் மிஸ் பிரான்விஸ் டீ.

மைசூரில் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நியூ ஸெயின்ட் பிலோமினு மாதா கோயில். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் யாத்ரீகர்கள் இத் திறப்புவிழாவிற்கு வந்திருந்தனர்.



நான்வி (பிரான்ஸிலுள்ள



சமீபத்தில் போலண்டுக்கா



...பிலுள்ள பொருட்காட்சி சாலை. இதற்கு ஜன்னல்களே கிடையாது.

சர்க்காரை ஆதரிக்கும் போர் வீரர்களுக்கு ஸ்பெயின் யுத்தமந்திரி ஜெனரல் காஸ்டில்லோ யுத்தம் செய்யும் நுட்பங்களை விளக்கிக் கொண்டிருக்கிறார்.



... கட்டப்பட்டுள்ள நாசகாரி கப்பல். இது அழுத்தமான கவசமுடையது.
...த்தில் சமுத்திரத்தில் விடப்பட்டது.

தரம்பூர் ராணா சமீபத்தில் வார்ஸா (போலந்து)வுக்கு விஜயம் செய்தபோது பாரத மித்ர மண்டல் சங்க அங்கத்தினர்களால் வரவேற்கப்பட்டார்.

பழியோரிடம்–பாவமோரிடம்

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

னிருந்து என்ன பயன்? ஒரு நிமிஷம் தயங்கினேன். இனிமேல் வாழ்க்கையை நடத்துவது துர்லபம் என்று எண்ணி மறுபடியும் குழந்தையிடம் வந்தேன். அதை விட்டுச் செல்லப்போகிறோமேயென்ற ஒரு பெரும் துக்கம். வேறு ஒன்றுமில்லை. தபித்த என் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு சரேலென்று வாசற்பக்கம் பாய்ந்து கிணற்றை நோக்கி ஓடினேன்.

பர்மாக்காரி என் கருத்தை யூகித்துக்கொண்டாள் போலும். என் பின்னால், "நில், நில்" என்று கத்திக்கொண்டே ஓடி வந்து என் கையைப் பிடித்து இழுத்தாள். ஆனால்நான் அவள் பிடியினின்றும் திமிறிக்கொண்டு கிணற்றுக் கட்டையில் ஒரு காலை ஊன்றித் தாவினேன். அடுத்த விநாடி பர்மாக்காரியின் கை மட்டுமில்லை, என் கணவரின் கையும் என்னைப் பலாத்காரமாக இழுத்தன. வலிபொறுக்க முடியாமல் மூர்ச்சித்தேன்.

* * *

என் கண்கள் விழித்தபொழுது நான் படுக்கையிலிருந்தேன். உடம்பெல்லாம் ஒரே வலி. படுக்கைக்குக் கொஞ்ச தூரத்தில் என் கணவர் அந்தப் பர்மாக்காரியை ஏதோ கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார். உற்றுக் கேட்டேன். அவள் அழுதுகொண்டே பதிலளித்தபோதிலும் அவள் சொன்னதெல்லாம் எனக்குத் தெளிவாகக் கேட்டது. என்ன ஆச்சரியம்!

அவள் ஒரு நடனமாது. தனபால முதலியார் எங்கள் ஊருக்கு வரும்போதெல்லாம் அவள் வீட்டிற்கு வந்ததாகவும், இந்த முறை அங்கேயே பெர்மனென்டாக இருப்பதாகச்சொல்லி அவளை அந்தப்பங்களாவிற்கு அழைத்து வந்ததாகவும் சொன்னாள். தன்னை ஒன்றும் செய்யாமல்விட்டுவிட வேண்டுமென்று கெஞ்சினாள். என் கணவர் அவளுக்குச் சொன்ன பதிலிலிருந்து தனபால முதலியார் இறந்து விட்டாரென்று அறிந்தேன். பாவம்! அந்நிய நாட்டில் வந்து அதுவும் சுற்றத்தார் யாரும் அருகில் இல்லாமல் அப்படிப்பட்ட மரணத்தையா அடைய வேண்டும்? அந்தப் பர்மாக்காரியுடன் அவர் நடந்துகொண்ட ஆபாசமான வாழ்க்கையை நினைத்தபொழுது அவர் பேரில் எனக்குக் கொஞ்சங்கூட தயை தோன்றவில்லை. என் கணவரை நான் சந்தேகிக்க நேரிட்டது அவர் துர்நடத்தையால்லவா?

மெதுவாக என் கணவரைக் கூப்பிட்டேன். அவர் அருகே வந்த பொழுது, "அவளை மன்னியுங்கள்... அத்துடன் என்னையும்... மன்னியுங்கள்," என்று உதடு துடிக்கச் சொன்னேன்.

"சண்பகம், உடம்பை அலட்டிக் கொள்ளாதே! தூங்கு! நீ என்ன தப்பிதம் செய்தாய் உன்னை மன்னிக்க?" என்றார்.

"தப்பிதமா? நான் பரம பாதகியல்லவா? உங்களையல்லவா சந்தேகித்தேன்...மன்னியுங்கள்."

அவர் சிரித்துக்கொண்டே, "இதுதானா? ஸ்திரீகளின் வழக்கமே அப்படி. அதுவும் இந்தச் சம்பவத்தில் நீ நினைத்ததற்கு ஏற்க, சில விஷயங்கள் நடந்திருக்கின்றன. அது என் தவறுமல்ல...உன் தவறுமல்ல...யார் தவறுமல்ல...தவிர நான் யார் உன்னை மன்னிக்க" என்று சொல்லி, அழுதுகொண்டிருக்கும் பர்மாக்காரிக்கும் ஆறுதல் கூறினார்.

அவருடைய நன்னொளி பிரகாசித்த முகத்தைப் பார்க்க எனக்கு வெட்கமாயிருந்தது. நன்னடத்தையுள்ள என் கணவர் அபாண்டமான பிழை செய்ததாக நான் நினைத்ததைச் சிந்திக்கச் சிந்திக்க எனக்குத் துக்கம் மேலிட்டு அழ ஆரம்பித்தேன்.

"சண்பகம்.......நன்றாயிருக்கிறது நீ செய்வது! அதோ பார். குழந்தை எவ்வளவு அழகாகச் சிரித்து விளையாடுகிறது? அந்தக் குழந்தையை விட்டுக் கிணற்றில் விழ யோசித்தாயே, என்ன புத்திசாலி!" என்றார்.

அப்பொழுதுதான் குழந்தையின் ஞாபகம் வந்தது. அவளை அச்சமயத்தில் கண்ணாரப் பார்த்து ஆனந்தக் களிப்பு கொண்ட என் பாக்கியமே பாக்கியம்!

* * * *

இப்பொழுது வேலையிலிருந்து ரிடயர் ஆகி, என் கணவரின் சொந்த ஊரில் வந்து வசிக்கிறோம். பர்மாக்காரி அடிக்கடி எங்களுக்குக் கடிதமெழுதுகிறாள். மேற்சொன்ன சம்பவத்திற்குப் பிறகு அவள் யோக்கியமாக என் கணவருக்குக் கீழ் வேலை செய்துகொண்டிருந்தவன் ஒருவனை மணந்து இல்வாழ்க்கை நன்கு புரிந்து வருகிறாள். ஒவ்வொரு கடிதத்திலும் மேற்கூறிய சம்பவத்தைச் சொல்லாமலும், என் கணவரின் புத்திமதியையும் நல்லொழுக்கத்தையும் பாராட்டாமலுமிருப்பதில்லை.

ஆனால், என் கணவர் எத்தனை முறை சொன்னபோதிலும், யனுங்கியாங்கில் நான் அவருக்குச் செய்த தீங்கை நினைத்து துக்கப்படாமலிருக்க முடியவில்லை.

இவருடைய தலைமயிரின் அழகே அழகு..

மிருதுவு, அடர்த்தி, பளபளப்பு

காரணம்? அதன் ஆரோக்கியம்



வாசனை தேங்காய் எண்ணெய்.

வறண்டு மங்கியுள்ள தலைமயிருக்கு டாம்கோ வாசனைத் தேங்காய் எண்ணெயேசிறந்தது; "பிசுக்குண்டு" பண்ணாமல் கூந்தலுக்கு ஆரோக்கியமும், பளபளப்புமூட்டும்.

லைம்ஸ் & கிளஸரின் (லெமன் க்ரீம்)

தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகும் குன்றி விடுகின்றதா? வாசனை நிறைந்த இந்த டானிக் க்ரீமைக் கொண்டு நன்கு தேயுங்கள்; கூந்தலை வளர்க்கும்; உதிர்தலைத் தடுக்கும்.

டாம்கோ விற்பனை இலாகா.
19-A, வாணியர் தெரு,
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை நிறைந்த ஔஷத கூந்தல் டானிக், கெட்டி பிரிலியண்டைன் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்,
பம்பாய் & டாடாபுரம் TH 412

MINSARARASAM

நிகரற்ற தேக வலிமை -
புதிய ரத்தோட்டம் -
அபாரமான ஜீவசக்தி -
ஆனந்தமயமான வாழ்வு -

இவைகளை யடைய

மின்சார ரசம்

வேத அருமையான பொக்கிஷம்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

புட்டி 1-க்கு ரூ. 2.

மின்சார ரசம் கம்பெனி(லிட்) சேலம்.

MINSARARASAM

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD:

நவ நாகரீகம்

தாண்டா

(காசினி எழுதியது.)

* * * ஆமாம்; தலை அலங்காரம் தாண்டா வைத்து கசாடிக்காவிட்டால் பூர்த்தி ஆகாது என்று என் அத்தை சொல்ல நானும் அடிக்கடிக் கேட்டிருக்கிறேன். ஆனால் இதுவரையில் நான் இந்தத் தாண்டாவைப் பார்த்தது கிடையாது. போனவாரம்தான் லேடி சின்னையாவின் வீட்டில் பார்த்தேன். லேடி சின்னையாவுடைய நாத்தனார் பெண்ணுக்குப் போனவாரம் வளைகாப்பு நடந்தது. தன் மருமாளுடைய வளைகாப்பை நன்றாகச் செய்யவேண்டும் என்று லேடி சின்னையா தன்னுடைய வீட்டிலேயே சகல ஏற்பாட்டையும் செய்திருந்தாள். சாயங்காலம் பாட்டுக் கச்சேரியின்பொழுது பெண்ணுக்குப் பழைய முறையில் தலை அலங்காரம் செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். 'தலை சாமான்' நான் எங்கிருந்தாவது சம்பாதித்து விடுவேன். என்? லேடி சுந்திராசாரி வீட்டிலேயே ஒரு வைர செட்டிருக்கிறது. மூக்குக்கு என்னுடைய 'ஸ்ப்ரிங்' பில்லாக்கைப் போட்டுவிடலாம். ஜிமிக்கிக்கு என்ன செய்யலாம்?" என்றாள் லேடி சின்னையாவின் மகள்.

'சொன்னால்கேட்கிறீர்களா? ஏதோ பழைய காலத்து நகை சமயாசமயத்திற்கு உதவும் என்று நானும் எவ்வளவோ சொன்னேன். ஜிமிக்கியில் இருந்த நல்ல முத்துக்களும், கல்களும் உங்கள் கண்களைக் குத்தித்து! அழித்து உருப்படி இல்லாமல் செய்து விட்டீர்கள். என் மருமாளும் உங்களுடன் சேர்ந்துகொண்டாள். இப்போ ஒரு வேளைக்கு வேணும் என்றால் திண்டாடுங்கள். அதுவும் இவளுடைய அம்மா ஜிமிக்கு நெருப்பாட்டமா கல்களுடன் எவ்வளவு அழகாக இருந்தது!' என்று என் அத்தை சொன்னாள்.

'என், அத்தை இப்படிச் சொல்லவேண்டும்? நான் அம்மா ஜிமிக்கியை அழித்து



சமீபத்தில் சூரியகிரஹணமேற்பட்டபோது டோகியோ நக்ஷத்திர ஆபீஸில் எடுக்கப்பட்ட படம்.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

வெண் குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)

Panchpota—Bengal. India.

பிரபல ஸங்கீத வித்வான் எழுதியது.

மூசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர், 6, ஆலிவர் ரோடு
மயிலாப்பூர், 2-5-35.

என் குடும்பத்தினர் நெடுநாளாகக் கேசவர்த்தினியை உபயோகித்து வருகின்றனர். கூந்தலை உதிராமல் தடுத்து, நன்றாக வளரச்செய்வதை அனுபவத்தில் கண்டு, இதைப் புகழ்ந்து சிபார்சு செய்து வருகின்றனர். ஸகல கேச உபாதிகளையும் இது தீர்க்கவல்லது என்பதைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம திருப்தி.

(கையொப்பம்) மூசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணா 12;
கேசவர்த்தினி ஷாம்பு விலை அணா 12; மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

-கொலேலா - கொலேலாக்ஸ் - கொலேசல்ப்-

கொலேகான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்,
201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

அழகான நகைகள் செய்து கொண்டேன். உள்ளே வைத்துப் பூசை பண்ணுவதில் என்ன பிரயோஜனம்?' என்றேன்.

'என்னிடம் ஜிமிக்கி இருக்கே! இதற்கேன் நீங்கள் இவ்வளவு சிரமப்படவேண்டும்? நான் தலைசாமான் செட்டுடன் ஜிமிக்கியும் வைத்திருக்கேன்!' என்றாள் லேடி சுந்திராசாரி. அவளும் ஏதோ காரியமாக அன்று ஸர் சின்னையாவின் வீட்டிற்கு வந்திருந்தாள். அப்பொழுது எல்லாருமாக வளைகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிப்பேசிக்கொண்டிருந்தோம்.

'சரி; சிரமமே இல்லை; தலைசாமான் வைத்து அலங்காரம் செய்தால் போச்சு' என்றாள் இதுவரையில் மௌனமாக இருந்த லேடி சின்னையா.

'நீங்கள் என்ன அலங்காரம் செய்தால் என்ன? தாண்டா இல்லாத தலை அலங்காரம் ஒரு அலங்காரமா?' என்றாள் என்னுடைய அத்தை.

'அது என்ன தாண்டா. தண்டாவா?' என்று சிரித்துக் கொண்டே லேடி. சின்னையாவின் மகள் கேட்டாள்.

'பட்டணத்தில் பிறந்து, வளர்ந்த உங்களுக்குத் 'தண்டா'த்தான் தெரியும். தமிழுடைய அழகே உங்கள் பேச்சில் கிடையாது. தாண்டா தஞ்சாவூரில் செய்வார்கள். மல்லியப்பூத் தாண்டா, சிகினை வைத்துக் கட்டித் தலையில் வைத்தால் எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா?' என்றாள் அத்தை.

'தாண்டாவுக்கு இங்கு எங்கே போகிறது? தஞ்சாவூருக்கு எழுதி நெட்டித் தாண்டா வேணுமானால் தருவிக்கலாம்' என்றாள் லேடி சின்னையா.

'அம்மா, கட்டாயமாகத் தருவியுங்கள். நான் இதுவரையில் தாண்டா ஒரு நகை என்று எண்ணி இருந்தேன். ஒத்தர் மல்லிகைப்பூ என்கிறீர்கள்; மற்றொருத்தர் நெட்டி என்கிறீர்கள். இந்தப் பெயர் பெற்ற தாண்டா என்னமாகத்தான் இருக்கிறது பார்க்கலாம்' என்றாள் லேடி சின்னையாவின் மகள்.

'ஏன் நெட்டியில் தருவிக்க வேண்டும்? இந்த ஊரிலேயே மல்லிகைப் பூவினால் கட்டச் சொன்னால் போச்சு' என்றாள் லேடி சுந்திராசாரி.

'இந்த ஊரில் இது யாருக்குத் தெரியப்போகிறது? எழுதித் தருவிப்பதுதான் நடக்கிற காரியம்' என்றாள் லேடி சின்னையா.

நெட்டியில் மல்லிகை அரும்புகள் மாதிரியில் செய்து, இதனால் செய்யப்பட்ட தாண்டா தஞ்சாவூரில் இருந்து வந்தது. ஒரு தாண்டாவின் விலை நாலைந்து அணாக்களுக்குள் தான் இருக்கும் என்று லேடி சின்னையா சொன்னாள். இதில் என்ன அழகோ, எனக்குப் புரியவில்லை. இரண்டு பக்கமும் தூக்கி, நடுவு வளைந்து, பார்வைக்குப் பல்லாக்குக் கொம்பு மாதிரியில் இருக்கும். இந்தத் தாண்டாவை, இராக்கொடிக்கு மேல் வைத்துக் கட்டுகிறார்கள். தலைக்கு மேலும், இரண்டு பக்கங்களிலும், சற்றே தூக்கி நிற்கிறது. எல்லாவற்றிற்கும் வழக்கம்தான் பிரதானம் என்பதற்கு இதை ஒரு அத்தாட்சியாகச் சொல்லலாம். குழந்தை முதல் தாண்டாவைத்தே தலை அலங்காரம் பார்த்திருக்கும் என் அத்தைக்கு, இது இல்லாத சிங்காரம் பூர்த்தியானதாக மனதிற்குத் தோன்றவில்லை. லேடி சின்னையாவின் மகள், 'இதற்குத்தானா உங்கள் அத்தை இவ்வளவு சொன்னார்கள்? நான் தாண்டா என்றால், என்னமோ, ஏதோ என்று நினைத்தேன்!' என்றாள். 'நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அத்தை காது கேட்கச் சொல்லிவிடாதே; ஏதாவது கோபித்துக் கொள்ளப்போகிறாள்' என்றேன்.

வளையல்

வளைகாப்பு என்றதும் நினைவு வருகிறது. அகலமான வளையல்கள் மறுபடியும் நாகரீகமாகக் கிளம்பி இருக்கிறது. இந்த வளையல்கள் சுமார் ஒரு விரல் அகலத்திற்கு மேலேயே இருக்கிறது. பலவர்ணங்களில் அழகிய சரிகைவேலை செய்யப்பட்டு விற்கிறது. கனம் அதிகமாக இல்லை. புடவையின் நிறத்திற்கு ஏற்ப இந்த வளையல்களில் ஒன்றைமட்டும் ஒரு கையில் போட்டு, மற்றக் கைக்குக் கைகடிகாரம் போட்டுக் கொள்ளுவது ஒரு நாசூக்காக எண்ணப்படுகிறது. இத்துடன் தங்க வளையல்கள் போட்டுக் கொள்ளுவது அவ்வளவு நாசூக்கில்லை. கைகடிகாரம் இல்லாதவர்கள் கையில் ஒன்று, அல்லது இரண்டு வளையல்கள் போட்டுக் கொள்ளலாம். தங்கத்தில் பழய காலத்துத் தோடா மாதிரியில் செய்து, அதுவும் இந்த வளையலுமாக அணிந்துகொள்ளலாம். மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

மகாபாரதம்

சாந்தி பர்வம்

——

(மோக்ஷ தர்மம்)

மனிதப் பிறப்பின் உயர்வும் அதற்குரிய தர்மங்களும்.

மனிதர்களுக்குப் பிதா மேலான தெய்வம். பிதாவை மாதாவினும் சிறந்தவராகச் சொல்லுகின்றார்கள். ஞானத்தினுடைய லாபத்தைச் சிறந்ததாகச் சொல்லுகின்றார்கள். இந்திரியங்களையும் விஷயங்களையும் ஜயித்தவர்கள் பரமான பிரம்மத்தை அடைகின்றார்கள். ராஜகுமாரனானவன் எப்பொழுது யுத்தகளத்தில் வதத்தை அடைந்து கொளுத்தப்படுகின்றானோ அப்பொழுது தேவர்களாலடைய முடியாத லோகங்களை அடைகிறான். ஸுகமாக ஸ்வர்க்க பலத்தையும் அநுபவிக்கின்றான். களைப்பை அடைந்தவனையும் பயந்தவனையும் ஆயுதம் நழுவினவனையும் அழுகின்றவனையும் புறங்காட்டி ஓடுகின்றவனையும் யுத்தஸாதனம் குறைந்தவனையும் யுத்த ஸன்னாஹம் செய்யாதவனையும் ரோகியையும் யாசிக்கின்றவனையும் இளையவனையும் முதியவனையும் ஹிம்சிக்கக் கூடாது. இவ்வுலகில் ஸமமாயுள்ளவனிடமிருந்தும் மேலானவனிடமிருந்தும் வதமானது ஸ்ரேயஸ்கரமென்பது நிச்சயம். தனக்குக் குறைவானவனிடமிருந்தும் பயந்தவனிடமிருந்தும் தீனனிடமிருந்தும் வதமானது நிந்திக்கப்படுகின்றது. பாபியினிடமிருந்தும் பாவ ஒழுக்கமுள்ள கீழோரிடமிருந்துமுண்டான இந்த வதமானது பாவமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது நரகத்திற்குக் காரணமாகுமென்பது நிச்சயம்.

இவ்வுலகில் தன்னிடம் ஸ்நேகமுள்ளவர்களால் தனக்காகச் செய்யப்பட்ட ஹிம்சையைக் கொடுக்கின்ற எல்லாக் கர்மங்களையும் விலக்க வேண்டும். பிறனுடைய பிராணனால் தன் பிராணனைக் காக்க விரும்பக் கூடாது. மரணத்தை எதிர்பார்க்கின்ற எல்லாக் கிருகஸ்தர்களுக்கும் தமக்குரிய கர்மத்துடன் மணல் திட்டோடு கூடின நதிதீரங்களில் மரிப்பது சோபனம். ஆயுளானது நசித்த காலத்தில் மரணமானது வருகின்றது. அப்படியானால் காரணமில்லாமல் ஏற்பட்டதாகின்றது. தேகத்தை அடைந்து பலாத்காரமாகச் சரீரத்தை விடுகிறவனுக்கு ஆத்மஹத்தி முதலிய காரணங்களால் யாதனா சரீரம் உண்டாகின்றது. அவன் மோக்ஷ மார்க்கத்தைப்பற்றி

னவனானும் இழிந்தவனே. இந்தச் சரீரம் எந்தெந்த நினைவிலிருந்துகொண்டு மரிக்கின்றதோ அதில் அதில் கர்ம யோகத்தால் வாஸனையுடையதாகச் செய்யப்பட்டு ஜனிக்கின்றது. இவன் மறுபடி சில காலம் ஜனிக்காமலுமிருக்கின்றான். மகானான ஜீவன் ஆகாயத்தில் மேகம் சுழலுவதுபோல் சுழலுகின்

புண்ய நக்ஷத்திரத்திலும் புண்ய முகூர்த்தத்திலும் மரணத்தை அடைவானோ, அவன் புண்யம் செய்தவன். விஷத்தாலும் தூக்கினாலும் தீயினாலும் திருடன் கையினாலும் கோரப்பற்களுள்ள பிராணிகளாலும் பசுக்களினாலுமுண்டான மரணங்கள் இழிவானவையென்று சொல்லப்படுகின்றன. மேலான புண்யவான்களுடைய பிராணன்கள் சிரத்தைப் பிளந்துகொண்டு போகின்றன. நடுநிலையான புண்யசாலிகளுடைய பிராணன்கள் நடுவாலும் பாவிகளுடைய பிராணன்கள் கீழாலும் பேதித்துக்கொண்டு போகின்றன.

புருஷனுக்கு அஜ்ஞானமொன்றே பகை. அஜ்ஞானத்திற்கு நிகராக இரண்டாவது பகை

அவமதிக்கின்ற எவனும் காமத்தையே உருவமாகவுடையவனாவான். அவன் காமத்தால் வஞ்சிக்கப்பட்டவனாகிறானல்லவா?

கிருகங்களில் எவர்களுடைய பிராணன்கள் விழுகின்றனவோ அவர்களை உடனே வெளிப்படுத்தலும் ஸ்மசானத்திற்கு வாகனத்தால் கொண்டு போதலும் சுத்தமானவிடத்தில் விதிப்படித் தகனம் செய்தலும் சிறந்த தர்மம். இஷ்டியும் புஷ்டி கர்மாவும் யாகமும் யாகம் செய்வித்தலும் தானமும் புண்யகர்மங்களின் அநுஷ்டானமும் சக்திக்குத் தக்கபடிப் பித்ரு கர்மமும் மேலானவை. இவைகளெல்லாவற்றையும் இந்த மனிதன் தனக்காகவே செய்கிறான்.

ஸ்பெயின் ஸ்திரீகள் படைக்குப் பயிற்சியளிக்கப்படும் காட்சி.

றான். அவன் மறுபடியும் இகலோகத்தில் ஸ்தானத்தை அடைந்து ஜனிக்கின்றான். ஆத்மாவோ மனத்தைக் காட்டிலும் சிரேஷ்டம். மனம் இந்திரியங்களைக் காட்டிலும் சிரேஷ்டம். அநேகவிதமான பிராணிகளுள் ஜங்கமங்கள் மேற்பட்டவை. ஜங்கமங்களுள்ளும் இரண்டு காலுள்ள ஜீவர்கள் மேலானவர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இரண்டு பாதமுடையவர்களுள்ளும் பிராமணர்கள் மேலானவர்களாகக் கருதப்பட்டிருக்கின்றார்கள். வேதியர்களுள்ளும் ப்ரஜ்ஞையுடையவர்கள் மேலாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அறிஞர்களுள்ளே ஆத்மஞானிகள் மேலானவர்கள். ஆத்மஞானிகளுள் அபிமானம் விட்டவர்கள் மேலோர்கள்.

எவன் இகலோகத்தில் ஜனங்களைத் துன்பப்படுத்தாமல் தன்னுடைய சக்திக்குத் தக்கபடி தர்மத்தைச் செய்து இயற்கையாக உண்டான மரணத்தினால் பாவத்தை அலம்பிவிட்டு ஆதித்யன் வடக்குத் திக்கை அடைந்த காலத்தில்

இல்லை. அந்த அஜ்ஞானத்தால் சூழப்பட்டவன் மிகவும் பிரவிருத்தித்துக் கோரமும் மிகவும் ஹிம்சையுள்ளதுமான கர்மங்களைச் செய்கிறான். தர்மத்தை விரும்புகிற புருஷன் இவ்வுலகத்தில் பிரம்மசாரியாகி நியமத்துடன் வேதத்தை ஓதிச் சக்தியினால் ஐந்து மகா யஜ்ஞங்களையும் செய்து தன்னுடைய வம்சத்தை ஸ்தாபித்து ஸ்ரேயஸை விரும்பி வனத்தை அடையவேண்டும். ஸ்திரீ முதலான உபயோகங்களாலே விடுபட்டும் சரீரத்தை மனிதனானவன் நாசஞ் செய்யக்கூடாது.

சண்டாள ஜாதியாயிருந்தாலும் மானிடத் தன்மையானது எல்லா விதத்தாலும் மேலானது. எந்தப் பிறப்பை அடைந்து சுபமான கர்மங்களாலே ஆத்மாவானது ரக்ஷிக்கமுடிகின்றதோ, அப்படிப்பட்ட மானிடப் பிறப்பானது மேலானது. மனிதர்கள், 'இந்தப் பிறவியிலிருந்து எப்படி மிகவும், நஷ்டமாகாமலிருப்போம்' என்று வேதப் பிரமாணமென்கிற உறுதியினால் தர்மத்தைச் செய்கின்றார்கள். தர்மத்தை

தர்ம சாஸ்திரங்களும் வேதங்களும் ஆறு வேதாங்கங்களும் கர்மாவைத் துன்பமென்று நினையாத மனிதனுக்கு ஸ்ரேயஸின் பொருட்டு விதிக்கப்படுகின்றன" என்றார் பராசரர்.

(தொடரும்)

சிவாஜி
ஸ்டோர்ஸ்
12, அவனாசி ரோட்,
கோயமுத்தூர்.

கவலை வேண்டாம்.
உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தெரிவிப்போம்
மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி, S. I. R.

அதிசயம் ஆனால் உண்மை

பண்டைக்காலத்துப் பள்ளிக்கூடங்கள்

(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

7. ஒரு சாலை மாணாக்கர்கள்

குருகுலத்திற் பிள்ளைகள் தங்கள் உயர் நிலையை மறந்து பழகி வந்தார்கள். சக்கரவர்த்தியும் பிக்ஷுகனும் சமமாக இருந்தனர். செல்வநிலையினால் அவர்களுக்குள் வேறுபாடு உண்டாகவில்லை. பெரிய அரச குமாரனாகிய துருபதனும் ஏழைப் பிராமணராகிய கள் படித்துவந்த ஒவ்வொரு நூலையும் தவறாமல் வாங்கிச் சென்று படிப்பார். ஆனால் மறுகணமே அவற்றை மறந்துவிடுவார். நெடுங்காலத்துக்குப் பிறகு பிள்ளையவர்கள் திருவாவடுதுறையாதீன வித்துவானாக விருந்து தமிழ்நாடெங்கும் கவிஞர் தலைவரென்ற பெயர்பெற்று விளங்கிய காலத்தில், ஒரு நாள் மாணாக்கர் தம்முடன் இளமையில் படித்தவரென்று கூறினார்கள். அவ்விருவருக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை இருந்தும் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்த பழக்க மிகுதியே மாறா அன்பை உண்டாக்கியதென்பதை உணர்ந்தோம்.

8. பள்ளிப் பயிற்சி

குருகுலவாசம் செய்தவர்கள் பிக்ஷை யெடுத்துத் தம்



பிரபல அமெரிக்க விஞ்ஞான சாஸ்திரிகள் கிரும் தத்துவ சாஸ்திர காங்கிரஸை முன்னிட்டு லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்கள். இடது பக்கமிருந்து—டாக்டர் ஆர். எஸ். பிரீட், டாக்டர் எச். இ. கோர்ஸலேன், பிரொட் வில்பர்டானர்.

துரோணரும் பாடசாலையில் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகினார்களென்பது பாரதத்திற்கண்ட கதை. அங்ஙனம் பழகிய பழக்கம் வாழ்நாள் முழுவதும் மாறாமல் இருந்ததா. துருபதன் விஷயத்தில் அங்ஙனம் இராமையால், அதற்கேற்ற தண்டனையை அவன் அநுபவித்தான்.

பெரிய அரசனாகிய கண்ணபிரானும் வறிய அந்தணராகிய குசேலரும் ஒரு சாலை மாணாக்கர்கள். பாடசாலையிற் பழகிய பழக்கம் பின்பு வாழ்நாள் முழுவதும் அவர்களிடம் இருந்ததென்பதைக் குசேலோபாக்கியானம் அறிவிக்கின்றது.

என்னுடைய தமிழாசிரியரும் மகா வித்துவானுமாகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இளம்பிராயத்தில் ...த்து வருகையில், அவர் ...டு ஒருவர் படித்துவந் அவர் பிள்ளையவர்களுடன் ஒரு சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் நானும் இருந்தேன் அப்பொழுது முற்கூறிய மனிதர் அந்த வழியே எதிர்வந்தார். அவருடைய தோற்றம் சர்வசாதாரணமாக இருந்தது. அவர் பிள்ளையவர்களைக் கண்டவுடன், "மீனாக்ஷி சுந்தரம்! சௌக்கியமாக இருக்கிறாயா?" என்றார். பிள்ளையவர்களை அவ்வாறு ஒருமையில் ஒருவர் அழைப்பதை அதுவரையில் கேட்டறியாத நாங்கள் திடுக்கிட்டோம். அவ்விருவரும் ஒருவரையொருவர் மிக்க அன்போடு க்ஷேமசமாசாரங்களை விசாரித்துப் பேசியிருந்துவிட்டுப்பிரிந்தார்கள். பிரிந்த பின்னர், எங்களுடைய பார்வையினால் நாங்கள் அவரைப்பற்றி அறியும் விருப்பமுடையோமென்பதை அறிந்த பிள்ளை

ஆசிரியர்பாற் கொடுத்து எஞ்சியதை உண்டுவந்தார்கள். அந்த வழக்கம் அவர்களிடத்திற் பொறுமையையும், பணிவையும் உண்டாக்கியது. ஊரிலுள்ளாரும் அவர்களிடம் மதிப்பு வைத்து ஒழுகி வந்தனர். தாய் தந்தையர் மக்களைப் பெற்ற கடமையோடு அமைகின்றனர். மக்களை மக்களாக்கும் அறிவைப் புகட்டி அவர்களுடைய வாழ்க்கையை இன்ப மயமாக்குவதற்குரிய அடிப்படையான செயலைச் செய்பவன் ஆசிரியனே யாவான். இராமர் முதலிய நால்வரும் வளர்ந்த நெறியைச் சொல்லவந்த விசுவாமித்திரர், "இவர்களைத் தசரதன்பெற்றானென்னும் பெயரேயன்றி, உண்மையில் இவர்களை உலகுக்குப் பயன் படும்படி வைத்தவர் வசிஷ்டரே" என்ற

"திறையோடு மாசிறைஞ்சும்
செறிகழற்காற் றசரதனும்
பொறையோடுந் தொடர்
மனந்தான் புதல்வ
ரெனும் பெயரே காண்
உறையோடு நெடுவேலாய்
உபநயன விதிமுடித்து
மறைபோது வித்திவரை
வளர்த்தானும் வசிட்
டன் காண்"

என்று கூறுகின்றார்.

நிறைந்த செல்வம் முதலிய

அசல் புனா ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE) நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனாபஜார், மதராஸ்.

"குப்த மந்திரம்"
ரூபா 100 இனாம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமொதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனாம். தபால் செலவு உள்பட ரூ 2-7.
SIDDHA MANTRA ASHRAM
No 3;6, P.O. Katrisarai (Gaya)

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக. கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.
BALA KALA STORES,
P. O. Kansi Simri, (Darbhanga.

யனுக்கு வைத்திருந்தும் பயனில்லை. அச்செல்வ மாதியவற்றை நல்வழியில் பயன்படுத்தி வாழும் நிலையை உண்டாக்குவது கல்வியே. ஆதலின் கல்வியை மகன் கற்கும்படி செய்தலே தந்தையின் முதற் கடமை. அரண்மனையிற்பிறந்த அரச குமாரனும் பள்ளிக்கூடத்திற் சாணையிடப்பட்டால்தான் பிற்காலத்தில் பிரகாசிப்பான். மிக்க செல்வமிருந்தும் பள்ளிக்கூடப் பயிற்சியில்லாமற் கெட்டுப்போன ஒருவன் பின்பு தன் தந்தையை நொந்து கொள்வதாக ஒரு புலவர் ஒரு செய்யுளை இயற்றியிருக்கிறார்; அச் செய்யுள்,

"அள்ளிக் கொடுக்கின்ற
செம்பொன்னும்
ஆடையும் ஆதரவாக்
கொள்ளிக்கும் பட்ட
கடனுக்கும்
என்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற
காலத்திலேயென்
துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில
னேதந்தை
யாகிய பாதகனே"

என்பது. செம்பொன்னும் ஆடையும் இருந்தும் பள்ளிக்கூடத்துப் பயிற்சியின்மையால் அவன் கெட்டுப் போனதை இப்பாடல் விளக்குகின்றது.

சென்ற நூற்றுண்டு வரையில் நம் நாட்டில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்து வந்தன. நான் இளமையில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவனே. பிள்ளையவர்களிடம் தமிழ் படித்தகாலத்தைக் குருகுல வாசமென்றே சொல்ல வேண்டும். என்னைப்போன்ற பலர் எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் கல்வியொன்றையே முக்கியமாக எண்ணி அவர்களிடம் படித்துச் சென்றுர்கள்.

கிராமப் பள்ளிக்கூடங்களிலிருந்த உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. தாய் தந்தையருக்கு அடங்காத பிள்ளைகளை உபாத்தியாயர் அடக்கிவிடுவார். பிள்ளைகள் வினத் தெரியுங் காலத்திலேயே ஆசிரியர்களிடம் ஒப்பிக்கப்படுவார்கள். அது முதல் யௌவனமடையும் வரையில் அவர்கள் உலகியலை மறந்து கல்வியே கருத்தாகப் பயின்றுர்கள்.

9. அக்ஷராப்யாஸம்

முதல் முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாஸம் செய்தபொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியரிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.

பிள்ளைகள் அக்ஷராப்யாஸம் செய்யும்போது 'ஓம் நமச்சிவாய' என்றுவது 'ஓம் நமோ நாராயணய' என்றுவது எழுதத் தொடங்குவது வழக்கம். ஜைனர்கள், 'ஓம் ஜிநாயநம:' என்று தொடங்குவார்கள். எந்தக் காரியம் செய்யினும் கடவுளை வணங்கித் தொடங்க வேண்டுமென்ற கொள்கை நம் நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. விஜய தசமியன்று பள்ளிக்கூடத்தில் வைப்பது மரபு. அன்று தொடங்கினுல் கலைமகள் திருவருளுண்டாகுமென்பர். அக்ஷராப்யாஸத்திற்குப் பிறகு ஒவ்வொரு சுவடியையும் படிக்கத் தொடங்கும் காலம் பெரிய திருவிழாவாகச் செல்வர்களாற் கொண்டாடப்படும். சுவடி துவக்கலென்று அதனைச் சொல்வார்கள்.

பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும். அன்று உபாத்தியாயருக்குப் பலவகையான ஊதியம் கிடைக்கும். எழுதிய ஏட்டை மஞ்சட்பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணுக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல, அதை மாணுக்கர் பலரும் சேர்ந்து சொல்வதை முறை சொல்வதென்று கூறுவார்கள். உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களிற் சட்டாம் பிள்ளை முறை வைத்துச் சொல்வதுமுண்டு.

10. மையாடல்

சுவடிகளிலுள்ள எழுத்து தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி யிலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, தர்ப்பைக்கரி, மாவிலைப் பழுப்பின் கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையைத் தடவுவார்கள். அந்த மை எழுத்துக்களை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும். இங்ஙனம் மைதடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனுல், அக்ஷராப்யாஸத்தை "மையாடல் விழா" வென்றுஞ் சொல்வார்கள்.

"ஐயாண் டெய்தி மையாடி
அறிந்தார் கலைகள்".

என்பது சிந்தாமணி.

தமிழைக் குழந்தையாக உருவகஞ் செய்த ஒரு புலவர் "தமிழ் விடுதூதெ"ன்னும் பிரபந்தத்தில் சுவடிக்கு மஞ்சட் பூசுதல், மையிடுதல் முதலியவற்றை,

"மஞ்சட் குளிப்பாட்டி
மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட
மிகவளர்ந்தாய்"

என்று புலப்படுத்துகின்றுர்.

11. முறைவைத்துச் சொல்வுதல்

கம்பர் முறை வைப்பதைப் பற்றி ஓரிடத்திற் சொல்கின்றுர். உபாத்தியாயர் சொல்வதைப் பிள்ளைகள் தொடர்ந்து கூறும்பொழுது பலவகை

நீலகிரி

காப்பிக் கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜூம் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்கு தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானுலும் வி. பி. ரெயில்வே பார்சல் (Passenger Train) மூலமாய் அனுப்பப்படும்.

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக் கொட்டை	ரூபா	5	7	0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)				
1 × 30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ்	,,	15	1	0
1 × 30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு	,,	13	3	0

இன்னும் இதர காப்பிப் பொடி உ திணுசுகளின் விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-T. ஸ்டேன்ஸ் & Co Ltd, கோயம்புத்தூர்

"ஆம், நான் மீண்டும்

யௌவனமும், ஆரோக்யமும்

பெற்றுவிட்டேன்."

"முன்னெல்லாம் நான் சூதகவலியினுல் கஷ்டப்படுவதுண்டு. அதிக இரத்தப்போக்கு காரணமாக அவஸ்தைப்பட்டேன்; வருத்தமும் மெலிவுமடைந்தேன். ஒரு நண்பர் என்னை கல்ஸாஞ சாப்பிடச் சொன்னுர். கல்ஸாஞ இக்கோளாறுகளை யெல்லாம் விரைவில் ஒழித்து, தேகத்திற்கு மீண்டும் இளமையும், ஊக்கமுமளிக்குமென்றும் அவர் கூறினுர்.

அதேமாதிரி நான் கல்ஸாஞ மாத்திரைகளைச் சாப்பிட்டு, அவர் சொல்லியதன் உண்மையை அறிந்தேன். இப்பொழுது எனக்கு எவ்வித வலியோ அசௌக்கியமோ கிடையாது. பலவீனமும், சோர்வும் பறந்துவிட்டன. கல்ஸாஞவினுல் நான் மீண்டும் வலுவும், ஆரோக்கியமும் பெற்றேன். என்னுடைய பற்கள் கூட கெட்டியாகிவிட்டன.

என்னைப்போல் சூதக வலிகளால் கஷ்டப்படுகிறவர்கள் உடனே கல்ஸாஞ மாத்திரைகளைச் சாப்பிட ஆரம்பிக்கவேண்டும். தினந்தோறும் உட்கொள்ளலாம்; சுலபமானவை. மறுபடியும் வாலிபமும், ஆரோக்கியமும் பெற்று வாழலாம்.

Kalzana

மேலான ஆரோக்கியத்திற்கான உலோக உணவு.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

கைபடாமல் தயாரிக்கப்படுவது.

வேறுபாடுடைய ஒலிகளும் ஒன்றுகூடிக் கேட்கும் ஓசையைப் பலவகைத் தவளைகள் சேர்ந்து, சத்தமிடுதலுக்கு உவமையாகக் கூறுகின்றார்.

''கல்வியிற் றிகழ்கணக்
காயர் கம்பலைப்
பல்விதச் சிறாஅரெனப்
பகர்வ பல்லரி''

தமிழெழுத்துக்களின் வரிசையாகிய நெடுங்கணக்கை வாயாற் சொல்லிப் பயிலும் சிறுவர்களைப் பற்றிய செய்தியொன்று சேது புராணத்தில் வருகிறது. கந்தமாதனமென்னும் மலையினருகில் உள்ள பள்ளிக்கூடங்களில் சிறு பிள்ளைகள் தமிழெழுத்துக்களை வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். வாவென்று அவர்கள் சொல்லும்பொழுது வா என்ற எதிரொலி எழுகின்றது. அதனைக் கேட்டவர்கள் 'நம்மை யாரோ வாவென்கிறார்கள்' என்று அருகே சென்று தேடுவார்கள். அவர்கள், போவென்றபொழுது எதிரொலியைக் கேட்டு, ''யார் நம்மைப் போகச் சொல்கிறார்கள்?'' என்று யோசிப்பர். கூவென்றால் யாரோ கூக்குரலிடுகிறார்களேயென்று திகைப்பர். இந்தக் காட்சிகளை வெளியிடும் பாடல்,

''ஒவறு நெடுங் கணக்
கோதி டுஞ்சிறார்
வாவெனு வரையயல்
வருவர் தேருவர்
போவெனு யாரெமைப்
போகென் றாரெனுக்
கூவெனு வெங்ஙனே
கூப்பீ டென்பரால்''
(சேது, கந்த, 75.)—

என்பது.

12. மணலில் எழுதுதல்

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்கள் கை நன்றாகத் திருந்தும். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள். இங்ஙனம் தரையில் எழுதும் பழக்கத்தைக் ''கந்த புராண'' ஆசிரியர் அவையடக்கத்தில்,

''இறைநிலம் எழுதுமுன்
இளைய பாலகன்
முறைவரை வேனென
முயல்வ தொக்குமால்
அறுமுகம் உடையவோர்
அமலன் மாக்கதை
சிறியதோர் அறிவினேன்
செப்ப நின்றதே''

என்று அமைக்கின்றார்; ''நான், முருகக் கடவுளுடைய கதையைச் சொல்லப் புகுந்தது, சிறிதளவு தரையில் எழுத்துக்களை எழுதுவதற்கு முன்னே ஒரு பாலகன் நூலொன்றை எழுதுவேனென்றும் முயல்வதை ஒக்கும்'' என்பது இதன்பொருள். கல்வியில் முதற்பருவம் தரையில் எழுதத் தொடங்குவது; முற்றிய பருவம் நூலாசிரியத் தன்மை. இவ்விரண்டையும் இணைத்து இந்தச் செய்யுளிற் கூறியிருக்கிறார்.

இங்ஙனம் எழுதிப் பழகுவதனால் பிள்ளைகளுடைய எழுத்துக்கள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.

13. கையெழுத்து

''கொம்பு சுழி கோணாமல்'' எனவரும் பழைய வெண்பா ஒன்றுண்டு. எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல் வரி கோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். பழைய ஏட்டுச் சுவடிகளைப் பார்த்தால் இது விளங்கும். இங்ஙனம் அமைந்த எழுத்துக்களைப் பார்த்தவரும் எழுதியவருமாகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்தில் எழுத்துக்களின் ஒழுங்கான வரிசையை ஒரு பெரிய நகரத்தின் தெருவிலுள்ள மாடவரிசைக்கு உவமை கூறியிருக்கின்றார்:

''பொறித்த சிரெழுத்
தொழுக்கெனப்
பொற்றமாடங்கள்
செறித்த வார்நிரை
வீதியிற் சிலவளம்
மொழிந்தாம்''

ஒவ்வோரெழுத்தும் தத்தமக்குரிய தனியமைப்போடு வரிசையாக அமைந்திருத்தலைப்போல மாடங்களும் தத்தமக்குரிய தனியலங்காரங்களோடு வரிசையாக விளங்கின. பல எழுத்துக்கள் சேர்ந்து வரிகளும், பல வரிகள் சேர்ந்து பக்கமும், பல பக்கம் சேர்ந்து நூலுமாவதுபோலப் பல வீடுகள் வீதிகளாகவும், பல வீதிகள் நகரப் பிரிவுகளாகவும், பல பிரிவுகள் ஒரு பெரிய நகரமாகவும் அமைந்தனவென்ற விரிவும் இந்த உபமானத்தால் கொள்ளக் கிடக்கின்றது.

14. எழுத்தின் வடிவம்

எழுத்துக்களின் உருவங்கள் மாறாமல் பல காலம் இருந்து வந்தன. புள்ளி, கால், கோடு, கீழ் விலங்கு மேல் விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புக்கள். பெரியோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பலநூறு வருஷங்களாகியும் எழுதும் வழக்கத்திற் கதிக மாறுபாடுகள் ஏற்படவில்லை. தொல்காப்பியமென்னும் இலக்கண நூலிற் சொல்லப்பட்ட எழுத்துக்களின் வடிவத்திற்கும் அந்நூலிற்குப் பல வருங்களுக்குப் பிறகு உண்டான நன்னூலில் சொல்லப்படும் எழுத்துக்களின் வடிவத்திற்கும் சிறிதளவே வேறுபாடு இருக்கிறது. நன்னூலார் ''தொல்லைவடிவின எல்லா எழுத்தும்'' என்று வற்புறுத்திக் கூறுகின்றார். நாளுக்கொரு கோலமாக வஸ்துக்கள் மாறும் இந்த உலகத்தில் இப்படிப் பல நூறு வருஷங்களாக எழுத்துக்கள் விசேஷ மாறுபாடுகளை அடையாதிருந்தமைக்குக் காரணம் பள்ளிக்கூடத்திற் செய்து வைத்த பழக்கமேயாகும்.

மகா வித்துவானாகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் மாயூரப் புராணத்தில் நைமிசவனத்தை நெடுங்கணக்குக்கு ஒப்பிடுகிறார்.

கோடு, கால், புள்ளி, மேல் விலங்கு, கீழ் விலங்கு என்னும் எழுத்தின் உறுப்புக்களின் பெயர்களால் மரங்களின் உறுப்புக்களும் குறிக்கப்படும். மரங்களும் கோடுடையவை; கோடென்பது கொம்பிற்குப் பெயர். மரங்களிலும் கால் இருக்கின்றன; அடி மரத்தைக் காலென்று சொல்வது வழக்கம். புள்ளியுடைய மரங்கள் இருக்கின்றன. மேலே விலங்கும் தன்மையின; கீழே விலங்கும் தோற்றத்தையுடையன. விலங்குதல் கோணுதல், வளைதல், இவற்றால் அவ்வனம் நெடுங்கணக்கென்று கூறத்தகுமென்கின்றார். இக்கருத்துடைய செய்யுள்,

''கோடு கொண்டன பல்லகால்
கொண்டன பல்ல
கூடு புள்ளிகள் கொண்டன
பல்லமேல் விலங்கும்
பாடு கொண்டன பல்லகீழ்
விலங்குவ பல்லநீடு
மின்னதால் நெடுங்கணக்
கெனத்தகையம் இன்றே''

என்பது.

15. மனனப் பயிற்சி

அக்காலத்துப் பாடமுறைக்கும் இக்காலத்து முறைக்கும்

மருவுகள், பருவுகள்
முதலிய தோல் வியாதிகள்
ஸ்திரீகளின் அழகைக்
கெடுக்கின்றன.

தெளிவும், மிருதுவும், மேன்மையுமான தோல் அதிக மனோகரமானதென்று ஒவ்வொரு ஸ்திரீக்கும் தெரியும். இந்தகாரணத்தினாலேதான் ஆயிரக்கணக்கானவ்ர்கள் குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகிக்கிறார்கள். குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) தினந்தோறும் உபயோகித்தால் அது தோலைச் சுத்தமாக்குவதுமல்லாமல் அழுக்கைநீக்கி, வேர்க்குரு பருவுகள் முதலிய அவலக்ஷணங்களை போகச் செய்யும்.

இந்த செழிப்புள்ள நோய் தடுக்கும் நுரை நல்ல வாசனையாயும், உல்லாசமாயுமிருப்பதுமன்றி திரேகமுழுதற்குப் சவுக்கியத்ஙதக் கொடுக்கும். உனக்கு கரப்பானாவது மற்ற எந்த தோல்நோய்களினாவது கஷ்டம் வந்தால் குடிகூரா தைலத்தை (Cuticura Ointment), சோப்புக்கட்டியால் கழூவுமுன் உபயோகிக்கவேண்டும். அது தோலைத் தேற்றி ஆற்றி தெளிவாக்குகிறது.

குடிகூரா சோப்புக்கட்டி
CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.

41, ஸசா அவஸ், மாடுங்கா, பம்பாய்.

ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜன மாத்திரை
"பாலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்

பெரிய வேறுபாடு உண்டு. அடிப்படையான நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாகவே இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் முதலியன பாடமாக இருக்கும். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம் முதலிய பலவகை வாய்ப்பாடுகள் பாடமாகவேண்டும். வடமொழியில் அமர முதலிய மனனமாக வேண்டும். ஞாபக சக்தியை விருத்திபண்ணுவதை மிகவும் முக்கியமானதென்று பழைய காலத்திற் கருதினர். அதற்காகப் பலவகையான முறைகள் இருந்தன. வேதத்திலுள்ள கனம், ஜடை முதலிய முறைகளைப் பார்க்கையில், அவையும் மனனத்தின் மிகுதியைக் காட்டுவனவென்பதை அறியலாம். "தலைகீழ்ப் பாடம்" என்று சொல்வதை அம்முறைகளிற் காணலாம்.

இளங்குழந்தைகளுக்கு ஞாபக சக்தியை விருத்தி பண்ணுவதற்கு உபாத்தியாயர்கள் சில முறைகளை மேற்கொண்டனர். பள்ளிக்கூடம் விட்டுப் பிள்ளைகள் வீட்டுக்குப் போகும்போது அவர்களிடம் ஒரு மலரையோ, ஒரு காயையோ, ஒரு பழத்தையோ ஒரு விலங்கையோ, ஒரு பறவையையோ சொல்லி, மறுநாள் வரும்போது அதைச் சொல்ல வேண்டுமென்று உபாத்தியாயர் நியமிப்பார். பிள்ளைகள் தம் வீடு சென்றவுடன் உபாத்தியாயர் சொன்னவற்றைத் தம் தாய்மார்களிடம் சொல்லிவிடுவார். தாங்களும் மனத்தில் வைத்துப் படுத்துக் கொள்வார்கள். விடியற்காலையில் எழுந்தவுடன் அவற்றை ஞாபகப் படுத்திக் கொள்வார்கள். தம் தாய்மார்களிடம் அவற்றைச் சொல்லி அவை சரியா என்பதை அறிந்துகொண்டு உபாத்தியாயரிடம் சொல்வார்கள். இதனால் அவர்களுடைய ஞாபகம் விருத்தியாயிற்று.

இளம் பிள்ளைகள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பவை அகராதி வரிசையில் அமைந்தமை அவர்களுடைய ஞாபகத்தில் பதிவதன் பொருட்டேயாகும். இப்படியே அந்தாதி முறையைக் கொண்டும், எதுகை மோனைகளைக் கொண்டும், செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள். அந்தாதி நூற்களை இளம்பருவத்தே கற்பிப்பதற்குப் பயன் ஞாபகசக்தி விருத்தியடைவதே. நிகண்டு எதுகைவகையில் அமைந்ததும் ஞாபகத்தில் எளிதிற் பதிவதன் பொருட்டேயாகும். நூல்களிலுள்ள செய்யுட்களின் முதல் நினைப்பை எழுதி, அதைப் பாடம் பண்ணிக்கொண்டு அதன்படி நூற் செய்யுட்களை ஞாபகம் வைப்பது பழைய வழக்கம். இதற்காக யாப்பருங் கலக் காரிகையில் முதல் நினைப்புச் செய்யுட்கள் இருக்கின்றன. வடமொழியிலும் ரூபாவதாரம் முதலிய நூல்களுக்கு இத்தகைய சுலோகங்கள் உண்டு. அவற்றை நீதக சுலோகங்கள் என்று கூறுவார்கள். திவ்யப் பிரபந்தத்திலுள்ள அடிவரவும் இத்தகைய கருவியேயாகும்.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் தமக்குத் தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்கு கூடிக் கேள்விகேட்டும் விடை கூறியும் கற்று வருவார்கள். இதனால் அவர்களுடைய கல்வி எந்தச் சமயத்திலும் தடையின்றிப் பயன்பட்டது. புத்தகத்தின் துணையின்றியும் குறிப்புக்களின் துணையின்றியும் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசுவதும், ஒருசெய்யுளுக்குப் பொருள் கூறுவதும், ஒரு செய்தியுள்ள இடங்களைச் சொல்லுவதும் அவர்களுக்குச் சுலபமாக இருந்தன. ஒருவர் ஒரு செய்யுள் சொல்லுவதும், அச்செய்யுளின் ஈற்றில் உள்ள பதத்தை முதலாக வுடைய வேறொரு நூற் செய்யுளை மற்றொருவர் சொல்வதும், இப்படியே இந்தத் தொடர் அறுமல் மாலைபோலச் சொல்லிக் கொண்டு வருவதுமாகிய ஒரு பழக்கம் முன்காலத்தில் இருந்தது. வழி நடக்கையிலும், உபாத்தியாயர் பூஜைக்காகப் புஷ்பங்கள் பறிக்கையிலும் மலர்களைத் தொடுக்கையிலும் இலை தைக்கும்போதும் இப்படியே சொல்லிச் சொல்லிப் பழகினார்கள்.

தனியே இருந்தாலும் இந்தப் பழக்கத்தைச் செய்து வந்தார்கள். பாடம் தவறிவிட்டால், உடனே ஏட்டையெடுத்து அந்த இடத்தை மீண்டும் நினைவுறுத்திக் கொள்வார்கள். அதற்காக எப்பொழுதும் ஏட்டை உடன் வைத்திருப்பார்கள்:

"பாட மேறினும்
ஏடு கைவிடேல்"

என்பது இந்த வழக்கத்தை ஒட்டி எழுந்ததாகும்.

16. விடியற்காலையில் எழுதல்

மாணாக்கர்கள் விடியற்காலை எழுந்து படித்து வந்தார்கள். இந்தப் பழக்கத்தை உபாத்தியாயர் உண்டாக்கி வைப்பார். முதற்கோழி கூவும்பொழுதே பள்ளிக்கூடத்துக்குச் சில பிள்ளைகள் வந்துவிடுவார்கள். நேரங்கழித்து வந்தால் உபாத்தியாயர் பிரம்பால் அடிப்பாராகையினால், எல்லோருக்கும் முன்பே போய்விடவேண்டுமென்று கருதித் தூங்கிக் கொண்டிருக்கும் தாய்தந்தையரைத் தாமே எழுப்பி, உடன் அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடம் செல்பவர்களும் உண்டு. உபாத்தியாயர் பிள்ளைகளிடம் பழைய பாடத்தைக் கேட்டு பழையதுக்காக வீட்டுக்கு விடும்போது அவர்கள் காலையில் வந்த நேரத்தை அநுசரித்து வரிசையாக நிறுத்தி வைப்பார். முதலில் வந்தவனுக்கு 'வேத்தான்' என்று பெயர். வேற்றான் என்பதன் மரூஉவே அது. மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் வேற்றான் சிறப்புடையவனாதலின் அப்பெயர் வந்தது. அவனுடைய கையில் உபாத்தியாயர் பிரம்பால் ஒருமுறை மெல்லத் தொடுவார். அடுத்தவன் கையில் இரண்டுமுறை மெல்ல நீவுவார். வரவர அடியின் பலமும் கணக்கும் அதிகமாகும். இறுதியிலுள்ள பையனுக்கு மிகப் பலமான அடிகள் பல கிடைக்கும். இந்தத் தண்டனைக்கு அஞ்சிப் பிள்ளைகள் விடியற் காலையிலே எழுந்து வந்து விடுவார்கள். முதல் நாளில் இறுதியில் வந்த மாணாக்கன் மறுநாள் எல்லோருக்கும் முந்தியே வந்து விடுவான். அவனுக்குப் பிறகு வந்தவன், தானே முதலில் வந்ததாக எண்ணிக் கொள்ளாமல் இருப்பதன் பொருட்டு முன்னே வந்திருப்பவன் அவன் வருங்காலத்திற் கணைப்பான், பொய்பேச அறியாத அவர்களுள் 'யார் முன் வந்தது?' என்ற சண்டை உண்டாகாது.

(தொடரும்.)

கொசுக்களைக் கொல்ல உபயோகமற்ற "கிருமி நாசினிகளை" நம்பாதீர்கள் பிளிட் தெளியுங்கள்

FLIT

"பிளிட்" என்ற பெயருடன் விளங்கும் போலிச் சரக்குகளை நம்பாதீர்கள். கறுப்புப் பட்டையுடன் கூடிய சோல்ஜர்கொண்ட மஞ்சள் டின்னிலேயே "பிளிட்" விற்கப்படுகிறது. இடுக்குகளில் "பிளிட்" தெளியுங்கள். ஊர்வன அதைத் தொட்டு மடிகின்றன.

ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி.டி கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

"ஜனனா க்ரீம்"

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும் சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—
SHIVLAL & CO.,
Princess Street, Bombay 2.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை
ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா

"ஸங்கீத அபிமானி"

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை.
உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 3—0.
1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யும் விலை ரூ. 3.
ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

சிறுவர் பகுதி

மெட்ராஸ் காலிங்

(என். ஆர்)

அண்ணன் தம்பிகளே! அக்கா தங்கைகளே! நான் இன்று குழந்தைகளைப் பற்றிப் பேசப்போகிறேன். அவர்களைப் பற்றிப் பேச எனக்கு யோக்யதை யுண்டு. ஏனென்றால் நான்கூட ஒரு சமயம் குழந்தையாயிருக்கும்படி நேரிட்டுவிட்டது.

நேற்று நான் ராமுவைப் பார்க்கப்போனேன். அப்பொழுது அவன் தம்பிப் பாப்பா கத்திக்கொண்டிருந்தான். உள்ளே ஏதோ படித்துக்கொண்டிருந்த அவன் அப்பா, "அடியே! குழந்தை கத்துகிறது, பால் போட்டு" என்றார். அம்மா வந்து பால் போட்டிவிட்டுப் போனாள். பத்து நிமிஷத்துக்கெல்லாம் குழந்தை மறுபடியும் கத்திற்று. அப்பா புஸ்தகத்தை விட்டுக் கண்ணை எடுக்காமல் "குழந்தைக்குப் பசிபோலிருக்கிறது. பால் போட்டு" என்றார். எனக்குப் பயமாய்ப் போய்விட்டது. கத்துகிறபோதெல்லாம் வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்தால் குழந்தையின் கதி என்னவாகும்!

ஒன்று கத்தும்போதெல்லாம் பால் கொடுப்பார்கள், அல்லது தூங்கப் பண்ணுவார்கள். வருஷக் கணக்காக எத்தனையோ குழந்தைகள் வளர்த்து வந்திருக்கிறார்கள். ஆனால் குழந்தை இன்ன சமயத்தில் இன்ன விதமாய் அழுதால் எதற்காக அழுகிறது என்று ஒரு அப்பா அம்மாவுக்கும் தெரிகிறதில்லை. ஹோப்லெஸ்!

குழந்தைக்கு விளையாட வேண்டுமென்றோ, அல்லது யாராவது தூக்கிக்கொண்டு வாக்கிங்போனால் 'வாக்கிங்' போய் வரலாமென்றோ ஆசையாயிருக்கலாம். ஒரு வேளை ஸினிமா பார்க்க வேண்டுமென்றுதான் ஆசையோ, என்னமோ? அல்லது பாவம், உடம்பில் ஏதாவது வலி உண்டாகிக் கத்தினாலும் கத்தலாம். எது நிஜமான காரணம் என்று ஒருவருக்கும் தெரிகிறதில்லை. குழந்தை பிடிபடாமல் கத்தினால் தொட்டிலில் போட்டுக் குலுக்கிக் குலுக்கி ஆட்டுவார்கள். ஆட்டுகிற வேகத்தில் தேகம் அசந்துபோய்க் குழந்தைகள் மயக்கத்தால் தூங்கிவிடும்.

சில அப்பா அம்மா இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகள் விஷயத்தில் ரொம்ப ரொம்ப ஜாக்கிரதை. குழந்தை கதகதவென்றிருக்கிறதே என்று அம்மா சொல்லுவாள். அவள் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அப்பா ஓடிப்போய் ஒரு டாக்டரை அழைத்து வந்துவிடுவார். பாட்டி ஒருத்தி இருந்துவிட்டாலோ சதா தொந்திரவுதான். "நாலா நாள் மழைக்கு யோகமென்று பஞ்சாங்கத்திலே போட்டிருக்கு. குழந்தைக்கு ஜலதோஷம் பிடிக்கப் போகிறது. ஜாக்கிரதையாயிருக்கணும்" என்று சொல்லி ஒரு கம்பிளியைப் பத்தாக மடித்துப் போட்டுப் போர்த்திவிடுவாள்.

என் தங்கையை மாதா மாதம் ஒரு தரம் ஒரு டாக்டர் வந்து பார்த்துவிட்டுப் போவார். "குழந்தைக்கு வயிற்றில் கட்டி இல்லை" என்று அவர் வாயால் சொல்லவேண்டுமாம். இதற்காக அவர் என் தங்கையின் வயிற்றைப் பிடித்துப் பிசைந்து



ஜைகால் விகர் பில்ஸ்.

இம்மாத்திரைகள் நவீன முறையில் நன்கு தயார் செய்யப்பட்டு இருக்கின்றன. இம்மாத்திரைகளை யாரும் உட்கொள்ளலாம். இதனால் பசியின்மை, நித்திரை குறைவு, சோகம், நரம்புத் தளர்ச்சி, மூளைக்கலக்கம், கைகால் ஓய்ச்சல் முதலியவைகள் நீங்கிப் புதிய உற்சாகம் உண்டாகும். சீக்கிரத்தில் வலுவையும், யௌவனத்தையும் அளிக்கக் கூடியது. இது ஒரு பாட்டில் சாப்பிட்ட மாத்திரத்தில் குணம் தெரியும். 21 மாத்திரைகள் கொண்ட புட்டியின் விலை ரூ. 2

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

ரத்னம் அண்டு கோ.,

கெமிஸ்ட் & டிரகிஸ்ட்

23, சைனுபஜார் ரோடு, ஜி. டி. மதராஸ்.

கெற்ப சஞ்சீவி எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி

பிசைந்து பார்ப்பார். எனக்கு அப்பொழுது அப்பளாத்து மா பிசைவது ஞாபகம் வரும். அந்த டாக்டர் மனுஷனுக்கு ஈவு இரக்க மென்பதே கிடையாது. தங்கை வலி தாங்காமல் கத்துவாள். டாக்டர் பின்னால் மெதுவாகப் போய் வெடுக்கென்று கிள்ளிவிட்டு வந்துவிடலாமாவென்று எனக்குத் தோன்றும். குழந்தை வயிற்றைப் பிசைவதற்காக டாக்டருக்கு ரூபாய் கூடக் கொடுக்கணுமாம்.

* * * *

இதெல்லாம் நாம் வியாதியில்லாமல் இருக்க வேண்டுமென்று செய்கிறார்களாம். தொலைந்து போகிறது. ஆனால் அதற்காகக் குழந்தைகளை ஏன் அவமரியாதையாக நடத்த வேண்டுமென்று தெரியவில்லை.

பாருங்கள்! நேற்று எங்கள் வீட்டுக்கு ஒரு தாத்தா வந்திருந்தார். அவர்கூட ஒரு குழந்தைதானோ என்று சந்தேகப்பட்டேன். ஏனென்றால் அவருக்கும் ஒரு பல் கூடக் கிடையாது. அவர் என்னிடம் வந்து "கிட்டு, உன் தங்கையைத் தவிட்டுக்கு வாங்கித்துடா" என்றார். எனக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது. முதலில் தவிடு வீட்டிலேயே கிடையாது. கடையில் போய்த்தான் வாங்குகிறோம். தவிட்டுக்கு வாங்கும்படி என் தங்கை அவ்வளவு மட்டமா என்று எனக்குத் தெரியவில்லை. குழந்தைதானே! அவர்களைப் பற்றி எது வேண்டுமானாலும் சொல்லலாம் என்றே இப்படி அவமரியாதையாய்ப் பேசுகிறார்கள்.

இன்னொரு விஷயம். குழந்தைகளிடம் பெரியவர்கள் பேசுவதைப் பார்த்திருப்பீர்களே! என்னமோ பரிகாஸம் பண்ணுகிறது போலில்லையா? குழந்தையைப் பார்த்து, "மம்மு வேணுமா?" என்று கேட்கிறார்கள். மம்முவாம் மம்மு! வார்த்தையின் அழகைப் பார்த்தீர்களா? நடுத்தெருவில் இதுமாதிரி சொல்லிக் கொண்டு போனால் பயித்திய ஆஸ்பத்திரியில் வைத்துவிடுவார்கள். வாத்தியாரிடம் "மம்மு சாப்பிட்டேன். லேட் ஸார்" என்றால் நல்ல பூசை கிடைக்கும்.

"குழந்தைகள்தானே" என்று அலக்ஷியமாய் மரியாதை இல்லாமல் 'மம்மு' 'கோந்தை' 'இட்டாச்சு' என்றெல்லாம் உளறிக் கொட்டுகிறார்கள். எனக்கென்னமோ இந்த வார்த்தைகளைக் கேட்கும் குழந்தைகள் பெரியவர்களுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதென்று நினைத்துக் கொள்ளும் என்றுதான் தோன்றுகிறது. குழந்தைகளுக்கு எப்படிச் சொன்னாலும் புரியப்போகிறதில்லை என்பார்கள். அப்படியானால் "குழந்தாய்! நீர் சிறிது உணவு உட்கொள்வீராக" என்று ஏன் கேட்கக்கூடாது? எங்கள் தமிழ் வாத்தியார் அது மாதிரித்தான் பேசுவார். இனிமேல் "இப்படி இப்படி வளர்க்கிறோம்" என்று அப்பா அம்மா விவரமாக எழுதிக் கொடுத்தாலொழிய நாம் குழந்தைகளாகப் பிறக்கக்கூடாது.

ஹல்லோ குட்நைட் எவ்வரிபாடி!

வெண் குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram,
No. 32/5, P. O. Katrisarai Gaya)

ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.)Panchpota, BENGAL.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY. 2



சரித்திரப் பகுதி

ஸாஞ்சி ஸ்தூபங்கள்

"குறள்"

ஏறக்குறைய அறுபது வருஷங்களுக்குமுன் பிரெஞ்சுசக்ரவர்த்தி மூன்றாம் நெப்போலியன் மத்திய இந்தியாவின் போபால் நாட்டில் ஸாஞ்சி என்ற கிராமத்தின் அருகே ஒரு மலையின்மீது புராதன இந்தியாவின் ஒப்பற்ற சிற்பத்தொழில் அமைந்த அழகிய பௌத்த ஸ்தூபங்கள் இருப்பதாகக்கேள்விப்பட்டு, போபால் ராஜ்யத்தின் அரசியான நவாப் ஸிக்கந்தர் பீகம் ஸாஹிபாவிடம் ஸாஞ்சியின் பெரிய ஸ்தூபத்தின் சித்திரித்த வாயில் ஒன்றைத் தனக்குப் பரிசாக அளிக்கும்படிக் கேட்டார். பீகம் ஸாஹிபா, பாவம்! ஒன்றும் அறியாதவர்; மிகவும் தாராள குணமுடையவர். அவர், "இதற்கென்ன? கொடுத்துவிட்டால் போகிறது?" என்று தீர்மானித்தார். இதற்குள் அதிர்ஷ்டவசமாக இங்கிலீஷ் ரெஸிடெண்டின் தூண்டுதலின் பேரில் இந்திய கவர்ன்மெண்டார் பண்டைக் கலைச் சின்னங்களை வெளியேற்றக்கூடாது என்று கூறிவிட்டு, 1869-ல் மிகச் செலவுடன் பெரிய ஸ்தூபத்தின் சிறந்த கிழக்கு வாயிலின் பல வார்ப்பு நகல்களைத் தயாரித்து பாரிஸ், லண்டன், எடின்பரோ, டப்ளின், பர்லின் முதலிய ஐரோப்பிய நகரங்களுக்கு அனுப்பினர்.

விந்திய மலைப் பிரதேசத்திலே ஜனநடமாட்டமில்லாத ஒரு குக்கிராமத்துக்கு இவ்வளவு பெருமை ஏன் வரவேண்டும்? இன்றுகூடச் சுற்றுக் கிராமத்தார் ஸ்தூபங்களை "மாமியார் மனைவியின் வரட்டிக் குவியல்கள்" என்று ஏளனமாக அழைத்து வருகின்றனரே, இவைகளின் உண்மையான வரலாறு என்ன? இந்தப் பௌத்தச் சின்னங்களின் முக்கிய விசேஷங்கள் யாவை?

இக்கேள்விகளுக்கு விடையளிக்க முயல்வோம்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் ஸாஞ்சியின் அருகே விதிசம் என்று ஒரு பெரிய நகரம் மாளவ நாட்டின் ராஜதானியாய் இருந்தது. இங்கே பௌத்த மதம் செழித்தோங்கி இருந்தது. நகரத்துக்குச் சற்று ஒதுங்கியும் நெடுந்தூரமில்லாமலும் இருப்பதன் பொருட்டுப் பௌத்த பிக்ஷுக்கள் ஸாஞ்சிக் குன்றுகளின்மீது ஸ்தூபங்களையும் சேதியங்களையும் மடங்களையும் கட்டிக் கொண்டனர். பெருமை வாய்ந்த அசோக மஹாராஜனுடைய தேவி என்ற ஒரு அரசி விதீசத்தைச் சேர்ந்தவளென்றும், அவள் விதீச நகருக்கருகே சேதியகிரி என்ற மலையின்மீது ஒரு விஹாரத்தை நிர்மாணித்தாளென்றும் சிங்களச் சரிதமாகிய மஹாவம்சம் கூறுகிறது. அசோகனது பெயர் பெற்ற ஸ்தம்பம் ஒன்றும் ஸாஞ்சியில் இருக்கிறது. அதன் சாஸனத்தில் இங்கே பௌத்தம் சங்கம் நெடுநாளாக இருந்துவந்ததும், அசோகர் காலத்தில் பௌத்த சங்கத்தில் ஒரு சண்டை ஏற்பட்டு, அசோகர் அவர்களுக்குப் புத்திமதி அளித்ததும் வெளியாகின்றன. அசோகருக்குக் கொஞ்சகாலம் பின்பு சுங்க வம்சத்தார் மகத நாட்டை ஆண்டனர். இவர்களுள் அக்னிமித்ரன் என்பவன் விதீசத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்தான் என்பது மஹாகவி காளிதாஸருடைய, "மாளவிகாக்னி மித்ரம்" என்ற நாடகத்திலிருந்து தெரிகிறது. பிறகு ஆந்திரர் காலத்தில் ஸ்ரீ சாதகர்ணி என்ற ஆந்திர அரசரும், குப்தர் காலத்தில் சந்திரகுப்த விக்ரமாதித்யரும் ஸாஞ்சியின் பௌத்தரை ஆதரித்ததற்குக் கல்வெட்டுக்கள் ஆதாரம் காட்டுகின்றன. பௌத்தமதம் இந்தியாவில் நசித்துப்போனதுடன் பிரகிருதியைத் தவிர வேறொருவரும் கவனிப்பாரில்லாமல் ஸாஞ்சியின்கட்டடங்கள் மரங்களாலும் புதர்களாலும் மூடப்பட்டன. முகம்மதியர் காலத்தில் ஸாஞ்சிக்கு ஐந்து மைலில் உள்ள பில்ஸா நகரம் நான்கு முறை படையெடுக்கப்பட்டும் ஸ்தூபங்கள் க்ஷேமமாகவே இருந்தன. 1819-ல் பெல் என்ற ஆங்கிலேயர் பார்த்த பொழுது ஸ்தூபங்களின் ஒரு கல்கூட அசையவில்லை என்று அவர் எழுதியிருக்கிறார். இதற்குப் பின்புதான் புதையல் கவரும் ஆசையுள்ளவர்களும் ஆராய்ச்சிமுறை அறியாதவர்களும் கட்டடங்களைப் பாழாக்கினர். சுற்றுக் கிராமத்தார் ஸ்தூபங்களின் கற்பலகைகளை இயந்திரம், அம்மி முதலியவை செய்யக் களவாடிச்சென்றனர். சிலர் சிற்பங்களை விளையாட்டுக்காகவே பின்னம் செய்தனர். கடைசியாக 1881-ல் இந்திய கவர்ன்மெண்டார் ரூ 17,400 செலவுசெய்து மேஜர் கோல் என்பவரைக் கொண்டு கட்டடங்களைச் சுத்தம் செய்வித்துக் காவற்காரர்களையும் நியமித்தனர். பிறகு கலின்ஸ் என்ற சிலாசாஸன உத்தியோகஸ்தர் வெகு சிரமத்துடன் ஸ்தூபச் சிற்பங்களை 200 புகைப்படங்கள் எடுத்தார். இதுவரையில் ஸாஞ்சியில் முக்கியமானவை ஸ்தூபங்களே என்று கருதி வந்தனர். ஆனால் 1912-ல் ஸ்தூபங்களின் பக்கத்தில் நிலமட்டத்துக்குக் கீழ் பல மடங்களும் ஆலயங்களும் புதைந்து கிடப்பதை ஸர் ஜான் மார்ஷல் கண்டு பிடித்து, அவைகளில் பலவற்றைத் தோண்டச்



ஆகாய விமானப் படையைச் சேர்ந்த இராத்திரி ரோந்துக்காரர்கள் அவர்கள் உபயோகிக்கும் சர்ச்லைட் படத்தில் காணப்படுகிறது.

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

செய்து, ஸ்தூபங்களின் உண்மையான செய்திகளை ஆராய்ந்திருக்கிறார்.

இதற்கு முன் ஸ்தூபங்களைப் பற்றிப் பல தவறான அபிப்பிராயங்கள் இருந்தன. பௌத்தக் கலையில் முதன் முதலில் ஸித்தார்த்தர் ஸ்தூல உருவத்தில் காட்டப்படவில்லை. அவரிருப்பது சில சின்னங்களால் குறிக்கப்பட்டது. ஒரு தாமரை அல்லது தாமரையின்மீது மாயா தேவியும் இரு பக்கங்களில் யானைகளும் ஸித்தார்த்தர் பிறப்பைக் காட்டின. குதிரையின் உருவம் ஸித்தார்த்தர் அரண்மனையை விட்டுச் சென்றதை வெளியிட்டது. ஒரு ஆசனத்தைச் சுற்றிலும் அரக்கர்களும் பெண்களும் நிற்பது காமன் ஸித்தார்த்தர் தவத்தைக் கலைத்ததை விளக்கிற்று. ஒரு மரத்தடியில் ஒரு ஆசனம் ஸித்தார்த்தர் போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றதை அறிவித்தது. ஒரு சக்கரம் புத்தர் உபதேசித்த உலகின் நியாயச் சக்கரம். ஒரு திரிசூலம் புத்தர், தர்மம், ஸங்கம் என்ற திரிரத்தினக் கொள்கையைக் காட்டிற்று. இவைகளுடன் புத்தரின் (ஜாதக) முற்பிறப்புக் கதைகளும் பிம்பிஸாரர், அசோகர் காலத்து பௌத்த மத நிகழ்ச்சிகளும் சிற்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஷயங்களையெல்லாம் அறியாமல் சிற்பங்களில் அடிக்கடிக் காணும் மிருகம், நாகம்; செடி, கொடி முதலியவைகளிலிருந்து ஸ்தூபங்கள் பிரகிருதியை வழிபடும் ஒரு அநாகரிக ஜாதியாரைச் சேர்ந்தவை என்று பெர்குஸன் ஆசிரியர் எண்ணினர். மெய்ஸி என்பவர் இவை பண்டைப் பாரஸீகத்தின் மித்திர மதத்தினருடையவை என்றார். இத்தவறுகள் பூசே என்ற பிரெஞ்சு அறிஞருடைய ஆராய்ச்சிகளில் அடிபட்டுப் போயின.

ஸாஞ்சிச் சிற்பங்களைப்பற்றிய மற்றொரு பெரிய தவறான அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டு ஆலயங்களின் முக்கியமான செய்திகளைக் குறிப்போம். ஸாஞ்சியின் சில மண்டபச் சின்னங்களும், சிற்பங்களின் சில பூவேலைகளும், சிங்கம் முதலிய உருவங்களும் கிரேக்க அஸ்ஸீரியக் கலையை ஒத்திருப்பதாகவும், இதிலிருந்து மேனாட்டுக்கலை ஸாஞ்சியிலும் பரவியிருந்ததாகவும் பல ஆசிரியர்கள் கூறுகின்றனர். உண்மையை ஆராய்ந்தால், ஐயாயிரம் வருஷங்களுக்கு முந்திய சிந்துப்பிரதேசத்தின் நாகரிகத்திற்கு மேல்நாடு கீழ்நாடு என்ற வித்தியாசமே கிடையாது. எனவே, ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாயிற்று என்று துணிவது தவறு. ஸாஞ்சி விஷயத்தில் ஸர் ஜான் மார்ஷல் வெகு சாதுரியமாக வரைவது வருமாறு:—

“இப்பூர்வ இந்தியக் கலையில் வெளிநாட்டுத் தொழிலின் குறிகளைக் கண்டாலும் இவைகளை அவ்வளவு முக்கியமென்று நாம் கருதக்கூடாது. ஏனென்றால், இந்தியச் சிற்பிகள் மற்றவர்களைப் பார்த்துச் செய்யவில்லை. இந்தியக்கலை அடிமைக் கலை அல்ல. ஒவ்வொரு சித்திரசாலையாரும்மற்றவர்களுடைய நல்ல அம்சங்களை நோக்கிப் பயனடைவது இயல்புதான். இந்தியக் கலைஞரும் இவ்விதம் செய்யாமலிருக்கவில்லை...... ஸாஞ்சியில் காணும் கலை இந்தியாவின் சொந்தமானகலை. இது இந்தியர்களது மனத்திலும் பக்தியிலும் தோன்றி, அவர்களது மதக் கொள்கைகளையும் பிரகிருதிப் பற்றையும் விளக்குகிறது. இங்கே வெளி வேஷமும் “மூடு மந்திரமும்” இல்லாமல் பௌத்த மதத்தின் கதைகள் வெகு சாதாரணமாகவும் சுலபமாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால்தான் இவைகளின் உட்கருத்து நமக்கு நன்றாக விளங்குகிறது.”

ஸாஞ்சிக் குன்றுகளின் மீதுள்ள கட்டடங்களை நான்கு விதமாகப் பிரிக்கலாம். புத்தர் அல்லது பௌத்த சிரேஷ்டர்களின் ஞாபகார்த்தமாக அவரது அஸ்தியின்மீது கட்டப்பட்ட ஸ்தூபங்கள்; அசோகன் போன்ற அரசர்கள் நாட்டிய ஸ்தம்பங்கள்; பௌத்த பிக்ஷுக்கள்கூடி வழிபாடு செய்த சேதிய மண்டபங்கள்; கடைசியாக அவர்கள் வாசம் செய்த மடங்கள்.

ஸ்தூபங்களுள் எல்லாவற்றையும் விடப் பெரியதே மிகவும் அழகு பெறச் செய்யப்பட்டது. மத்தியிலுள்ள அர்த்தகோளக்கட்டடத்தைச்சுற்றிலும் இரண்டு பிரதக்ஷிணப் பாதைகளும் பாதையின் ஓரத்தில் கல்லில் செதுக்கிய கைப்பிடி வேலியும் இருக்கின்றன. முதல் பிரதக்ஷிணப் பாதையின் நான்கு விசித்திரமான உயர்ந்த வாயில்கள் (தோரணங்கள்) நுட்பமான சிற்பங்கள் நிறைந்தவை. இவைகளில் சத்தந்த ஜாதகம், மஹாகபிஜாதகம் முதலிய கதைகளும் ஸித்தார்த்தர் பிறப்பு நிகழ்ச்சிகளும், அசோக மஹாராஜனும் திஷ்யரக்ஷிதை ராணியும் போதி மரத்துக்கு வந்த காட்சியும் சிற்பிக்கப் பட்டிருக்கின்றன. வாயில்களின் கணக்கற்ற உருவங்களைச் செதுக்கியவர்கள் தங்கள் வேலையில் முதிர்ந்த அநுபவமுடையவர்கள். வெண்மையான கல்லின்மீது இவர்கள் செய்திருக்கும் மெல்லிய தொழிலை நோக்கினால், இவை தந்தத்தில் வெட்டப்பட்டவை என்று சந்தேகிப்போம். உண்மையாகவே ஒரு கல்வெட்டில் இச்சிற்பங்களை “பில்ஸாவின் தந்தச் சிற்பிகள்” செய்தனர் என்று பொறித்திருக்கிறது. இச்சிற்பங்களிலிருந்து அக்காலத்திய ஜனங்களுடைய நடையுடை பாவனைகளை உணரலாம். இச்சிற்பங்கள் சன்னியாசத்தைப் பெரிதாகக் கருதும் மதத்தைச் சேர்ந்திருந்தாலும் மானிட வாழ்வின் பெருமையையும், சிருங்காரச் சிறப்பையும் அறிந்தோ, அறியாமலோ நன்கு போற்றுகின்றன.

பெரிய ஸ்தூபத்தைப்போலவேயே, சற்றுச் சிறியதானமற்றொரு ஸ்தூபம் வடகிழக்கே இருக்கிறது. இதன் ஒரு விசேஷம் என்னவென்றால், ஜெனரல் கன்னிங்ஹாம் என்பவர் 75 வருஷங்களுக்கு முன் ஸ்தூபத்தின் மத்தியிலிருந்து இரண்டு கற்பெட்டிகளை எடுத்தார். ஒவ்வொன்றிலும் உயர்ந்த ஆபரணக் கற்களும் சில எலும்புத் துண்டுகளும் ஒரு ஸம்புடத்தில் மூடி வைக்கப்பட்டிருந்தன. வெளிப் பெட்டிகளின் மீது “ஸரிபுதஸ” என்றும், “மஹா மொகலானஸ” என்று கொத்தியிருந்ததனால் இவை ஸித்தார்த்தருடைய இரண்டு சீஷர்களான ஸரிபுத்ரர், மஹா மோககலானர் என்பவர்களுக்காக கட்டப்பட்டஸ்தூபங்கள் என்று கருதப்படுகிறது. ஆனால் இந்த ஸ்தூபத்திலும் அடுத்த சிறிய ஸ்தூபத்திலும் சாதுரியமான சிற்பங்கள் இல்லை.

ஸ்தூபங்கள் சிறப்புற்றிருந்த காலத்தை நாம் நினைப்போமானால், எத்தனை காட்சிகள் நமது கண்முன் தோன்றும்! அசோகன் போன்ற அரசர்கள் தங்கள் பரிவாரங்களுடன் ஸாஞ்சியின் மலைக்கு வருவர். ஸ்தூபங்களைப் பிரதக்ஷிணம் செய்து தரிசித்துவிட்டுச் சேதிகளையும் நோக்கிவிட்டுப் பிக்ஷுக்களின் விசாலமான மடங்களில் உபசரிக்கப்படுவர். பின்பு ஆலயங்களுக்கும் மடங்களுக்கும் வேண்டிய பொருள்களை அளித்துத் தங்கள் மானியத்தைக் கல்லில் வெட்டி வைக்க உத்தரவு அளிப்பர்.

அசோகனுடைய ஒரு சாஸனம் பெரிய ஸ்தூபத்தின் தென் வாயிலின் பக்கத்தில் நிற்கும் தூணின்மேல்பிராம்ஹி பாஷையில் வெட்டப்பட்டிருக்கிறது. இக்கல் வெட்டின் ஒரு பாகத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:—

“இவ்வழி சன்னியாசிகளுக்கும் சன்னியாசினிகளுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. என் புத்திரர்களும் பௌத்திரர்களும், சந்ததியாரும் சந்திர சூரியர்களும் உள்ளவரையில் எந்த சன்னியாசியாவது சன்னியாசினியாவது ஸங்கத்தில் பிரிவை உண்டாக்கினால், அவர்கள் வெள்ளையுடை அளிக்கப்பட்டுத்தனியே வாழக் கடவார்கள். என் இஷ்டம்தான் என்ன? ஸங்கம் ஒற்றுமையாக இருந்து நீடூழியாகஇருக்கவேண்டும் என்பது தானே?”

இதிலிருந்து அசோகன் ஸாஞ்சியின் பௌத்த ஸங்கத்தின்பேரில் கொண்டிருந்த அன்பும் காட்டிய ஆதரவும் எத்தகையவை என்று வெளியாகிறது. அசோகனது தூண் சுமார் ஏழாள் உயரமுள்ளது. இப்பெரிய பளுவை எப்படித்தான் இங்கு கொண்டு வந்து நாட்டினரோ தெரியவில்லை. இதன் வழவழப்பான தன்மை ஸாஞ்சிச் சிற்பிகளின் திறமைக்கு அத்தாட்சி ஆகிறது. ஆனால் தூணின் மேல்பாகம் உடைந்து கீழே கிடக்கின்றது. சில வருஷங்களுக்கு முன் ஒரு ஜமீன்தார் தன்னுடைய கரும்பு ஆலைக்கு இதன் கல்லை உபயோகிக்க முயன்றாராம்.

ஸாஞ்சியின் மற்ற கட்டடங்களுள் அநேக சேதிய மண்டபங்களும் மடங்களும் மொட்டையாகவும் உருவம் தெரியாமலும் நிற்கின்றன. இன்னும் அநேகம் பூமியில் புதைந்து கிடப்பதாக ஸர் ஜான் மார்ஷல் கூறுகிறார்.

G.கன்னய்யா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.

நெ. 37, பிராட் வே, மதராஸ்

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்

கண்ணேட்டம்-பிரமுகர்கள்

காலஞ்சென்ற ஸர் கே. ஸ்ரீனிவாஸய்யங்கார் மனைவி ஸ்ரீமதி பத்மாஸனி அம்மாள் சமீபத்தில் காலமானர்.



அண்ணமலை சர்வகலாசாலை மாணவிகள் ஹாஸ்டல் வார்டனாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ் மங்களம்.

தென்னிந்தியாவில் ஒரு பிரபல குடும்பத்தைச் சேர்ந்த 17-வயதுள்ள மிஸ் அண்ணுதுரை [illegible]மா படங்களில் நடிக்க [illegible]மன்வந்திருக்கிறார்.

தமிழ் அகராதி உதவி ஆசிரியர் ஸ்ரீமான் வி. நாராயணய்யரின் மனைவி ஸ்ரீமதி சாரதாம்பாள் சமீபத்தில் காலமானர்.

சென்னை கவர்ன்மெண்ட் பர்ஷியன் ஹிந்துஸ்தானி மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் முன்ஷி—ஏ-பஸில் க்வாஜா ஷா சையத் உசேன் சாகிப் பகதூர்.

நாகபுரி சர்வகலாசாலை லைப்ரேரியன் ஸ்ரீமான் ஏய். எம். முலே. லண்டன் சர்வகலாசாலையில் புத்தகசாலைகள் சம்பந்தமாகத் தேர்ச்சிபெறுவதற்காக இவருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மன்னர்பிரான் மகுடாபிஷேகத்திற்கு ஆஸ்திரேலியாவின் பிரதிநிதியாக இங்கிலாந்து செல்ல நியமிக்கப்பட்டிருக்கும் ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி மஹாகனம் ஜே. ஏ. லயான்ஸ்.



தென் ஆப்ரிக்கா பிரதம மந்திரி ஜெனரல ஹெர்ட்ஸாக். இவர் மன்னர்பிரான் மகுடாபிஷேகத்திற்குத் தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டின் பிரதிநிதியாகச் செல்லுவார்.

திருநெல்வேலிராஜன் பட்டணம் ஸ்ரீமான் துரைசாமி பிள்ளை சமீபத்தில் காலமானர். இவர் தென்னப்பிரிக்காவில் மகாத்மா காந்தியுடன் வேலை செய்தவர்.

ராஜா டி. மானே கம்பெனியின் சொந்தக்காரரான டாக்டர் ராஜா டி. மானேயின் குமாரி சௌ. தனலக்ஷ்மிக்கும் ஸ்ரீமான் சித்ராம் ராவுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



நெல்லூர் ஜில்லா போர்டு அங்கத்தினர் வி. வி. ராகவ ரெட்டி குமாரி ஸ்ரீமதி ராஜேஸ்வரிக்கும் ஸ்ரீமான் இ. வேணுகோபால் ரெட்டிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் ஏ. செல்லப்ப கவுண்டருக்கும் ஸ்ரீமதி நல்லம்மாளுக்கும் தளியில் (பொள்ளாச்சி) சமீபத்தில்

மிஸஸ் காதிஜா ஹாபி தயாப்ஜி பம்பாய அஞ்சுமான் இஸ்லாம் பெண் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்தார்.

இந்திய வர்த்தமானம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காம சாஸ்திரப் புஸ்தக வேட்டை

போலீஸார் லாகூரில் சர்க்காரால் தடுக்கப்பட்ட "ரீமஸே இஷாரத்" என்ற காம சாஸ்திர பிரதிகளைத் தேடுவதற்காக சென்ற 14-ந்தேதி நிஸ்ஸத் ரோடியுள்ள புத்தகக் கடை ஒன்றைச் சோதித்து 800 பிரதிகளைக் கைப்பற்றினர். அது சம்பந்தமாக ஒரு அச்சுக்கூடத்தையும் சோதித்துச் சில தஸ்தவேஜுகளை எடுத்துச் சென்றனர்.

———

2 மணியில் 105 பசுக்கள் விற்பனை

இந்தியா சட்டசபை மெம்பரான ஸ்ரீமான் எஸ். வி. காட்கில் சமீபத்தில் ஆமத்நகர் ஜில்லாவிலுள்ள கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் அங்குள்ள நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

மழையின்மையால் ஆமத்நகர் ஜில்லாவில் கால் நடைத் தீவனப் பஞ்சமேற்பட்டிருக்கிறது. விவசாயிகள், பால் வற்றிப்போன கால் நடைகளை வைத்து சம்ரக்ஷிக்க முடியவில்லை. இதனால் அவர்கள் கசாப்புக்கடைக்காரர்களுக்குத் தங்களது கால் நடைகளை விற்றுவருகிறார்கள். ராஷின் என்றவிடத்தில் கூடும் வாராந்திர மாட்டுச் சந்தையில் 2 மணி நேரத்திற்குள் 105 பசுக்கள் ஒரு ரூபாய் முதல் 4 ரூபாய் வரையிலுள்ள விலைக்கு விற்கப்பட்டதைக் கண்டேன்.

கொண்டு

மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறி கூலிவேலை

பஞ்சாப் சர்வகலாசாலையில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷயில் தேறிய ஸ்ரீமான் சாலிக்கிராம் என்பவர் ஸிம்லாவில் காளி கோயில் விஸ்தரிப்பு சம்பந்தமாக நடக்கும் கட்டட வேலையில் தினம் 6 அணாக் கூலிக்குச் சிற்றாளாக வேலைசெய்து வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

———

ஜீவகாருண்யக் கொலை

லாகூரில் சென்ற 14-ந்தேதி ஒரு ஜீவகாருண்யக் கொலை நடந்திருக்கிறது. ஐந்து வருஷங்களாக க்ஷயத்தினால் கஷ்டப்பட்டு வந்த 21-வயதுள்ள சரஸ்வதி என்ற பெண் நோய் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் தன்னைத் தனது கணவனே கொன்றால் தனக்கு மோக்ஷம் சித்திக்குமென்றும் இதனால் தன்னைக் கொன்றுவிடும்படியும் தனது கணவனை மன்றாடி வேண்டிக்கொண்டாளாம். அவள் தன்னை நல் உடைகளாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டு தனது மரணத்திற்குச் சித்தமானாளாம். அதன்மேல் அவளது துயரைப் போக்குவதற்காக அவளது கணவன் பட்டாக்கத்தியைக் கொண்டு அதிகாலையில் மூன்று துண்டமாக வெட்டினானாம்.

சரஸ்வதியின் கணவனது பெயர் லக்ஷ்மி நாராயணன் என்பதாகும். லக்ஷ்மீநாராயணன் ஜாங்கைச் சேர்ந்த பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தனது மாம

என்று தந்தி கொடுத்து விட்டுத் தாமாகவே போலீஸாரிடம் சென்று தம்மை ஒப்படைத்துக்கொண்டார்.

———

வேலையின்மையால் தற்கொலை முயற்சி

"பசி என்னை வாட்டுகிறது. வேலையோ ஒன்றும் அகப்படவில்லை. இக்கஷ்டத்தைச் சகிக்க என்னால் இயலவில்லை" என்று கூக்குரலிட்டுக்கொண்டு சென்ற 11-ந்தேதி ஒரு வாலிபன் லாகூர் ரெயில் பாலத்திலிருந்து கீழேபோய்க்கொண்டிருந்த பிரவாகத்தில் குதித்தான். இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த பொது மராமத்து இலாகா சௌகிதார் படகுகாரனைக் கூப்பிட்டு வாலிபனைக் காப்பாற்றிப் போலீஸில் ஒப்புவித்தார்.

சில தினங்களுக்குமுன் பரிதாபகரமான மற்றோர் சம்பவமும் நடைபெற்றது. லாகூர் நோக்கி வந்துகொண்டிருந்த ரயில்வண்டிக்கெதிரே ஒரு வேலையில்லாத யுவர் படுத்துக் கிடந்தார். என்ஜின் டிரைவர் வண்டியைநிறுத்தி வாலிபனைப் போலீஸில் ஒப்புவித்தார்.

———

அவுரங்கசீப் காலத்திய வெள்ளி நாணயங்கள்

வார்தா ஜில்லா அஜன்சார் தாசிலில் ஒரு வயலில் உழுது கொண்டிருந்த மூன்று ஹரிஜனத் தொழிலாளர்களுக்கு 759 வெள்ளி நாணயங்களைக் கொண்ட புதையல் கிடைத்திருக்கிறது. இவை நாதிர்ஷா, அவுரங்கசீப் காலத்தியவையாகவிருக்கின்றன.

கல்யாண கோஷ்டிக்கு நேர்ந்த விபத்து

மிர்வா (ஸிந்து) நதியை 12 பேரடங்கிய ஒரு கோஷ்டியார் கடந்து கொண்டிருந்தனர். இவர்கள் காயார்பூரில் நடக்கும் ஒரு விவாகத்துக்குப் போய்க்கொண்டிருந்தனர். மத்தியில் படகு கவிழ்ந்து போயிற்று. 7 பேர் உயிர் மீட்கப்பட்டனர். ஐந்து பேர் இறந்து போனார்கள்.

எதிர்கால சோதிடம்.

ஒரு வருஷத்திற்கு வாரப் பலன் எழுத ரூ. 4. மாதவாரி பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட் பிரகாசர் சோதிடாலயம். (சு) புதுச்சேரி.

வாரம் பூராவும் பரீட்சியுங்கள் !

இதைவிட 4 பங்கு விலைக்கு விற்கப்படும் பல வாட்சுகளுக்கிணையானது.

திருப்திக்கு உத்தரவாதம் அல்லது பூராப்பணமும் வாபீஸ்.

5 வருஷ உத்தரவாதம்

டாஸன் லீவர் ரிஸ்ட் வாட்சு



ஒன்றுக்கு ஆர்டர் செய்து பல வருஷ வாட்சுத் தொல்லையை ஒழியுங்கள்.

உயர்தர லீவர் ஓட்டம்.

சிறிய அளவு; அழகிய அமைப்பு சரியான மணிகாட்டுவது. ரிப்பேரில்லாது பல வருஷங்களுக்குழைக்கும்.

மிகக் குறைந்த விலைகள்:

பிரகாசமான நிக்கல் வெள்ளிக் கேஸ் ரூபா 6-4-0

கோல்ட் பிளேட் கேஸ் ரூபா 6-12-0

மேற்படி ரேடியம் டயலுடன் 8 அணா தனி.

பாக்கிங் & தபால் செலவு 4 அணா தனி.

சோல் ஏஜண்டுகள் :

THE UNION TRADING Co.,
2, Loyehatta St, (D/1) Calcutta

BOERICKE&TAFEL'S

அசல் ஹோமியோபதிக் டைல்யூஷன் மருந்துகள் (உபயோகமற்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) டிஞ்சூர் நிவாரணிகளும்-½ அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் டிரைசுரேஷன்ஸ் & மாத்திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

YINGLING'S ACCOUCHEUR'S EMERGENCY MANUAL PRICE Rs 4/-

SETT DEY &

இந்திய மக்களுக்கு இந்திய தேயிலை பானம்

தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. ஜாதிமத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக் கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கீடான பானம் வேறெதுவுமில்லையென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.

எங்கள் சித்திர விளம்பர புத்தகம்.

தேயிலை பானத்திலிருந்து பூரண சுகத்தை அனுபவிக்க வேண்டுமானால் அதை பக்குவமாக சரியான முறையில் செய்யவேண்டும் எப்படி என்றறிய விரும்பினால் சரியான முறையில் தேயிலை பானம் செய்ய நீங்கள் சுளுவாய் கற்றுக்கொள்ளக்கூடிய தேயிலை பானம் செய்வதெப்படி என்னும் சித்ர விளம்பர புஸ்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

இந்த விளம்பரத்தை கத்தரித்து உங்கள் பெயர், விலாஸம், தொழில் முதலியவைகளை குறிப்பிட்டு, இந்திய கமிஷனர், இந்தியன் 'டீ' மஸஸ் கமிட்டி தபால் பெட்டி 2172, கல்கத்தா என்று எழுதி அனுப்பினால் இலவசமாக ஒரு காப்பி அனுப்பப்படும்.

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்றுமில்லை. உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத்தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.

உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை

IK 35 I.

Regd No. 2514

கீர்த்திபெற்ற தீர்க்க தரிசிகளின்

சரித்திரக்கொத்து.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயராயிருந்த கிர்த்தனசார்ய

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ., எழுதியது

கீழ்க்கண்ட ஏழு மத ஸ்தாபகர்களின் திவ்ய சரித்திரங்கள் வெளியாயிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்கள்.

1. ஸ்ரீ சங்கரர்
2. ஸ்ரீ ராமாநுஜர்
3. ஸ்ரீ மத்வர்
4. ஸ்ரீ குருநானக்
5. ஸ்ரீ மகாவீரர்
6. ஸ்ரீ கௌதமபுத்தர்
7. மகமத் நபி

ஒவ்வொரு புத்தகத்தின் விலை அணு 5

7 புத்தகங்களும் ஒரே புத்தகமாக காலிகோ கிலிட் பைண்டுள்ளது. விலை ரூபா 2-8.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோட் - - மதராஸ்.

Printed and Published by S. Visvanatha Iyer B. A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras—Editor C. R. Srinivasan